# ஆரம்பக்கல்வி



ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 25 ந. பை.

| மலர் 30 | ஆகஸ்டு 1966 | இதழ் 8 |
|---|---|---|


# அனைவர்க்கும் உரிய அறிவுரைக் கொத்து

"சமூகத் துறையிலும் பொருளியல் துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் மாறுதலைத் தோற்றுவிக்கப் பயன்படும் கருவியே கல்வி. நாம் சமூக ஒருமைப்பாட்டுக்கும் நாட்டின் ஒருமைப் பாட்டுக்கும் பாடுபட வேண்டுமானல், அறநெறிகளையும் ஆத்மீகப் பண்புகளையும் வளர்க்கவேண்டுமானல், தொழில் துறையிலும் வேளாண்மைத் துறையிலும், உற்பத்தித் திறனைப் பெருக்க வேண்டுமானல், கல்வியை நாம் தகுந்தமுறையில் பயன்படுத்தியாகவேண்டும். பட்டினி, வறுமை, நோய், எழுத்தறிவின்மை, மூடநம்பிக்கை, பொருளற்ற பழக்க வழக்கங்கள், வீணாகிவரும் வசதிகள் ஆகியவை பற்றிய பிரச்சினைகளையும், ஏழைமக்கள் வாழும் வளம்மிக்க நாடாகிய இந்தியாவின் பிற

**பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு அறிவியற் கல்வியும் தொழில் நுட்ப அறிவும் பெருந்துணை புரிய வல்லன.''**

எழிலும் ஏற்றமும் மிக்க இந்தக் கருத்துரையைப் பயனும் சுவையும மிகுந்த முறையிலும் எடுத்துக் கூறியிருப்பவர், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற அறிஞர்களில் ஒருவர்; இந்தியத் துணைக் கண்டத்தின் தலை சிறந்த தத்துவஞானி; தென்னகம் அளித்த பொன்மணி எனப்பாராட்டப்படத்தக்கவர்; உலகெலாம் புகழப் படும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி பெரும் புகழை ஈட்டியிருப்பவர்; சென்ற சில ஆண்டுகளாக இந்தியக் குடியரசின் தலைவர் என்னும் பொறுப்பும் சிறப்பும் மிகுந்த பதவியை அனைவரும் போற்றிப் புகழத்தக்க முறையில் அலங்கரித்து வருபவர். ஆம்! தத்துவத் துறை வல்லுநர் **டாக்டர் இராதாகிருஷ்ணன்** அவர்கள்தான் இந்த அழகிய கருத்துரையை அளித்திருப்பவர்.

ஆகஸ்டுத் திங்கள் 14ஆம் நாளோடு, இந்தியப் பெருநாடு விடுதலைப் புதுவாழ்வு எய்திப் பத்தொன்பது ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. அடுத்த நாளிலிருந்து, விடுதலைபெற்ற இந்தியாவின் இருபதாம்ஆண்டு தொடங்குகிறது. இந்தப்பத்தொன்பதாம் ஆண்டுநிறைவு விழாவையும் இருபதாம் ஆண்டுத்தொடக்க விழாவையும் முன்னிட்டு ஆகஸ்டு 14ஆம் நாளன்று இரவு, அனைத்திந்திய வானொலியின் வாயிலாக டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் அரியதோர் உரையை நிகழ்த்தியுள்ளார்கள். நம்மால் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள கருத்துரை, அந்தச் சொற்பொழிவின் ஒரு பகுதியே ஆகும்.

இந்திய நாட்டினுடைய எதிர்காலம் சீரும் சிறப்பும் மிகுந்ததாக இருக்கவேண்டுமானால், இந்த நாட்டில் உள்ள கோடிக்கணக்கான மக்களுடைய வாழ்க்கை வளமும் தெளிவும் நிறைந்து ததும்பும் புன்னகைப் பூந்தோட்டமாக ஒளி வீசித் திகழவேண்டுமானால், நம் நாட்டு மக்களின் குடும்பங்களை வாட்டி வதைக்கும் வறுமையும் பிணியும் பசியும் பட்டினியும் அடியோடு அகற்றப்பட வேண்டுமானால், தொழில் துறையிலும் விவசாயத் துறையிலும் பொருள் உற்பத்தி பல மடங்காகப் பெருகி, பண்டங்களின் பற்றாக்குறை அகல வேண்டுமானால், கல்வி என்கிற மாபெருங் கருவியை ஆற்றல் மிக்க முறையில் நாம் பயன்படுத்தியாக வேண்டும் என்கிற பேருண்மையை, டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள், அழுத்தந்திருத்தமாகவும் தெள்ளத் தெளிவாகவும் எடுத்துக் கூறியுள்ளார்கள். அறிவியற் கல்வியையும் தொழில் நுட்பக் கல்வியையும் நாம் எந்த அளவுக்கு எந்த வகையில் கையாள்கிறோமோ அதைப் பொறுத்துத்தான்

இந்த நாட்டின் எண்ணற்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழி அமைந்திருக்கிறது.

அமெரிக்காவோ, ரஷ்யாவோ, பிரிட்டனோ, ஜெர்மனியோ தொழில்துறை வளர்ச்சியிலும் பொருளியல் முன்னேற்றத்திலும் இன்றைய தினம் தலைசிறந்த இடத்தைப் பெற்றுள்ளன என்றால், அப்படிப் பெற்றிருப்பதற்கான முதற்பெருங் காரணம், அங்கெல்லாம் ஏற்பட்டுள்ள கல்வித் துறை வளர்ச்சிதான்.

இந்தியாவில் ஆள் ஒன்றிற்கு ஆண்டு ஒன்றிற்குக் கிடைக்கிற சராசரி வருமானம், 59 டாலருக்குச் சமமாகும். ஆனால் நியூசிலாந்திலோ, சராசரி தலாவருமானம், 856 டாலராக இருக்கிறது. கனடாவிலோ அந்த வருமானம், 870 டாலராக இருக்கிறது. அமெரிக்க நாட்டிலோ அந்த வருமானம் 1453 டாலராக இருக்கிறது. ஆம் ஒரு சராசரி அமெரிக்கக் குடிமகன் ஆண்டு ஒன்றிற்கு 1453 டாலரைச் சம்பாதிக்க முடிகிறது; ஆனால் ஒரு சராசரி இந்தியக் குடிமகன் 59 டாலரைத்தான் ஈட்டமுடிகிறது. இதே உண்மையை வேறு சொற்களில் கூறுவதானால், சராசரி இந்தியன் ஒருவன் பெறுகிற வருமானத்தை விடச் சராசரி அமெரிக்கன் ஒருவன் பெறுகிற வருமானம் இருபத்தி நான்கு மடங்கு கூடுதலாக இருக்கிறது. இந்த உண்மையை இன்னொரு முறையில் கூறுவதானால், ஒரு சராசரி இந்தியன் அனுபவிக்கிற வாழ்க்கைத் தரம், ஒரு சராசரி அமெரிக்கன் அனுபவிக்கிற வாழ்க்கைத் தரத்தைவிட இருபத்தி நான்கு மடங்கு குறைவாக இருக்கிறது என்று கூறலாம்.

அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் இத்தாலி, பெல்ஜியம், டென்மார்க் முதலிய மேல் நாடுகள் இவ்வளவு மேலான நிலையில் இருப்பதற்கு எத்தனையோ காரணங்களை நாம் அடுக்கடுக்காக எடுத்துக் கூற முடியும். ஆனால் அந்தக் காரணங்கள் அத்தனையையும் ஒன்றாகத் திரட்டி ஓரே தலைப்பின் கீழ் வைத்தால், அந்தத் தலைப்பு, கல்வியின் வளர்ச்சி என்பதாகத்தான் இருக்கமுடியும். அந்த நாடுகளில் எல்லாம் கல்வி ஓங்கி உயர்ந்து ஒளி வீசித் திகழ்கிறது; ஆகவேதான் அந்த நாடுகள் பொருளியல் துறையில் பொன்னான நிலையை எய்தி பொன்றாப் புகழை அடைந்துள்ளன. நம்முடைய தாயகமோ கல்வித் துறையில் மிகவும் பின் தங்கிய நிலையில் வாடிக்கிடக்கிறது. ஆகவேதான் நம் நாடு, பொருளியல் வளர்ச்சியை போதிய அளவில் பெறமுடியாமல், வறுமைக் கொடுமையை வெட்டி வீழ்த்த முடியாமல், பசியையும் பணியையும் அடியோடு அகற்ற முடியாமல் தொல்லையிலும் துயரத்திலும் சிக்கித் தவிக்கிறது.

**"உணவுத் தானியத் துறையில் இன்னும் ஒரு சில ஆண்டுகளுக்குள் இந்தியா தன்னிறைவு நிலையை அடைந்தாக வேண்டும். அப்படி அடைவதற்கு ஏற்ற முறையில் நிலைமையைச் சீராக்கும் பொருட்டு நாட்டு மக்கள் அனைவரும் முழு மூச்சுடன் பாடுபட வேண்டும். விவசாய முன்னேற்றம்தான் நம்முடைய முதற் பெரும் பணியாக இருக்கவேண்டும்"**

*டாக்டர் அவர்களின் பேருரையிற் காணப்படுகிற மற்றோர் இன்றியமையாத கருத்து இது. இந்தக் கருத்தை எத்தனை முறை எடுத்துக் கூறினாலும் பொருந்தும்; எவ்வளவு வன்மையாக வற்புறத் கூறினாலும் தகும்; அவ்வளவு அடிப்படையான—அவ்வளவு அவசியமான கருத்து இது. இந்தியத் திருநாட்டின் பொருளியல் வளர்ச்சிக்காக எத்தனையோ வகையான திட்டங்கள் தீட்டப்படலாம்; எத்தனையோ வகையான ஏற்பாடுகள் செய்யப்படலாம். ஆனால் அவை அத்தனையிலும் தலையாய இடம் பயிர்த் தொழில் வளர்ச்சிக்கே தரப்படவேண்டும். தரப்பட்டால்தான், இந்தியாவின் உணவுச் சிக்கல் மட்டுமல்ல, ஏனைய சிக்கல்கள் யாவுமே தீர்க்கப்பட முடியும்.*

*கடந்த மூவாயிரம்ஆண்டுகளாகவும் அதற்குமேலாகவும் உழவுத் தொழிலையே தன் தலையாய தொழிலாகக் கொண்டுள்ள நாடு, இந்தியா. இன்றைய தினமும் தன் மக்களில் நூற்றுக்கு எண்பது பேரை உழவுத் தொழிலிலேயே ஈடுபடுத்தியுள்ள நாடு, இந்தியா. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம் தொழுதுண்டுபின் செல்பவர்" என்னும் பொன்மொழியை உலகுக்கு அளித்த தமிழகத்தைப்பெற்றுள்ள நாடு, இந்தியா. ஏறத்தாழ ஐந்து இலட்சம் கிராமங்களைத் தன்னகத்தேபெற்றுப்பொலிவுஎய்தியுள்ளநாடுஇந்தியா. உழவுத் தொழிலுக்குத் தேவையான உழைப்புச் சக்தியை அளிக்கும் மாடுகளை உயர்ந்த செல்வங்களாக மட்டுமல்ல, ஆண்டவன் உறையும் இல்லங்களாக மதித்து வணங்கி வழிபடும் இயல்புடைய நாடு, இந்தியா. பயிர்களை விளைவிக்கும் நிலம் எனும் நல்லாளை, அன்பிற் சிறந்த அன்னையாகக் கருதிமகிழ்ந்து போற்றும் மாண்புடைய நாடு, இந்தியா. இப்படிப்பட்ட ஒரு விவசாய நாடு, தன்னுடைய மக்களுக்குத் தேதவப்படும் உணவுப் பொருளுக்காக அமெரிக்கா முதலிய தொழில்துறை நாடுகளை நம்பியிருக்க வேண்டிய நிலை சென்ற சில ஆண்டுகளாக ஏற்பட்டுவிட்டது. வெட்கத்தையும் துக்கத்தையும் அளிக்கத்தக்க நிலை இது. ஆனால் இத்தகைய நிலையில் தான் இந்தியா இப்போது இருந்து வருகிறது. இனியும் தொடர்ந்து இருக்கலாமா இந்த இழி நிலை? இருக்க விடலாமா நாம்? கூடாது என்றுதான் எவரும் கூறுவர். கூறிவிட்டால் போதுமா? சர்க்கரை என்று ஏட்டில் எழுதிவிட்டால் அந்த ஏடு இனித்துவிடுமா அல்லது*

சர்க்கரை தான் கிடைத்துவிடுமா? தேவையான திட்டங்களைத் தீட்டி, போதுமான ஆர்வத்தைக் காட்டி, சோர்வையும் சோம்பலையும் ஓட்டி, தக்க முறையில் உழைத்தால், இழிநிலை மாறும்; உயர்நிலை பிறக்கும்; உணவுத் துறையில் தன்னிறைவு கிடைக்கும்.

குமுறி வெடிக்கும் எரிமலைகளும் திடீர் திடீரென்று தோன்றும் நில நடுக்கங்களும் நிறைந்த சின்னஞ்சிறு தீவுகளைக் கொண்ட ஒரு நாடு, ஜப்பான். அத்தகைய வளமற்ற நாட்டில் ஏக்கர் ஒன்றிற்கு விளைந்து எடுக்கப்படுகிற நெல்லின் அளவு, நம்முடைய நாட்டில் ஏக்கர் ஒன்றிற்குக் கிடைக்கிற சராசரி மகசூலைவிட நான்கு மடங்கு அதிகம் என்று புள்ளி விவரங்கள் பேசுகின்றன. இயற்கை வளமற்ற ஒரு நாடு இவ்வளவு உணவுப் பொருளை உற்பத்தி செய்ய முடியுமானால், அன்னையாம் இயற்கையின் அருளை முழு அளவில் பெற்றுப் பழமுதிர் சோலைபோல பூத்துக் குலுங்கும் இந்த நாடு ஏன் அந்த அளவு உற்பத்தி செய்ய முடியாது? தேவையான முயற்சிகள் நியாயமான முறையில் மேற்கொள்ளப்பட்டால் உணவு உற்பத்தியை நாம் குறைந்தது இரண்டு மடங்காகப் பெருக்க முடியும். உணவுப் பொருள் உற்பத்தியில் வெறும் தன்னிறைவு நிலையை மட்டுமல்ல, நம்முடைய தேவைக்கு மீறிய அளவில் உணவை உற்பத்தி செய்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிற பெருநிலையைக் கூட நாம் அடைய முடியும். இதைத்தான் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் அழகிய முறையில் சுட்டிக் காட்டியுள்ளார்கள். இந்த நாட்டின் அரசாங்கங்கள் மட்டுமல்ல, அரசியல் கட்சிகளும் பொது நல நிறுவனங்களும் மக்கட் சமுதாயமும் இத்துறையில் முழு ஆர்வத்துடன் ஈடுபட்டு வெற்றிகளைக் குவித்தாக வேண்டும்.

**“செயலற்ற தன்மையாலும் திறமையின்மையாலும் நம்முடைய பொருளியல் வளர்ச்சித் திட்டங்கள் தடைபட்டு வருகின்றன. இந் நிலையிலிருந்து நாம் விடுபட வேண்டும். நம் அரசாங்க நிர்வாகம் அதன் எல்லாக் கட்டங்களிலும் தூய்மையும் திறமையும் உள்ளதாக ஆகவேண்டும்.”**

டாக்டர் அவர்கள் தந்துள்ள மற்றோர் அறிவுரை இது. இன்றைய இந்தியாவின் சமுதாய நிலையைக் கூர்ந்து நோக்கும் எவரும் இந்த அறிவுரையின் உட்கருத்தை முற்ற முடிய ஏற்றுக்கொள்வர். இதிலும் துளியும் ஐயம் இல்லை.

அரசாங்க நிர்வாக இயந்திரத்தின் சில பகுதிகள் போதிய திறமையுடன் பணிபுரிகின்றன என்பது உண்மையே. ஆனால் அதன் பெரும்பாலான பகுதிகள், டாக்டர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப் போல், செயலற்ற நிலையில்தான் சோம்பிக் கிடக்கின்

றன. தேவையான பணிகளைத் தேவையான நேரத்தில் தேவையான வேகத்தில் செய்து முடிக்காமல், எதையோ ஒன்றை, ஏதோ ஒரு வகையில் என்றாவது ஒரு நாள் செய்தால் போதும் என்பது போன்ற ஒரு "தூங்கி வழியும் நிலைமை" அரசாங்க அலுவலகங்கள் பலவற்றில் காணப்படுகின்றன. இந்தியாவின் இன்றைய துயரங்கள் பலவற்றிற்கு உரிய பல காரணங்களில் இது ஒரு முக்கியமான காரணமாகும். இந்திய நாடு விரைந்து முன்னேற வேண்டுமானால் இந்த நாட்டு நிர்வாக அமைப்பில் ஒரு புதிய வேகமும் விறுவிறுப்பும் ஏற்பட்டாக வேண்டும்; செயல்களை விரைந்து முடிக்க வேண்டும் என்கிற சுறுசுறுப்பும் ஆர்வமும் நிர்வாகம் முழுதும் பொங்கிப் பெருகிப் பரவ வேண்டும். ஊழல், இலஞ்சம், தாமதம், வேண்டியவர்கட்கு மட்டும் சலுகை அளிக்கும் போக்கு ஆகிய தீய சக்திகள் அடியோடு அகற்றப் படவேண்டும். இன்றைய ஆட்சி, மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்களுடைய ஆட்சி என்கிற கருத்து ஒவ்வொரு விநாடியிலும் நிர்வாக அதிகார வர்க்கத்தினரால் நெஞ்சில் நிறுத்தப் பட வேண்டும்.

"பிறர் தன்னுடைய கருத்துக்கு மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்கும்போதும், தன்னுடைய குற்றங் குறைகளை எடுத்துக்கூறும் போதும், எந்த ஓர் அரசாங்கம் சகிப்புத் தன்மை காட்டுகிறதோ, அந்த அரசாங்கம் மட்டுமே உலகத்தின் தற்போதைய சூழ்நிலையில் உயிர் வாழ முடியும். எல்லோரும் ஒரே வகையான கொள்கையைத்தான் கொண்டிருக்க வேண்டும் என்று வற்புறுத்துகிற அரசாங்கங்கள் சிறிது காலத்திற்கு, வேண்டுமானால் உயிர் வாழ முடியும்; ஆனால் நீண்ட நெடுங் காலம் நிலைத்து வாழ முடியாது."

டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களுடைய பேருரையின் இதய நாடி போன்ற பகுதி இது.

இந்த நாட்டில் உள்ள அமைச்சர்கள் அத்தனைப்பேரும், பாராளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனைப்பேரும், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் இந்தக் கருத்துரையை மீண்டும் படித்து, என்றென்றும் மறக்க முடியாத நிலையில் தங்கள் இதய ஏட்டில் பொறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

தங்கள் கருத்துகட்கு மாறுபட்ட கருத்துக்களை யாரேனும் தெரிவித்தால், அப்படித் தெரிவிப்பவர்கள் எத்தகைய அறிவும் ஆற்றலும் படைத்தவர்களாக இருந்தபோதிலும், அக்கருத்துக்களை ஒதுக்கித் தள்ளும் போக்கு, சென்ற சில ஆண்டுகளாக இந்த நாட்டு அமைச்சர்கள் பலரிடம், வேரூன்றி ஒரு நோய் போலப் பரவி வந்திருக்கிறது. இந்தப் போக்குக்கு உடனடியாக ஒரு முற்றுப் புள்ளி

வைக்கப்பட வேண்டியது எத்துணை இன்றியமையாதது என்பதைத் தான் டாக்டர் அவர்களின் இந்த வாக்கியங்கள் அழுத்தமான முறையில் எடுத்துக்காட்டுகின்றன.

ஒரு நாட்டில் ஜனநாயக மணம் கமழ வேண்டுமானால், ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட பல்வேறு வகையான கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதும், அவை மக்கள் மன்றத்தால் அலசி ஆராயப்படுவதும், அவற்றில் எந்தக் கருத்து மக்கள் சமுதாயத்திற்கு ஏற்புடையதாகத் தெரிகிறதோ அதனை அவர்கள் ஏற்றுக்கொள்வதும் தங்குதடையின்றி அனுமதிக்கப்பட்டாக வேண்டும். அவ்வாறு இன்றி, ஆளும் கட்சியின் கருத்துக்கு மாறுபட்ட கருத்துக்களை எவரும் தெரிவித்தல் கூடாது என்கிற மனப்போக்கும், அப்படித் தெரிவிக்கப்பட்டாலும் அவற்றை மிகத் துச்சமாக எண்ணி ஒதுக்கித்தள்ள வேண்டும் என்கிற ஆதிக்க உணர்வும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளவர்களிடம் உண்டாகிவிடுமானால், ஜனநாயக உணர்வு அழிந்துவிடும்; சர்வாதிகார நஞ்சு நாட்டின்நாடிநரம்புகளில்நுழைந்து விடும். பல்வேறு பட்ட கருத்துக்கள் மலர்ந்து மணம் வீசுவது தான், ஜனநாயக சமுதாயத்தின் சிறப்பியல்பு ஆகும். இந்தச் சிறப்பான இயல்பைக் கொடுக்கக்கூடிய எதனையும் ஒரு ஜனநாயக நாட்டில் வாழும் எவரும் செய்தல் ஆகாது. எனவேதான் டாக்டர் அவர்கள் இந்தக் கருத்தை இவ்வளவு திட்டவட்டமாக வற்புறுத்தியுள்ளார்கள்.

இங்கே இதுவரை எடுத்துக்காட்டப்பட்ட அரிய கருத்துக்களையும் இவைபோன்ற வேறு பல உயர்ந்த கருத்துக்களையும் தன்னகத்தே கொண்ட ஓர் அறிவுரைக் கொத்தாகத் திகழ்கிறது, டாக்டர் அவர்களின் வானொலிச் சொற்பொழிவு.

இந்தியப் பெருநாட்டின் அமைச்சர்கள், பாராளுமன்ற—சட்ட மன்ற உறுப்பினர்கள், நகராட்சி மன்ற—ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள்—பேச்சாளர்கள்—எழுத்தாளர்கள்—தொண்டர்கள், அரசாங்க அதிகாரிகள், வணிகர்கள், பத்திரிகையாசிரியர்கள், உழவர்கள் ஆகிய அனைவராலும் கவனிக்கப்பட வேண்டிய அரியதொரு கருத்துக் களஞ்சியம்—சிந்தனைச் சுரங்கம்—அபாய அறிகுறி—எச்சரிக்கை வெண்பா டாக்டர் அவர்களின் பேருரை. இது உண்மை; வெறும் புகழ்ச்சி அன்று.

# சென்னையில் அக்காலப் பள்ளிகள்

— ராமுடு —

சென்னை நகரத்தில் முதன் முதலாக பள்ளிக்கூடம் ஒன்றை அமைத்தவர் எஃப்ரெய்ம் என்ற பிரெஞ்சு பாதிரியாரே ஆவார்; பல போர்த்துகீசிய மாணவர்களைக் கொண்டு தம்முடைய வீட்டிலேயே அவர் அமைத்த அப்பள்ளியில் இதர ஐரோப்பிய மாணவர்களும் நாளடைவில் சேர்ந்துகொண்டார்கள். பிற்பகுதியில் எஃப்ரெய்ம் எழுப்பிய பள்ளி, அரண்மனைக்காரத் தெருவில் அமைந்த ரோமானியக் கத்தோலிக்கர் கதீட்ரலைச் சேர்ந்த இடத்துக்கு மாறியது. ஸெயிண்ட் பேட்ரிக் சகோதரர்கள் என்று, சமூக சேவையில் ஈடுபட்டு உழைத்த இரு பிரமுகர்கள் இதே பள்ளியைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அடையாற்றுத் தென் கரை-எல்பின்ஸ்டன் பார்க்குக்குள் அமைத்துக் கொண்டார்கள்.

ஆரம்ப காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியார் கல்வித் துறையில், சீரிய பணியாற்ற முனையவில்லை. அப்போது அவர்களுக்கு இருந்த உள்நாட்டுப் போர்கள், குழப்ப நிலை காரணமாகவே அவர்கள் கல்வித்துறையில் போதிய கவனம் செலுத்தவில்லை. ஆக, ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் வரை ஐரோப்பியக் குழந்தைகளின் கல்விப் பொறுப்பை எஃப்ரெய்ம் பாதிரியாரே ஏற்று வந்தார்.

## பேட்ரிக் வார்னர்

பிறகு இங்கிலாந்து அரசாங்கம் இவ்விஷயத்தில் தலையிடலாயிற்று. இதற்குக் காரணமாயிருந்தவர் பேட்ரிக் வார்னர் என்பவராவார். சென்னையில் குழந்தைகளெல்லாம் கல்வி கற்க முடியாமல் சங்கடப்படுவது குறித்து அவர் இங்கிலாந்து அரசாங்கத்துக்கு ஒரு விவரமான கடிதத்தை எழுதியனுப்பினார். அதன் விளைவாக இங்கிலாந்திலிருந்து ரால்ப் ஆர்டே என்பவர் சென்னை வந்து, கல்வித் துறையில் கவனம் செலுத்தத் தொடங்கினார். அவரே ஒரு பள்ளியை ஏற்படுத்தி, தாமே ஆசிரியராகவும் அரும்பணியாற்றினார். வருடம் ஒன்றுக்கு அதற்காக அவருக்கு ஐம்பது சவரன் சம்பளம் என்றும் நிர்ணயித்தார்கள், சிறிது காலச் சேவைக்குப் பின் ஆர்டே சுமத்ரா தீவுக்குப் பணியாற்றச் சென்றுவிட்டார்.

சில ஆண்டுகள் சென்ற பின் இதே பள்ளி சென்னை செயிண்ட

ஜார்ஜ் கோட்டையிலுள்ள செயிண்ட் மேரி சர்ச் ஸ்தாபனத்தின் நிர்வாகப் பொறுப்பில் வளர்ந்து, 1715-ல் மத போதனையும் இதில்கலந்து, "செயிண்ட் மேரீஸ் சர்ச் சேரிட்டி ஸ்கூல்" என்று வழங்கப்படலாயிற்று.

1790-ல் ஜான் ஹோம்ஸ் என்டவர் "மெட்ராஸ் அகாடமி" எனும் பெயரில் ஒரு பள்ளியைத் தம் தனிப் பொறுப்பில் துவக்கினார். அதுவே சென்னையில் தோன்றிய முதலாம் தனியார் பள்ளியாகும். அவர் ஆரம்பித்த பள்ளியில் ஆண்கள், பெண்கள் இருவரும் சேர்ந்து படிக்க அனுமதிக்கப்பட்டனர்.

## சென்னையில் தோன்றிய முதல் பெண் பள்ளி

பெண்களுக்காக சென்னையில் முதன் முதலில் ஒரு தனிப் பள்ளியை உருவாக்கிய பெருமை மிஸஸ் முர்ரே எனும் சீமாட்டியையே சாரும். 1791-ல் தோன்றிய அப்பள்ளியில் இசை, நாடகம் போன்றவையும் பெண்களுக்குக் கற்றுத்தரப்பட்டன. இவ்விதமாக முர்ரே சீமாட்டியின் முயற்சி நல்ல பயனை விளைவித்தது.

கி. பி. 1800லிருந்து சென்னையில் கல்வித் துறை பற்பல முன்னேற்றங்களைக் காணலாயிற்று. வில்லியம் பெண்டிங்க் பிரபு கவர்னர் ஜெனரலானது முதல் கல்வியில் கணிச முன்னேற்றம் ஏற்பட்டது. 1835 ல் சென்னையில் வைத்தியக் கல்லூரி பிறந்தது. கல்வி முன்னேற்றத்திற்கு உகந்த உதாரணமாக வைத்தியக் கல்லூரி விளங்கிற்று. 1835ல் ஆங்கில மொழி பயில்வோருக்கு அரசாங்கப் பதவிகள் வழங்கப்படும் என்று கவர்னர் ஜெனரல் அறிவித்ததும் மக்கள் அனைவரும் ஆங்கிலம்கற்க முனைந்தார்கள். பள்ளிகள் ஏராளமாக பெருகின.

## இன்றைய பிரபல கல்லூரிகள்

ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த பாதிரியார் பூஜ்யர் ஜான் ஆண்டர்ஸன் என்பவரால் 1837ல் சென்னையில் கிறிஸ்துவக் கல்லூரி தொடங்கியது. 1841ல் ராஜதானிக் கல்லூரி எழும்பூரில் ஒரு வாடகை மனையில் அமையலாயிற்று. அதுவே பிறகு, அரசினரால் நடத்தப்பட முடிவாகி "ராஜதானிக் கல்லூரி" என்ற பெயருடன் எடின்பரோ கோமகனால் 1870ல் திருவல்லிக் கேணியில் விஸ்தரித்து அமைக்கப்படலாயிற்று.

1842ல் பள்ளிக்கூடமாகப் பிறந்த பச்சையப்பன் கல்லூரி நாளடைவில் காலேஜாக மாறியது. 1850ல் அதன் கட்டடத்தைச் சென்னையில் கவர்னராயிருந்த சர். ஹென்றி போடிங்கர் திறந்து வைத்தார். இன்று வள்ளல் பச்சையப்ப முதலியாரின் பெயரிலுள்ள அக்கல்லூரி அவரது செல்வத்தாலேயே எழுப்பப்பட்டதாகும். 1842 ல் அயர்லாந்திலிருந்து, சில மத குருமார்கள் சென்னைக்கு வந்ததன் விளைவாக

# நான் சர்வாதிகாரி ஆனால்...

— ஜகந்நாதன் —

1946-ஆம் ஆண்டு மகாத்மா காந்தியை சில அயல்நாட்டு நிருபர்கள் பேட்டி கண்டார்கள். அப்போது ஒருவர் "உங்களை இந்தியாவின் சர்வாதிகாரியாக ஒரு நாளைக்கு மட்டும் நியமித்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார்.

"முதலாவதாக நான் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன். ஏற்றுக் கொள்வதாகவே வைத்துக் கொண்டாலும் என்ன செய்வேன் தெரியுமா? டில்லியில் நரக வாழ்வு வாழும் ஹரிஜனங்கள் சுகாதார வசதிகளுடன் சுகமாக வாழ, வைசிராய் மாளிகையிலுள்ள குதிரை லாயத்தைக் காலி செய்து கொடுப்பேன். மனிதர்களுக்குக் கிடைக்கும் வசதிகளைவிடப் பன் மடங்கு அதிகமான வசதிகளை அங்குள்ள குதிரைகள் அனுபவித்து வாழ்கின்றன என்பதை நாம் உணர வேண்டும். ராஜபோகங்கள் நிறைந்த வைசிராயின் மாளிகைக்கு அருகிலேயே, தரித்திரமும் அசுத்தமும் நிறைந்த எலிவளைகளைப் போன்ற குடிசைகளில் ஹரிஜனங்கள் வசிப்பது அவமானத்துக்குரிய விஷயமாகும். ஆகவே இவ்வளவு பெரிய குடியிருப்பு எனக்கு (சர்வாதிகாரிக்கு) வேண்டாம் என்று தீர்மானித்து, அதை ஓர் ஆஸ்பத்திரியாக மாற்றி விடுவேன். தென் ஆபிரிக்காவில் ஜனாதிபதி க்ரூகர் மிகவும் சிறியதோர் வீட்டில் தான் வசித்துக்கொண்டிருந்தார். அது எனக்கு மிகவும்

---

வேப்பேரியிலும், வேறு சில இடங்களிலும் கான்வென்ட் பள்ளிகள் தோன்றலாயின.

## ஆசிரியக் கல்லூரி

1856ல் அரசினர் பள்ளியாக உருவெடுத்த கல்லூரி தான் இன்று சைதாப்பேட்டையிலுள்ள 'ஆசிரியர் கல்லூரி'யாகும்.

கி. பி. 1857ல் சென்னை சர்வகலாசாலையும் அதற்கு முதல் ஆண்டு ஹாரிஸ் பள்ளியும், பின்னர் திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலும், ஆங்கிலோ இந்திய மாணவர்களுக்காக ஏறத்தாழ அதே காலத்தில் வேப்பேரியில் டோவ்டன் கல்லூரியும் தோன்றின.

இவ்விதமாக சென்னை நகரத்தில் முதன் முதலில் பள்ளிகளும் பின் பலவிதக் கல்லூரிகளும் எழுந்து இன்று எண்ணமுடியாத அளவுக்கு அவை பெருகி இருக்கின்றன.

"தினமணி சுடர்"

பிடித்திருக்கிறது.'' இவ்வாறு காந்திஜி பதிலளித்தார்.

"சரி, இரண்டாவது நாளும் நீங்கள் தொடர்ந்து சர்வாதிகாரியாக இருக்க நேரிட்டால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார் நிருபர்.

"இரண்டாவது நாளா? முதல் நாள் விட்டுப் போனதைத் தொடர்ந்து செய்வேன்" என்றார் காந்திஜி சிரிப்புடன்.

## அவசரம் யாருக்கு?

வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக காந்திஜி லண்டனுக்குச் சென்றார். லண்டனில் கிங்ஸ்லி ஹாலில் அவர் தங்கியிருந்தார். ஒரு நாள் ஒரு தபால்காரர் காந்திஜியைப் பேட்டி காண வந்தார். அதே சமயத்தில் அவசர ஆலோசனைக்காக பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் ராம்ஸேமாக்டொனல்டு காந்திஜியைப் பார்க்க வந்தார். காந்திஜி முதலில் தபால்காரரை அழைத்து அவருடன் சில நிமிஷங்கள் பேசிவிட்டு விடை கொடுத்தனுப்பினார். பிறகு திரு. மாக்டொனல்டை அழைத்துப் பேசினார். அவர் சென்ற பின்பு, உடனிருந்த ஆங்கில நண்பர் ஒருவர், "திரு. மாக்டொனல்டைக் காக்க வைத்துவிட்டீர்களே ஏன்?" என்று காந்திஜியைக் கேட்டார்.

காந்திஜி சிரித்துக்கொண்டே விடையளித்தார்: "வாய்ப்புக் கிடைத்ததற்காகக் காத்து நிற்பது அரசியல் வாதிகளுடைய தொழில். காத்துக் கிடப்பதால் அவர்கள் சலிப்படைவதில்லை. தபால்காரரோ என்னைக் காண்பதற்காக ஆவலுடன் வந்தார். அது அன்பு நிறைந்த செயல். அதனால் முதல் உரிமை பெற்றார்."

## உபசரிப்பும், உடல்நலமும்

இந்தூரில் 1918-இல் நடந்த ஹிந்தி சாகித்ய சம்மேளனத்தின் வருடாந்தர மகாநாட்டுக்கு காந்திஜி தலைமை வகித்தார். மகாநாட்டுத் தலைவரும் உடன் வந்தவர்களும், மற்றப் பிரமுகர்களும், இந்தூர் மகாராஜாவின் விருந்தினராகத் தங்கிருந்தார்கள். அரண்மனைச் சிப்பந்திகள் விருந்தினர்களுக்குப் பணிவிடை செய்தார்கள். வெள்ளித் தாலங்களில் விதவிதமான உணவு வகைகளை வழங்கினார்கள்.

காந்திஜியுடன் மகாதேவ தேசாயும், ராஜேந்திர பிரசாதும், சம்பாரனில் காந்திஜிக்கு உதவி செய்த ஊழியர்களும் தங்கியிருந்தார்கள். அனைவரும் எளிய வாழ்க்கையை ஏற்றவர்கள் என்றாலும், ராஜோபசாரத்தை மறுக்க முடியாமல் ஏற்றுக் கொண்டார்கள். காந்திஜி மட்டும் தம்முடைய உணவை மாற்றிக் கொள்ளவில்லை.

ஒருநாள் உணவு வசதி எப்படி இருக்கிறது என்று மகாதேவ தேசாயை காந்திஜி கேட்டார். விதம் விதமான உணவுகளைப் படைத்து உபசரிக்கிறார்கள் என்று மகாதேவ் கூறினார். காந்திஜி சிரித்துக்கொண்டே "நமக்

-குப் பழக்கமில்லாத உணவு தானே?,' என்று கேட்டார்.

அந்தச் சமயத்தில் அரண்மனைச் சிப்பந்தி ஒருவர் அங்கு வந்தார். காந்திஜி அவரைக் கூப்பிட்டு, "மகாராஜா அவர்களுடைய அன்புக்கு நாங்கள் கடமைப் பட்டிருக்கிறோம். உங்களுடைய சேவையையும் பாராட்டுகிறோம்..." என்று நிறுத்தினார். காந்திஜி மேலே என்ன கூறப் போகிறாரோ என்பதைக் கேட்கும் ஆவலில் அரண்மனைச் சிப்பந்திக்கும் மற்றவர்களுக்கும் ஆசை மிகுந்தது. காந்திஜி சொன்னார்: ஆனால் வந்த இடத்தில் நாங்கள் நோய்வாய்ப்பட்டால் எங்களுக்கும் சிரமம்; உங்களுக்கும் வருத்தம் ஏற்படும் அல்லவா? பல வகை உணவு எங்களுக்குப் பழக்கமில்லை. தயவு செய்து ரொட்டியும் காய்கறியும் சிறிது பாலும் பரிமாறினால் போதும்."

உடனிருந்தவர்களிடம் காந்திஜி சொன்னார்:-"வாய்க்கு ருசியான உணவினால் ஆரோக்கியம் கெட்டு விடும். மனமும் கட்டுக் கடங்காது. உயிர் வாழ்வதற்குத் தேவையான எளிய உணவைத் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். உணவுக்கு அடிமையாகக் கூடாது. பணம் இருக்கிறது என்பதற்காக உணவில் பணத்தை அளவுக்கு மீறிச் செலவிடக்கூடாது. அது உடலுக்கும் சமூகத்திற்கும் செய்யும் துரோகமாகும்."

அடுத்த வேளையிலிருந்து வெள்ளித் தட்டுகளில் பரிமாறினாலும், அவற்றில் ரொட்டியும் காய்கறியும்தான் இருந்தன.

## கடைசி ஜயந்தி

1947 ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் தேதி காந்தியடிகளின் ஜீவ காலத்தில் கடைசி பிறந்த நாள். அன்று மவுண்ட் பேட்டன் சீமாட்டியும் தில்லியிலுள்ள அந்நிய தூதர்களைச் சேர்ந்தவர்களும் அன்பர்களும் காந்திஜியைக் கண்டு வணக்கம் தெரிவித்தார்கள். மலர்களும் காணிக்கைகளும் வந்து குவிந்தன.

கனு காந்தி காந்தியை வணங்கிவிட்டு, "எங்களுடைய பிறந்த நாள் அன்று உங்களை வணங்கி ஆசீர்வாதம் பெறுகிறோம். உங்களுடைய பிறந்த நாள் அன்றும் உங்களை வணங்கி ஆசி கோருகிறோம். இது விசித்திரமாக இல்லையா?" என்று கேட்டார்.

காந்திஜி முறுவலுடன் அளித்த விடை இதுதான்: மகாத்மாவின் பெருமை அது! மக்களுக்கும்மகாத்மாக்களுக்கும் வித்தியாசம் உண்டு அல்லவா? நான் அசல் மகாத்மாவா அல்லது மகாத்மா என்று உயர்த்தப்பட்டவனா என்பது வேறு விஷயம். நான் மகாத்மா ஆகிவிட்டேன். மகாத்மாவின் காலடியில் மக்கள் விழும் சம்பிரதாயப்படி என்னிடமும் நடந்துகொள்கிறார்கள்.

"தினமணி கதிர்"

# பாரதத்தின் தவப்புதல்வர்

— வே. கபிலன் —

இந்திய விடுதலைக்கென்று இரவைப் பகலாக்கிக் கொண்டு உழைத்தவர் ஒருவர், இருவரல்ல. இந்தத் தேசமே திரண்டெழுந்து தேசிய முழக்கம் செய்தது. 'என் தேசம் பெறவேண்டிய சுதந்தரத்துக்காக உடலைமட்டுமல்ல, மீண்டும் பெறமுடியாத உயிரையும் கொடுக்கத் தயார்!' என்று ஒரு மாநிலத்தவர் மட்டுமல்ல, எல்லா மாநில மாந்தரும் துந்துபி முழங்கினர். கொள்ளையர், வெள்ளையர், கொடியவர் என்று கூறி இரத்தத்தைக் கண்டவர், சித்தத்தை இழந்தவர், துப்பாக்கிரவையின் முன்னே தூய இருதயத்தைக் காண்பித்தவர் கோடிக் கணக்கானவர்.

ஆம்; அந்தக் கோடிக்கணக்கான பாரத மக்களுக்கு முதல் ஆசிரியராக விளங்கியவர், லோக மான்யபாலகங்காதர திலகர் 1856 ஆம் ஆண்டு ஓர் ஆசிரியரின் மகனாகப் பிறந்த அவர், தம்வாழ்நாளுக்குள் செய்து முடித்த காரியங்களையும், அவற்றிற்காக அவர் அனுபவித்த கொடுமைகளையும் யாராலும் எப்போதும் மறக்க முடியாது.

மராட்டிய மண்டலத்திலே பிறந்து, பூனாவிலே தவழ்ந்து, டெக்கான்கல்லூரியிலேவளர்ந்து, சமயப் புத்தகங்களிலே தேர்ச்சி பெற்று, அகர்கார் போன்ற அருமை நண்பர்களை உடந்தையாகக் கொண்டு விளங்கிய அவரது முன்பருவ வாழ்க்கை, விஷ்ணு சாஸ்திரி தொடங்கிய தேசிப்யபள்ளியிலிருந்துஅவரால் உண்டாக்கப்பட்ட 'மராட்டி' என்னும் ஆங்கிலவார ஏட்டோடு முடிவடைகிறது.

இரண்டாவது கட்டமான இடைக்காலப் பருவம் அவரது உள்ளத்தின் பிரதிபலிப்புஎன்றே சொல்லலாம்! நாட்டு மக்களிடையே நல்ல விழிப்புணர்ச்சியை உண்டாக்குவதற்காக அவர் புதுப்பித்த விநாயகர் விழாவையும், வீர சிவாஜியின் பிறந்த நாள் விழாவையும் எண்ணி எண்ணிப் போற்றுமல் இருக்க முடியாது. இந்தத் தேசம் பெற்றுத் தீர வேண்டிய சுதந்திரத்துக்காக எழுத்தையும் பேச்சையும், அதனோடு உழைப்பையும் முதலீடாக வைத்தார். 'சுயராஜ்யம் நமது பிறப்புரிமை. அதைப் பறிக்க முனைபவர் எவரானாலும் அவர்கள் பகைவர்களே!' என்று வீர முழக்கம் செய்தவர். வெள்ளையர் செயலைக் கண்டித்து, ஒவ்வொரு கால கட்டத்திலும் மராட்டியில் எழுதியவர். அதனால் அவர்

அனுபவித்த சிறைவாசம் - சித்ரவதை—சொற்களை கொஞ்சமல்ல. ஆனாலும் அவர் தம் லட்சியத்தை விட்டாரில்லை ... வெள்ளையரை வெளியேற்றுவதற்காக அவர் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு முயற்சியும் சாதாரணமானதல்ல; அதியற்புதமானதாகும்! 'கொத்தடிமை தீரும் வரையிலும் எதிர்த்து நிற்போம்!' என்று சொல்லியவர்; தேச மக்களைச் சொல்லவைத்தவர். ஆங்கிலேயருக்கு எதிராக தேசிய கல்விக் கூடங்களை-கல்லூரிகளை— மருத்துவ மனைகளை உண்டாக்கியவர். மிதவாதத் தலைவர்களான கோபால கிருஷ்ண கோகலே போன்றவர்களின் எதிர்ப்பையும் ஏகாதிபத்ய வெறியரின் அடக்குமுறைகளையும் கண்டு சளைக்காமல் தேச விடுதலைக்காக தீவிரவாதியாகத் தம்மை ஆளாக்கிக்கொண்டவர். காங்கிரஸ் மகாசபையில் கலந்து விடுதலை உணர்வுக்கு மேலும் வழிகாண பணியாற்றியவர்; இந்து-முஸ்லிம் கலகத்தை அடக்கவும், இருதாராரிடையே ஒற்றுமை ஓங்கவும் அயராது முயற்சித்தவர்; வங்கப் பிரிவினை ஏற்பட்டபோது அதைஎதிர்த்து எட்டுதிசைகளிலும்எதிர்ப்பு பிரசாரம் புரிந்தவர்; சுதேசிஇயக்கத்துக்குப் பிதாவாக விளங்கியவர், பகிஷ்கரிப்புக்குப் பாதை அமைத்தவர், மிதவாதத் தலைவர்களின் மனத்தைமாற்ற முனைந்து அதில் வெற்றி கண்டவர்; தேசப் பிதாவாகிய மகாத்மா காந்தியோடு வாதம் புரிந்தவர்; அநியாயக்காரர்களால் அக்கிரமமாகக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டபோது தாமே முன்னின்று வாழக்காடி உண்மையை நிலைநாட்ட முயற்சித்தவர்.

வெள்ளையரின் கொடூரச் செயலால் ஆறுண்டு காலம் மாண்டலே சிறைச்சாலையில் கிடந்தார். இந்தத் தருணத்தில்தான் அவரது அன்பிற்குரிய துணைவியார் காலமானார். இவருக்கு நீரிழிவு வியாதி தொடங்கியதும் இந்தச் சிறையில் இருக்கும்போதுதான்! 'கீதா ரகசியம்' போன்ற புனிதமான இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் எழுதி முடிக்க இந்த இடமே அவருக்குப் பயன்பட்டது...எப்படியோ....காங்கிரஸிலிருந்த பிளவு ஒழிந்து சமரசம் துளிர்விட்டு வளர்ந்தபோது நோய்க்கு அடிமையாகி 1920 ஆம் ஆகஸ்டுத் திங்கள் 1 ஆம் நாளன்று உலகம் கலங்க, நாடு துடிக்க, நல்லறிஞர் பதறி நெடுந்தூக்கத்தை மேற்கொண்டு விட்டார். அப்படிப்பட்ட அரும்பெருந் தலைவரை ஆசியாவின் புதல்வரை-இன்றுபோல் என்றும் நெஞ்சில் நிறுத்தி நிலையான உண்மைக்காகவும் தேச நன்மைக்காகவும் பாடுபடுவோமாக.

# தன்னிகரற்ற தலைவர்

## தாமஸ் ஜெபர்ஸன்

அன்று 1776-ஆண்டு போலவே இன்றும் உலகத்தை உலுக்கி வருகிறது, தாமஸ் ஜெபர்ஸனது எழுத்து.

"மனிதர் யாவரும் படைப்பால் ஒன்றே. அவர்களைப் படைத்தவர் அவர்களது இயற்கையோடு ஒன்றிய பிரித்தற்கரிய உரிமைகள் சிலவற்றையும் அவர்களுக்கு அருளியுள்ளார். உயிர் வாழ்தல், விடுதலையாய் இருத்தல், இன்பம் தேடல் ஆகியவை அவ்வுரிமைகளுள் அடங்கும்... அரசாங்கத்தின் நியாயமான அதிகாரங்கள் ஆளப்படுவோரின் சம்மதத்தினால் பெறப்படுபவையே.

உலகப் புகழ் பெற்று விளங்கும் இந்த வார்த்தைகளை அமெரிக்காவின் சுதந்தரப்பிரகடனத்தில் முழங்கும் இம் மொழிகளை எழுதியவர் தாமஸ் ஜெபர்ஸன்.

முப்பத்து மூன்றாவது வயதில் நண்பர்களால் "புரட்சியின் பேனா" என்று புகழ்பாடப் பெற்றவர் ஜெபர்ஸன்.

ஜனநாயகக் கொடியை உயர்த்திப் பிடித்த அஞ்சாத வீரர், தாமஸ் ஜெபர்ஸன். பாமர மனிதனிடத்தில் நம்பிக்கை-அதுதான் அவரது அரசியல் தத்துவத்தின் ஆணிவேர்.

1743 ஏப்ரல் 13-ம் தேதி பிறந்த ஜெபர்ஸன், 1775-76ல் கூடிய காண்டினென்டல் காங்கிரஸ் என்ற சபையின் உறுப்பினராக இருந்து சுதந்திரப் பிரகடனத்தை எழுதினார்.

பின்னர், உரிமைகள் மசோதா என்பதைத் தொகுத்துத் தமது எழுத்து வன்மையாலும் பேச்சு வன்மையாலும் நாட்டு அரசியல் சட்டத்திலே அதைச் சேர்த்தார். அச்சட்டத்தின் முதல் பத்துத் திருத்தங்களாக விளங்குவன, இந்த உரிமைகள் மசோதா கூறும் விதிகளேயாகும். அரசாங்கத்தின் வலிமையிலிருந்து நாட்டுக் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பளிப்பவை இவ்விதிகள். வழிபாட்டு உரிமை, பத்திரிகை உரிமை' பேச்சு உரிமை, நியாயமான விசாரணைக்கு உரிமை முதலிய உரிமைகளை உறுதி செய்கின்றது, இந்த உரிமை மசோதா.

ஆட்சி அதிகாரம் எவ்வளவுக்கு எவ்வளவு ஓரே இடத்தில் குவியாமல் இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு தனி நபருக்கு நல்லது என்ற கொள்கை உடையவர் ஜெபர்ஸன். அவர் பெடரல் முறை நாட்டமைப்புக்கு எதிராக மாநிலங்களின் உரிமைகளை வன்மையாக ஆதரித்தவர். ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டனின் ஆட்சியில் வெளி விவகார இலாகாக் காரியதரிசியாக இருந்த பதவியை உதறிவிட்டு, புதிய அரசியல் கட்சி ஒன்றின் தலைவ

ரானவர். இந்தக் கட்சிதான் நாளடைவில் ஜனநாயகக் கட்சி எனப் பெயர் பெற்றது.

முதலில் ஜெபர்ஸன் வழக்கறிஞராகத்தான் தொழில் தொடங்கினார். நல்ல வருமானமும் சேரலாயிற்று. ஆனால் அவர் கொள்கைக்கு அது ஒத்துவரவில்லை. "எதையும் தோண்டித் துளைப்பது; ஒன்றையும் விட்டுக்கொடுப்பதில்லை. மணிக்கணக்காகப் பேசுவது-இதுவே வழக்கறிஞர் தொழில்'; என்று கூறினார்; அத் தொழிலை விட்டார்.

பின்னர் அவர் நீதிபதியானார். 1769-ல் (பிரிட்டிஷ் ஆட்சியில்) வர்ஜீனியா காலனியின் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

"மனிதனுடைய மனத்தைக் கொடுமைப்படுத்தும் எல்லா வகையான கொடுங்கோன்மைக்கும் தீராத பகைவன் நான் என்று கடவுள் முன்னிலையில் ஆணையிட்டுள்ளேன்" என்று அவர் அக் காலத்திலேயே நாடறியக் கூறினார்.

அது வெறும் வாய்ப்பேச்சு அல்ல. அவருக்கு அவர் பெற்றோர் விட்டுச் சென்ற சொத்துக்கள் பல; கும்பிட்டு ஏவல் செய்யும் அடிமைகளும் அவ்வாறே கிடைத்தனர். அவரோ தம்மைப் போன்ற கனவான்கள் தத்தம் அடிமைகளை விடுதலை செய்ய விரும்பினால் செய்து விடலாம் என்று அக்காலத்தில் யாரும் கேள்விப்படாத—புதிய சட்டம் ஒன்றைத் தமது வர்ஜீனியாவில் கொண்டு வந்தார்.

1800-ல் ஜெபர்ஸன் அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாட்டின் மூன்றாவது ஜனாதிபதியாகிய இவர் தாம் வாஷிங்டன் நகரில் பதவி ஏற்ற முதல் ஜனாதிபதி. இன்று வெள்ளை மாளிகை என்று பெயர் வழங்கும் ஜனாதிபதி மாளிகையில் இருந்து ஆட்சி நடத்திய முதல் ஜனாதிபதியும் இவரே.

இரண்டு தடவை ஜனாதிபதி பதவி வகித்த இவர் ஆட்சிக் கலையில் மட்டுமல்ல, கட்டடக் கலை, புதிய விஞ்ஞான நுட்பங்களைக் கண்டு பிடித்தல், எழுத்துக் கலை முதலியவற்றிலும் திறமை படைத்த பலதுறை விற்பன்னராவார்.

இவர் அமெரிக்கா விடுதலை அடைந்த நாளுக்குக் கணக்காக 50 ஆண்டுகள் கழித்து 1826 ஜுலை 4-ம் தேதி காலமானார்.

ஆடம்பரங்களையெல்லாம் வெறுத்த தாமஸ் ஜெபர்ஸன், தமது கல்லறை வாசகமாகத் தாமே எழுதிவைத்துச் சென்றது இதுதான்.

"அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தையும், வர்ஜீனியாவின் மதச் சுதந்திரச் சட்டத்தையும் எழுதியவர், வர்ஜீனிய பல்கலைக் கழகத்தின் தந்தை தாமஸ் ஜெபர்ஸன் இங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளார்."

# எழில் மிகு ஏற்காடு

**என். ராமகிருஷ்ணு**

சேவாராயன் மலைத்தொடர்கள், தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தில் சேலத்திற்கு வடக்கே ஐந்துமைல்தொலைவில் உள்ளன. சேலம் செல்லும் ஒவ்வொருவரும் ஏற்காடு செல்லாமல் இருக்க முடியாது. அவ்வளவு அழகான இடம் அது. இம்மலைத் தொடர்கள் சுமார் 5300 அடி உயரம் வரை வளர்ந்திருக்கின்றன. ஏற்காடு சுமார் 4500 அடி உயரத்தில் இம்மலைத் தொடர்கள் மத்தியில் உள்ளது. இயற்கை வளக் காட்சிகள் மிகுந்த இந்த மலை வாசஸ்தலம். கோடையில்மிகவும் உஷ்ணமாக இல்லாமலும், குளிர் காலத்தில் மிகவும் குளிராக இல்லாமலும் மிதமான சீதோஷ்ண நிலையைக் கொண்டதாக அமைந்துள்ளது.

பழைய மாவட்ட வரலாற்றைப் படிப்போமானல், ஏற்காடு மிகவும் பழமையான இடம் என விளங்கும். நீலகிரிக்கு முன்பே ஏற்காட்டை வெள்ளையர்கள் கண்டு பிடித்து விட்டார்கள். சேவாராயன் மலைத் தொடர்களை ஆராயும் பணியை அக்காலத்தில் சேலம் மாவட்டக் கலெக்டராக இருந்த காக்பான் என்ற ஆங்கிலேயர் 1820-ம் ஆண்டில் மேற்கொண்டார். 1820-ல் இருந்து 1829 வரையில் அவர் பாடுபட்டு முதன் முதலாக ஒரு குடிசையை இங்குக் கட்டினுர். அதற்கு "கிரெஞ்சு" என்று பெயர், சென்னை ராஜதானியில் கவர்னராக இருந்த சர். தாமஸ் மன்ரோ என்பவர் இதற்கு மிகவும் உதவினுர். பின்பு இந்தக் குடிசை இருந்த இடத்தில் மிகப் பெரிய ஒரு கட்டிடம் கட்டப்பெற்று அப்பெயரே சூட்டப்பட்டது. 1857 சிப்பாய் கலகத்தின் போது இங்கு ராணுவம் வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. கோட்டை கொத்தளங்கள் போன்ற கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்தன. அவர் அரேபிய நாட்டிலிருந்து காப்பி, பேரிக்காய், ஆரஞ்சு மற்றும் பழ வகைகளை இங்குப் பயிர் செய்ய முயற்சி செய்தார்.

ஏற்காட்டில் முதல் முதலாக வீடு கட்டியவர் லெச்லர் என்ற பாதிரியார். இது 1841-ல் கட்டப்பட்டது. பின்பு பிரட் என்ற ஆங்கிலேயர் 'ஃபேர்லாண்ட்ஸ்' என்பதைக் கட்டினுர். அவர் சேலம் கலெக்டராகவும் இருந்தார். அவரும் லெச்லர் என்ற பாதிரியாரும் மலைப்பிரதேசங்களில் சென்று சஞ்சரித்து ஏற்காட்டைக் கண்டு பிடித்தனர்.

சேவராயன் மலைகளை நான்கு திக்குகளிலிருந்து அடையலாம் என்றும் கண்டு பிடித்தனர். சேலம் பக்கத்திலிருந்தும், நாகலூர் பக்கத்திலிருந்தும், பொம்மிடி பக்கத்திலிருந்தும் ஏற்காட்டை அடைவதற்கு வழிகள் வகுக்கப்பட்டன. மற்றும் டேனிஷ் பேட்டையிலிருந்தும் ஒரு வழி உள்ளது. ஆனால் இவை எல்லாவற்றிலும் மிகவும் சுலபமானதும் மக்கள் விரும்புவதுமான வழி சேலத்திலிருந்துதான்.

1829-ல் ஆங்கிலேயர்களுக்கு காபி பயிரிடுவதற்காக இடம் தரப்பட்டது. அரசாங்கம் சில சட்ட திட்டங்களை வகுத்து அதன்படி இடம் ஒதுக்கப்பட்டது. ஒரு ஏக்கருக்கு ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும் என்பது முதல் உத்தரவு. பிறகு 5 வருஷம் ஒன்றும் கொடுக்காமல் பயிர் செய்து, பிறகு வருடம் ஒன்றுக்கு ஏக்கருக்கு ஒருரூபாய் குத்தகைப்பணமாக வாங்கப்பட்டது. அநேகர் இதைப் பயன்படுத்திக் கொண்டு ஏற்காடை அடைந்தனர். எல்லாரும் ஐரோப்பியர்களே. பாதிரிமார்கள் அதிகமாக வந்து குடியேறினர். மாதாகோவில்கள் கட்டப்பட்டன. 1866-ல் சேவராயன் மலையை சர்வே செய்யும்படி அரசாங்கம் உத்திரவிட்டது. இங்கிலாந்திலிருந்துகூட காபி பயிர் செய்ய ஆங்கிலேயர்கள் இங்கு வர ஆரம்பித்தனர்.

முதன் முதலாக ஏற்காட்டில், காபி தோட்டங்களைப் போட்டுப் பயிர் செய்ய ஆரம்பித்தவர் 'பிஷர்' என்ற ஆங்கிலேயர். ஏற்காடுக்கு செல்ல ரஸ்தாக்கள் போட ஆரம்பிக்கப்பட்டன. இதற்கு முன்பாக குதிரை செல்லும் பாதைதான் இருந்தது. இதற்கு "பிரைடல்பாத்" (Bridal path) என்று பெயர். 1858-ல் காட்டு இலாகாவினரால் ரஸ்தா போடப்பட்டது. தற்போதுள்ள மலை ரஸ்தா 1900-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1903ல் முடிவுற்றது. 13 மைல் நீளமுள்ள இந்த மலை ரஸ்தாவில் 22 கொண்டை ஊசி வளைவுகள் (Hair pin bends) உள்ளன. இரும்பு கர்டர் கொண்ட 40 அடி பாலம் ஒன்றும், 66 அடி பாலம் ஒன்றும் வழியில் உள்ளன. அக்காலத்தில் 4 லட்ச ரூபாய் செலவில் இதை அமைத்தனர். அதற்குப் பிறகு 32 மைல் நீளமுள்ள கிளை ரஸ்தாக்கள் போடப்பட்டன. இதற்கு சுமார் 1 லட்ச ரூபாய் செலவாயிற்று.

ஏற்காடு என்ற பெயர் ஏற்படக் காரணம் அங்குள்ள ஏரிதான். 'ஏரி காடு' என்பது ஏற்காடு என்று ஆயிற்று என்று கூறுகின்றனர். மலையில் செல்லும் ஒரு சிற்றாறு ஏரியாகக் காட்சி அளிக்கிறது. அந்தக் காலத்தில் காட்டுப் பாதை வழியாகத்தான் ஏற்காடை அடைந்து வந்தனர். மக்களையும் காபித் தோட்ட முதலாளிகளையும் டோலியில் சுமந்து சென்றனர்.

இப்போது ஏற்காடு ஒரு அழகான ஊராகக் காட்சி அளிக்

கிறது. 4509 அடி உயரமுள்ள இங்கு பார்ப்பதற்கு அழகான குன்றுகளும் மலர்ச்சோலைகளும், கிடுக்குபள்ளத் தாக்குகளும் மற்றும் இயற்கைக் காட்சிகளும் மலிந்து கிடக்கின்றன. அவை களைக் காண மக்கள் திரளாக வருகின்றனர்.

## ரம்மியமான ஏரி

ஏற்காட்டில் நம்மனதைக் கவரும் இடம் அங்குள்ள ஏரி. கோடைக்கானல் போல் அவ்வளவு பெரியதாக இல்லாது போனாலும் கண்ணிற்குக் குளிர்ச்சியாகக் காட்சி அளிக்கின்றது. சிறு சிறு படகுகள் கொண்டு ஏரியைச் சுற்றி வரலாம். ஆனால் இரண்டு படகுகள் தான் காணப்படுகின்றன. ஏரியைச்சுற்றி நிழல் தரும் பெரும் மரங்கள் உள்ளன. அவற்றின் பக்கலில் மாலை நேரத்தில் உட்கார்ந்து பொழுது போக்க சிமிண்ட் பெஞ்சுகள் போடப்பட்டுள்ளன.

ஏற்காட்டில் முக்கியமாக மக்கள் பார்க்கும் இடம் "லேடீஸ் ஸீட்" என்ற பாறைகளின் தொகுப்பு. நாற்காலி போல் உட்கார்ந்து பார்க்க வசதி செய்தது போல் பாறைகள் அமைந்துள்ளன.

எதிரில் கால் தூக்கிப்போட்டுக் கொள்ளவும் வசதி உண்டு. அங்கிருந்து அழகான பள்ளத்தாக்கையும் மலை மீது பாம்பு போல் சுற்றிச் சுற்றி வரும் மலைப்பாதையையும் காணலாம். கீழே கிடு கிடுபாதாளம்உள்ளது. தூரத்தில் சேலம் நகரத்தையும், மேட்டூர் அணைக்கட்டையும் மேக்னசைட் (Magnasite) சுரங்கத்தையும் காணலாம். சில சமயங்களில் மேகக் கூட்டங்கள் பள்ளத்தாக்கில் சஞ்சரிப்பதைக் காணலாம்.

ஆர்தர்ஸ் சீட் என்பது ஊரின் மத்தியில் உள்ள உயரமான இடம். இங்கிருந்து ஏரியின் முழுத்தோற்றத்தையும் ஏற்காடு ஊர் தோற்றத்தையும் காணலாம்.

கிள்ளியூர் நீர்வீழ்ச்சி:- மற்ற மலைப்பிரதேசங்களிலும் கோடைவாசஸ்தலங்களிலும் உள்ளது போல் ஏற்காட்டில் நீர் வீழ்ச்சிகள் கிடையாது. ஆயினும் 75 அடி உயரமுள்ள இந்நீர்வீழ்ச்சி இயற்கை அன்னையின் மடியில் அமைந்துள்ளது. மழைக் காலத்தில் அழகாகக் காட்சி அளிக்கும்.

பகோடா பாயின்ட் ஏற்காட்டிலிருந்து 3மைல் தூரம் சென்றால் செங்காடு காப்பித்தோட்டத்தின் பக்கலில் உள்ளது "பகோடா பாயின்ட்." இங்கு கல் முட்டுகளைப் "பகோடா" மாதிரி அடுக்கிவைத்துள்ளார்கள். ஏற்காடு பூர்வகுடிகளான மலையாளிகளின் கோவில் ஒன்று உளது. இங்கிருந்து சேவராயன் மலைத்தொடரின் ஒரு பக்கக் காட்சியைக் காணலாம். பொழுது போக்க உல்லாசப் பிரயாணிகள் இவ்விடத்திற்கு வருகின்றனர். கீழே தோன்றும் பள்ளத்தாக்கு ஆயிரம் அடிக்கும் மேல் ஆழமானது.

காவேரி பீக் என்ற இடம் ஏற்காட்டிலிருந்து 12 மைல் தூரத்தில் உள்ளது. இங்கிருந்து காவேரி ஆற்றின் போக்கைக் காணலாம்.

லூப்ரோட்:- ஏற்காட்டில் எங்கும் காண முடியாத ரஸ்தா என்று ஒன்று உளது. ஏரியின் பக்கத்தில் ஆரம்பிக்கும் இந்த ரஸ்தா வழியாகச் சென்றால் 22 மைல் சுற்றி மறுபடியும் பழைய இடத்திற்கே வரலாம். இந்த ரஸ்தாவிலிருந்து பல முக்கியமான காட்சிகளையும் மலைப்பிரதேசங்களையும் காபி தோட்டங்களையும் காணலாம்.

சேவராயன் மலையில் இஷ்ட தேவதையான சேவராயனுக்கு ஓர் கோவில் இம்மலைத்தொடரின் உச்சியில் 5100 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளது. நீண்ட செங்குத்தான பாதையின் வழி சென்று இந்த இடத்தை அடையலாம். பெரிய ஆலமரத்தின் அடியில் அமைந்துள்ள இக்கோவில் இம்மலையையும் மக்களையும் காப்பதாக பூர்வ குடிகள் கருதுகின்றனர். இங்கிருந்து ஏற்காடு மலைகளையும் ஏற்காடு ஊர் தோற்றத்தையும் சன்யாசி மலைகளையும் காணலாம். ஆண்டுக்கு ஒரு முறை மே மாதத்தில் நடக்கும் திருவிழாவிற்கு 10,000க்கும் மேற்பட்ட மக்கள் கூட்டம் கூட்டமாக வருவார்கள். கோவில் மிகவும் சிறியது. சாதாரண வீடு போல உள்ளது. பக்கலில் மிகவும் பரந்த வெளி இருக்கின்றன. இங்கு நின்றால் காற்று பலமாக அடிக்கும். ஞாயிறு தோறும் ஏற்காட்டில் ஏரியின் பக்கலில் சந்தை ஒன்று கூடுகின்றது. இதன் பக்கத்தில் உள்ள சோலையில் மலையாளிகள் என்று கூறப்படும் பூர்வகுடிகள்பெரியவிருந்து ஒன்று நடத்துகிறார்கள்.

## மான்ட் போர்ட் பள்ளி

இங்குள்ள இப்பள்ளிக்கூடம் உலகப் பிரசித்தி பெற்றது. உலகின் பல பாகங்களிலிருந்து மாணவர்கள் இங்கு வந்து படிக்கின்றார்கள். பெண்களுக்கும் பள்ளி உண்டு. முதன் முதலாக 1859-ல் இங்கு மாதா கோவில் கட்டப்பட்டது.

ஏற்காட்டில் பஞ்சாயத்துப் பூங்கா ஒன்று உண்டு. அதன் நடுவில் மகாத்மா காந்தி உருவம் உள்ளது. பக்கத்தில் அழகாகக் கட்டப்பட்டுள்ள "தண்ணீர் தடாகம்" ஒன்று இருக்கின்றது. வட்டமாகக் கட்டப்பட்டுள்ள இதைச்சுற்றி அழகான சிமெண்ட் அலங்கார சுவர் போடப்பட்டுள்ளது. இந்த இடத்தின் பக்கலில் ஜிம்கானா கிளப், அசெம்பிளி ரூம்ஸ், புத்தகசாலை, மாதா கோவில், கடைத் தெரு முதலியன உள்ளன. இந்த இடத்திற்கு "லாங்லி பேட்டை" என்று பெயர். ஏற்காட்டிற்கு சேவராயன் டவுன் ஷிப் என்றும் பெயர் உண்டு.

ஏற்காட்டில் உள்ள 6 மலைத்தொடர்களில் ஏராளமான "பாக்ஸைட்" (Bauxite) என்றகனிப்பொருள் கிடைக்கின்றது. இம்மலைகளில் 6 கோடி டன் கனிப்பொருள் இருப்பதாகக்கணக்கிட்டிருக்கின்றார்கள். இதிலிருந்து தான் அலுமினியம் கிடைக்கின்றது.

ஏற்காட்டில் "சின்கோடிக்ஸ்பரிமெண்ட்" என்ற தொழிற்சாலை உள்ளது. இங்கு உப்புத்தாள்

செய்கின்றார்கள். அகில இந்திய தாவர ஆராய்ச்சி ஸ்தாபனம் இங்கு ஒரு "கனி வர்க்க தோட்டத்தைப் பயிர்செய்துள்ளார்கள். இதில் பலவிதமான கனிகள்பயிர் செய்யப்பட்டு வருகின்றன. அரசாங்க மண் வள பாதுகாப்புத் துறையார் மலைமீது மண் சரிவு ஏற்படாமல் பாதுகாப்புச் சுவர்கள் கட்டி வருகின்றார்கள்.

ஏற்காட்டில் சுமார் 10,000 ஏக்கர் காபித் தோட்டங்கள் உள்ளன. சுமார் 60 எஸ்டேட்டுகள் உள்ளன. காபி தவிர, பேரிக்காய், ஆரஞ்சு, பழம் முதலியன பயிரிடப்படுகின்றன. ஐரோப்பியர் அநேகமாக ஏற்காட்டை விட்டுச் சென்றுவிட்டனர். இந்தியர்கள் வெகுவாக காபி தோட்டங்களைப் பயிரிடுகின்றனர். ஏற்காட்டில் பல ரம்யமான காட்சிகளைக் காணலாம். செல்லும் வழியெல்லாம் பஸ்ஸிலிருந்தே மலைகளையும், பள்ளத்தாக்குகளையும், காபித் தோட்டங்களையும் வானளாவ உயர்ந்திருக்கும் "ஸில்வர் ஓக்ஸ்" மரங்களையும் காணலாம். "வ்யூபாயின்ட்" என்ற இடத்திலிருந்து கீழே பாம்புபோல் வளைந்து செல்லும் ரஸ்தாக்களைக் காணலாம் (12 வளைவுகள்) படப்பிடிப்பாளர்கள் வெகுவாக இப்போது ஏற்காடை உபயோகித்து வருகின்றார்கள். சண்டைப் படங்களில் வரும் காட்சிகள் எல்லாம் இங்கு எடுக்கப்பட்டவைகளே.

ஆனால் இவ்வளவு அழகான ஊரில் தங்குவதற்கும், சாப்பிடுவதற்கும் வசதியான இடம் இல்லை. காலையில் சென்று மாலையில் திரும்புபவர்கள் கூட மத்தியான சாப்பாட்டிற்குக் கஷ்டப்படுகின்றார்கள். மேலும் ஏற்காடைச் சுற்றிப் பார்க்க ஒருநாள் போதாது. அதனால் அரசாங்கம் தங்கும் விடுதிகளைக் கட்டி வசதி செய்ய வேண்டும். ஏற்காடு உல்லாசப்பிரயாணிகள் விரும்பும் இடம். வசதிகள் இருந்தால் மேலும் கூட்டம் வர வழி உண்டு. ஏற்காடைச் சுற்றிப் பார்க்க விரும்புகிறவர்கள் வாகன வசதியுடன் செல்வது நல்லது. இரண்டு அல்லது மூன்று மைல் சென்றால் தான் ஒவ்வொரு இடத்தையும் பார்க்கலாம். நடந்து செல்வது கடினம்.

ஏற்காடில் உள்ள மற்றும் பார்க்க வேண்டிய இடங்கள்; பெயர்; பிராஸ்பெக்ட் பாயின்ட்; ஈச்சம் காடு; சுவிஸ் வியு; டெய்லர்ஸ் ஸாடில்; ஹனிராக்; கிளென்பீக்; சன்யாஸி மலை; கிரெயிம் மோர்; ஹைபீல்ட்ஸ்; காஸ் கேட்ஸ். ஈச்சம் காட்டிலும், ரிடீரீட் என்ற இடத்திலும் கிருஸ்துவ சமய கேந்திரங்கள் உள்ளன. ரிடீரீட்டிலிருந்து இயற்கைக் காட்சி பிரமாதமாக இருக்கும். ஏற்காடில் உள்ள முக்கியமான இடங்களின் உயரம் பகோடாபாயின்ட் (4507 அடி); லேடீஸ் சீட் (4548 அடி); பிராஸ்பெக்ட் பாயின்ட் (4759 அடி); பியேர்ஸ்றால் (4858 அடி).

ஏற்காடில் வருஷம் ஒன்றுக்கு 65 அங்குல மழை பெய்கின்றது.

—"தினமணி சுடர்"

# அதிசய வெந்நீர் ஊற்று

—சோ. அரங்கநாதன்

பூமியிலிருந்து வெந்நீர் ஊற்று பெருக்கெடுத்து வருவதைவெறும் கட்டுக்கதை என்று சொல்லுவோர் பம்பாய் நகருக்கு ஐம்பது கல் தொலைவிலுள்ள கணேஷ்புரி, அக்லோலி ஆகிய இடங்களுக்குச் சென்றால் உண்மையென்று புரிந்து கொள்வர்.

கொதிக்கும் தண்ணீர், ஊற்றுக் குழிகளிலிருந்து பீறிட்டுக் கொண்டு வெளியில் வந்து கொண்டிருப்பதைக் காண அதிசயமாக இருக்கிறது. கொதிநீர் ஊற்றுக்கள் உள்ள பல இடங்களில் இடுப்பளவு ஆழமுள்ள சதுர வடிவில் சிறு சிறு குளங்களைக் கட்டியிருக்கிறார்கள். தினசரி இங்கே வருகின்ற ஆயிரக் கணக்கான யாத்ரீகர்கள் இந்த அதிசய வெந்நீர்க்குளங்களில் வந்து குளித்து விட்டுச் செல்கின்றனர். கணேஷ்புரியும் அதற்கு அருகிலுள்ள அக்லோலி ஆகிய இவ்விரு இடங்களும் வெந்நீர் ஊற்றுக் குளங்களுக்குப் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. குளித்த பின்பு பக்கத்திலுள்ள சிவாலயத்தைத் தரிசித்துவிட்டுச் செல்கின்றனர். இவ்விரு இடங்களிலுள்ள வறண்ட ஆற்றில் நூற்றுக்கணக்கில் வெந்நீர் ஊற்றுக் குழிகளும் காணப்படுகின்றன.

## அக்னி குண்டம்

கணேஷ்புரியிலுள்ள அக்னி குண்டம் என்று அழைக்கப்படுகின்ற ஒரு ஊற்றுக் குளத்தின் மேல் பரப்பை மூடி வைத்திருக்கின்றனர். அதன் துவாரத்தின் வழியாக மட்டும் கொதிநீர் வழிந்தோடுகிறது. அந்தத் துவாரத்திலிருந்துவருகின்றநீரைத்தொடக் கூட முடியாது; அவ்வளவு சூடு.

பம்பாய் நகரிலும் மற்றும் சுற்றுப் புறங்களிலுமுள்ளபெரும் பாலோர் கடவுளாகப் பூஜித்து வணங்குகின்ற சுவாமி நித்தியானந்தர் வாழ்ந்து; சமாதி ஆன இடமும் கணேஷ்புரியில்தான் இருக்கிறது. அதனால் இந்த இடம் மேலும் சிறப்புக்குரியதாக விளங்குகிறது.

குளிர்ந்த நீர் ஊற்றுக்களைத் தான் நாம் கண்டிருக்கிறோம். ஆனால் இம்மாதிரியான நீர் ஊற்றுக்கள் நமக்கு அதிசயந்தானே!

—"தினமணி சுடர்"

# இரஷிய விண்வெளிக் கப்பல் சந்திரனில் மிருதுவாக இறங்கியது

## வரலாற்றுப் பெருமை வாய்ந்த சாதனை

மாஸ்கோ, பிப். 3—சோவியத் விண் வெளிக் கப்பல் 'லூனா9' இன்றிரவில் சந்திர மண்டலத்தில் மிருதுவாக இறங்கியதாகவும், இது வரலாற்றுப் பெருமை வாய்ந்த முதல் சம்பவம் என்றும் மாஸ்கோ ரேடியோ அறிவித்தது.

'லூனா' இன்று மாலை 6-15 மணி 30 விநாடிக்கு (இந்திய நேரம் இரவு 12-15 மணி, 30 விநாடி) சந்திர மண்டலத்தில் அமைதியாக வந்திறங்கியது.

சந்திர மண்டலத்தில் இறங்கிய பிறகும் 'லூனா' 9' பூமிக்குச் செய்தி அனுப்பிக் கொண்டிருந்ததாக டாஸ் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது.

'லூனா'வில் நுண்ணிய கருவிகள் அடங்கியிருக்கின்றன.

சென்ற டிசம்பரில் 'லூனா 8' என்னும் சோவியத் விண்வெளிக் கப்பல் சந்திர மண்டலத்தில் மிருதுவாக இறங்குவதில் அநேகமாக வெற்றி பெற்றது. ஆனால் அதன் நுண் கருவிகள் இறுதிக் கட்டத்தில் இயங்கவில்லை.

சென்ற வருடம் மே மாதத்தில் 'லூனா5' விண் வெளிக் கப்பலையும் அக்டோபரில், 'லூனா7' விண் வெளிக்கப்பலையும் சந்திர மண்டலத்திற்கு சோவியத் ரஷியா செலுத்தியது. ஆனால் அவை சந்திரனில் மிருதுவாக இறங்க முடியவில்லை. அவை சந்திரனில் மோதின. சென்ற வருடம் ஜூன் மாதத்தில் செலுத்தப்பட்ட 'லூனா6' விண்வெளிக் கப்பல் சந்திரனை அடைவதற்கு முன்பே விலகிச் சென்று விட்டது.

### புதிய ஆராய்ச்சி

'லூனா9' விண் வெளிக் கப்பல் சந்திர மண்டலத்தில் மிருதுவாக இறங்கியதால் சந்திர மண்டலத்தின் மேல் பரப்பு, பாறைகள் மயமாக இருக்கின்றனவா அல்லது புழுதிப் படலமாக இருக்கிறதா என்று விஞ்ஞானிகள் அறிந்து கொள்ள முடியும். மனிதரைச் சந்திர மண்டலத்திற்கு அனுப்புவதற்கு முன்பே மனிதருடன் கூடிய விண்வெளிக் கப்பல்களைத் தாங்கக்கூடிய சக்தி சந்திரமண்டலத்தின் மேல் பரப்புக்கு உண்டா என்பதை விஞ்ஞானிகள் அறிந்து கொள்ள வேண்டும்.

சந்திர மண்டலத்தில் 'ரெய்னர்', 'மரியா' என்னும் பள்ளத்தாக்குகளுக்கு மேற்கே 'புயல் கடல்' பிரதேசத்தில் 'லூனா9' இறங்கியதாக டாஸ் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது.

'லூனா9' விண் வெளிக்கப்பலில் ரேடியோ கருவியும் மற்ற

நுண் கருவிகளும், நன்கு இயங்கி வருகின்றன.

**"சந்திரனில் இறங்குவோம்"**

சந்திரன் மண்ணில் ஏற்கெனவே அடிவைத்தாகி விட்டது. 'சந்திரனே காத்திரு, உன்னை நாங்கள் நேரில் காண்போம்'' என்று, ரஷியா விண்வெளி வீரர் நிகோலயவ் இன்று நம்பிக்கையுடன் கூறினார்.

இந்தச் சோதனை, சந்திரனில் முதல் தடவையாக மனிதன் கால் வைக்கும் நாளை நாம் நெருங்கச் செய்கிறது என்று பிரபல ரஷிய வானியல் விஞ்ஞானி டாக்டர் அலா மாசிவிச் கூறினார்.

''நமது தாய் நாட்டுக்குப் பெருமை'' என்ற தலைப்புடன் எல்லா மாஸ்கோ பத்திரிகைகளும் இன்று இச் செய்தியை பிரதானமாக வெளியிட்டன.

சந்திரனிலிருந்து "லூனா" அனுப்பிக் கொண்டு இருக்கும் டெலிவிஷன் படங்களை ரஷிய விஞ்ஞானிகள் இன்று ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

சந்திரனில் மனிதனை இறக்கும் சக்தி ரஷியாவுக்கு ஏற்கெனவே இருப்பதாக இச் சாதனையிலிருந்து நிபுணர்கள் கருதுகிறார்கள். ஆனால் சந்திரனின் நிலப்பரப்பில் அவனுக்கு ஏற்படக்கூடிய அபாயம் பற்றி இன்னமும் தெரியவில்லை. லூனாவில் உள்ள கருவிகள் விண்வெளி வீரர் எவ்வாறு பிழைக்க முடியும் என்பதை விஞ்ஞானிகள் முடிவு செய்ய உதவும்.

1970க்குள் இப் பிரச்னையை ரஷியா தீர்க்கும் என மாஸ்கோவில் நம்பப்படுகிறது. சந்திரனுக்கு முதலில் யார் செல்லுவது என்பது குறித்து அடுத்த சில ஆண்டுகளில் ரஷியா—யு. எஸ். இடையே கடும் போட்டி இருக்கும்.


# புதுமுறை சங்க வாய்பாடு

**V.K. சேஷாத்திரி. B.A., L.T.**

(Retired Deputy Inspector of schools. )

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**

# செய்திக் கொத்து

## நாட்டின் பரம வைரி வறுமையே

### அதை எதிர்த்து ஓயாது போரிட வேண்டும்

### அஸ்ஸாம் கூட்டத்தில் பிரதமர் உரை

நாட்டின் பரம வைரியான வறுமையை எதிர்த்து மக்கள் சளைக்காமல் போரிட்டு வர வேண்டுமென்று பிரதமர் இந்திரா காந்தி இன்று கேட்டுக் கொண்டார்.

நாட்டின் எல்லைகளை ராணுவம் நன்கு பாதுகாத்து வருகிறது. பரம வைரியான வறுமையிடமிருந்து நாட்டை இன்னும் அதிக விழிப்புடன் காப்பாற்றி வர வேண்டும் என்றார் பிரதமர்.

பிரதமர் கௌஹாட்டி வந்ததும், போர்ஜார் விமான நிலைய மருகில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றில் அவர் பேசுகையில் இவ்வாறு கூறினர்.

சுதந்திரமடைந்த பின்னர் நாட்டின் பல்வேறு பிரச்னைகளுக்கு தீர்வு காணும் பணியில் ஈடுபட்டு, பலவற்றுக்குத் தீர்வு கண்டாகி விட்டது. ஆனால் இன்னும் பல பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டாக வேண்டி இருக்கிறது என்றார் பிரதமர்.

நாட்டிலிருந்து வறுமையையும், பின்தங்கிய நிலைமையையும் விரட்டி யடிக்காவிடில் நாடு பல வீன மடைந்துவிடும் என்றார்.

உள் நாட்டு விஷயங்களில் பலவீனமாயிருந்தால், முன்னேற்றம் காண முடியாது. உணவு, தொழில் துறையுட்பட எல்லாத் துறையிலும் நாம் அனைவரது ஆற்றலையும் ஒருசேர ஈடுபடுத்தி உற்பத்தியைப் பெருக்கியாக வேண்டும் என்றார் பிரதமர்.

வறுமையை எதிர்த்து நடத்தும் போராட்டத்துடன் கூட ஐக்கியத்துக்காகவும் நாம் பாடு பட்டு வரவேண்டும் என்றார்.

அரசியல் துறையில் மட்டும் மேற்கொள்ள வேண்டிய போராட்டமல்ல இது. எல்லோரும் பகிர்ந்துகொள்ள வேண்டிய பொறுப்பாகும் இது என்றார்.

சமீபத்தில் ஏற்பட்ட அந்நிய ஆக்கிரமிப்புகள் குறித்து அவர் பிரஸ்தாபிக்கையில் ஆக்கிரமிப்புக்கு ஆளான போது நாடு பூராவும் ஒன்றுபட்டு தாய்நாட்டின் பாதுகாப்புக்காக மக்கள் அனைவரும் தம்மைப் பணித்துக்கொண்டது ஒரு அரிய நிகழ்ச்சியாகும் இது ஒரு பெரிய பலமாகும் என்றார்.

## ரஷியா ஒரு தூங்கும் பயில்வான்!

### அமெரிக்கத் தொழிலதிபர் கருத்து

பொருளாதார ரீதியில் ரஷியா உறங்கும் பயில்வானக உள்ளது. சர்வதேச வர்க்கத்தின்

உண்மையான தன்மையை அறிந்துகொள்ளும் வரை அது தொடர்ந்து உறங்கிக்கொண்டிருக்கும்" என்று அமெரிக்க ரசாயனப் பொருள் உற்பத்தியாளர் சங்கக் கூட்டத்தில் பிரபல அமெரிக்கத் தொழிலதிபரான டாக்டர் ராபர்ட் ஸ்வைன் கூறினார்.

அமெரிக்க சைனமிட் கம்பெனியின் நிர்வாக உபதலைவரான அவர், மேலும் பேசுகையில் "ரஷியாவுடன் தற்போது நடக்கும் வர்த்தகம் அடைபட்ட பாதை போன்றதாகும்" என்றார். "ரஷியா நடத்தும் வர்த்தகம் நினைத்தாற்போல திடீரென்று மாறுகிறது. அது எப்போதாவது பொருளை விற்கிறது அல்லது வாங்குகிறது. இது வளமான வர்த்தகத்துக்கு வழிவகுக்காது" என்றார் அவர்.

பொருளாதாரப்பரிவர்த்தனை, வெளிநாட்டில் மார்க்கெட் ஆராய்வுகள், வெளி நாடுகளில் உற்பத்தி நிறுவனங்கள் அல்லது விற்பனை வசதிகள் ஆகியவற்றைக் கொண்டதே உண்மையான சர்வதேச வர்த்தகமாகும் என்று அவர் சொன்னார்.

"35 ஆண்டுகளாக ரஷியா தனிமைப்படுத்தி வைத்த கெடுபிடியான நெளிவு சுளுவற்ற பொருளாதாரக் கட்டமைப்பின் காரணமாக வெளி நாடுகளில் முதலீடு செய்யும் வாய்ப்பை ரஷியா இழந்தது. மற்ற நாடுகளின் சுபீட்சத்தில் பங்கு பெறாமல் போய்விட்டது. ஏதோ சில கடன்கள், மான்யங்கள் ஆகியவற்றைத் தவிர உலகின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவத் தவறிவிட்டது" என்றும் அவர் சொன்னார்.

## திராவிட மொழிகளுக்கும் ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையே ஒருமைப்பாடுகள்

### போலந்து நாட்டின் பன்மொழிப் புலவர் பேட்டி

"ஐரோப்பாவில் வழங்கும் உக்ரோ—பின்னிஷ் மொழிகளுக்குமிடையே. குறிப்பாக திராவிட மொழிகளுக்குமிடையே பல ஒருமைப்பாடுகள் உள்ளன" என்று போலந்து நாட்டின் பன்மொழிப் புலவர் போஜோஜ்னியக் தினமணி நிருபரிடம் கூறினார்.

ஹங்கேரி, பின்லாந்து முதலிய நாடுகளின் பல்கலைக் கழகங்களில் உக்ரோ-பின்னிஷ் மொழிகளின் ஆராய்ச்சித்துறை வல்லுநர்கள் தற்போது அந்த மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்குமிடையே உள்ள ஒருமைப்பாடுகளைப் பற்றி ஆராய ஆரம்பித்திருப்பதாகப் புலவர் போஜோஜ்னியக் கூறினார்.

ஹங்கேரி, பின்லாந்து, எஸ்தோனியா முதலிய மொழிகளும் சைப்ரியாவில் உள்ள ஓஸ்டிஸ்க், ஒகுல், ஓடயக் முதலிய இடங்களில் பேசப்படும் மொழிகள் அல்லது வழக்கத்தில் இருக்கும் பேச்சு மொழிகளும் உக்ரோ—பின்னிஷ் மொழிகள் தொகுதியில் அடங்கியிருப்பதாக போலந்து புலவர் கூறினார்.

ஐரோப்பாவில் உள்ள பல சமஸ்கிருத ஆராய்ச்சியாளர்கள் தற்போது உக்ரோ-பின்னிஷ் மொழிகள் ஆராய்ச்சியில் ஆர்வம் காட்ட ஆரம்பித்திருப்பதாக போலந்து புலவர் கூறினார்.

## கூட்டு ஆராய்ச்சி

புலவர் போல்போஜ்னியக் மேலும் கூறியதாவது :—இந்தியாவில் உள்ள பன்மொழி ஆராய்ச்சியாளர்கள் திராவிட மொழிகளின் பொதுவான ஒரு நகல் மொழியைத் தயாரிக்க வேண்டும். பிஷப் கால்டுவெல் 1859ஆம் வருடத்தில் திராவிட மொழிகள் சம்பந்தமாகக் கூட்டு ஒப்பிலக்கணத்தை எழுதி வெளியிட்ட பிறகு இந்தத் துறையில் எந்தவிதமான முயற்சியும் நடைபெறவில்லை. திராவிட மொழி திராவிட மொழிகளின் பொது நகல் மொழியையும் உக்ரோ பின்னிஷ் மொழிகளின் பொது நகல் மொழியையும் தயாரித்தால், இரு தொகுதி மொழிகளுக்கிடையேயுள்ள ஒருமைப்பாட்டைப் பற்றி ஆராயலாம்.

## தமிழும் சமஸ்கிருதமும்

புலவர் போபோஜ்நியக் மேலும் கூறினார் :—பண்டைக் காலத்தில் தமிழும் சமஸ்கிருதமும் ஒன்றையொன்று வளர்த்து வந்திருக்கின்றன. அவை பரஸ்பரம் சொற்களைக் 'கொடுக்கல் வாங்கல்' செய்திருக்கின்றன. உதாரணமாக 'மீனம்' (மீன் என்று பொருள்) என்ற சொல் திராவிட மூலத்தைச் சேர்ந்தது. அது சமஸ்கிருதத்தில் தவிர வேறு எந்த இந்திய, ஐரோப்பிய மொழிகளிலும் காணப்படவில்லை. இந்தியா, ஐரோப்பிய மொழிகளின் மூலத்தைச் சேர்ந்ததாகக் கூறப்படும் பல சொற்கள் உண்மையில் திராவிட மொழியை மூலமாகக் கொண்டவை.

புலவர் போபோஜ்னியர் ஏற்கனவே டில்லி, எர்ணகுளம், மதுரை, காந்திகிராமம் முதலிய இடங்களுக்கு விஜயம் செய்திருக்கிறார். விரைவில் அவர் வாரணாசிக்கு விஜயம் செய்வார்.

புலவர் போபோஜினியக் வேத சாஸ்திரங்களையும் சமஸ்கிருத இலக்கியங்களையும் நன்கு படித்திருக்கிறார்.

## "வானவெளி ஆராய்ச்சி வெறும் வீண்" என ஆஸ்திரேலிய விஞ்ஞானி கருத்து

விஞ்ஞானத்தை வானவெளி ஆராய்ச்சிக்குப் பயன்படுத்துவதை விட உலகில் தற்போதுள்ள பல பிரச்னைகளைத் தீர்க்கப் பயன்படுத்தினால் மிக உபயோகமாக இருக்கும் என்று ஆஸ்திரேலிய அணு சக்திக் கமிஷனின் தலைவரான சர். பிலிப் பாக்ஸ்டர் இங்கு கூறினார்.

சர்வதேச தின ரோட்டரி சங்க விருந்தில் அவர் இவ்வாறு சொன்னார். அவர் மேலும் கூறியதாவது :—"ராணுவ விஷயங்களிலும் வானவெளி ஆராய்ச்சிகளிலும், விஞ்ஞான முயற்சிகளை வீணடிப்பது கட்டுப்படியாகக் கூடியதா என்பதை உலகம் தீவிர

மாக ஆராயவேண்டும். வான வெளி ஆராய்ச்சி ஆர்வத்தைக் கிளப்புவதாக இருக்கலாம். எனினும் அது பின் தங்கிய நாடுகளின் பிரச்னைகளைத் தீர்க்கக் கொஞ்சமும் உதவவில்லை.''

உலகின் பிரச்னைகளைத் தீர்க்க 'விஞ்ஞானத்தை சர்வதேசிய மயமாக்க வேண்டும்'' என்று அவர் சொன்னார்.

''ஒருவர் செய்வதையே மற்றவர் செய்து உழைப்பை வீணாக்குவது சரியல்ல; பிரச்னைகளை நாம் தேச அடிப்படையில் ஆராய வேண்டும். அதற்கு விஞ்ஞானம் சர்வதேசிய மயமாக்கப்படவேண்டும். நாம் மோசமாகி வரும் ஒரு நிலையில் வாழ்கிறோம். எவ்விஷயங்களுக்கு முதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டியது என்பது மிகவும் முக்கியமானதாகும்'' என்றார் அவர்.

உணவு, ஜனத்தொகை கட்டுப்பாடு, தொழிலபிவிருத்தி, கல்வி ஆகியவை முக்கிய விஷயங்களாகும் என்று அவர் வரிசைப்படுத்திக் கூறினார். ''ஜன நெருக்கடி நிறைந்த இவ்வுலகில் நாம் அனைவரும் பொதுப் பிரச்னைகளைக் கொண்ட அண்டை வீட்டுக்காரர்களே. எனவே, இவற்றை நாம் ஒன்றுபட்டுத் தீர்க்க வேண்டும். அணுகுண்டு யுத்தத்தால் உலகில் சர்வநாசம் ஏற்பட்டு உயிர் தப்பிய ஏதோ ஒரு சிலர் பூமிக்குமேல் செயற்கைக் கோளில் சுற்றிவருபவர்களாய், கதிரியக்க ஆபத்து நிறைந்த பூமியில் இறங்குவதா அல்லது செவ்வாயை நோக்கிப் போவதா என்று எண்ணும் நிலை மனித குலத்தின் கடைசி நபர்களுக்கு ஏற்படுமானால் அது விசித்திரமானதாகவே இருக்கும்'' என்று சர் பிலிப் பாக்ஸ்டர் கூறினார்.

ஆஸ்திரேலியாவின் தேசியப் பத்திரிகையான 'ஆஸ்திரேலியன்' சர்ர பிலிப்பின் பேச்சு பற்றி எழுதியதாவது :—''வான ஆராய்ச்சிக்கு, ரஷியாவும், அமெரிக்காவும் தனித்தனியே இரட்டிப்பு வேலையில் ஈடுபட்டுள்ள அதே நேரத்தில் உலகின் பழம் பிரச்னைகளான பசி, கல்வியறிவின்மை, நோய், வறுமை ஆகியவை கடுமையாயிருக்கின்றன. இப்பிரச்னைகள் தீர்க்கப்படாத போது, வான ஆராய்ச்சிக்குப் பெரும் பணம் செலவிடப் படுவதை ஆட்சேபிப்பவர்களை பிற் போக்குவாதிகள் எனக் கூறி விட முடியாது.

### விவசாயம் செய்வோர் அதிகம்: ஆனால் உணவு உற்பத்தி குறைவு

இந்தியாவின் அவல நிலை பற்றி நியூஜிலாந்து அமைச்சர்

### குறையை நீக்கச் சில யோசனைகள்

தற்கால விஞ்ஞான முறைகள், திட்டமிட்ட ஏற்பாடுகள், பயிற்சி ஆகியவை மூலம் இந்தியாவில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குச் சிறந்த வாய்ப்புகள் இருப்பதாக நியூஜிலாந்தின் உதவிப் பிரதமர் திரு ஜே. ஆர். மார்ஷல் கூறினார்.

ரேடியோவில் நிகழ்த்திய உரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாசன வசதிகள், இரசாயன உரம், இயந்திர சாதனங்கள், பயிர் பூச்சி தடுப்பு முறைகள் முதலியவற்றை அதிகபட்சமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். கிராமியக் கல்வி, விஞ்ஞான ஆராய்ச்சி விவசாய விஸ்தரிப்பு, விவசாய நிபுணர்களின் ஆலோசனைகள், விற்பனை வசதிகள் முதலியவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த விஷயங்களில் எனது நாடு பல ஆண்டுகளாகக் கவனம் செலுத்தி வந்திருக்கிறது. அதன் பயனாக எனது நாட்டில் உணவு உற்பத்தி பெருகியுள்ளது.

'ஈகாபே' மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஸ்ரீ. மார்ஷல் இங்கு வந்திருக்கிறார்.

திரு மார்ஷல் மேலும் கூறினார். "நியூஜிலாந்து மக்களில் 14 சதம் பேரே விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொரு விவசாயியும் சராசரியாக 96 பேருக்குப் போதுமான உணவை உற்பத்தி செய்கிறான். ஆனால் இந்தியாவிலோ ஜனத்தொகையில் 70 சதம் பேர் விவசாயிகள். ஆனால் அவர்களால் தமக்கும் பாக்கியுள்ள 30 சதம் மக்களுக்கும் போதுமான உணவை உற்பத்தி செய்து கொள்ள முடியவில்லை. உலகத்திலேயே நியூஜிலாந்தில் தான் விவசாயிகளின் சராசரி உணவு உற்பத்தி அதிகம். அடுத்தபடியாக ஆஸ்திரேலியா சொல்லலாம். இந்தப் புள்ளி விவரங்கள் நமக்குச் சொல்வதென்ன? 'ஈகாபே' பிராந்தியத்தைச் சேர்ந்த பெரும்பாலான நாடுகளில் உணவு உற்பத்தியைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்று தெரியவில்லையா?

திரு மார்ஷல் மேலும் கூறினார். ஆசியாவிலும், தூரகிழக்கிலும் கோடிக்கணக்கான மக்கள் போதுமான உணவின்றிக் கஷ்டப்படுகின்றனர். பலர் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பினும் மிகவும் கொஞ்சமாகத்தான் உற்பத்தி செய்கிறார்கள் என்பது தெளிவு.

## புதுப் பள்ளிகளைத் திறக்கும் விஷயம்

### சர்க்கார் விளக்கம்

தற்போதுள்ள நடைமுறை உத்தரவுகளபடி (அதாவது கல்வி, பொது சுகாதார துறையின் 11-4-1961 அரசாங்க ஆணை எண், 790 மற்றும் 31-3-62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 744) பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் புதிதாக ஆரம்பப் பள்ளிக்கூடங்களைத் திறக்க வேண்டுமானால், அவ்வாறு திறக்கவிருக்கும் இடங்களிலுள்ள மக்கள் தொகை 300-க்குக் குறையாமலும், அங்கு ஒரு மைல் சுற்றளவுக்கு வேறெந்தப் பள்ளிக்கூடமும் இல்லாமலும் இருக்க வேண்டும். மேற்கண்ட இரு நிபந்தனைகளையும் திருப்தி செய்யாத இடங்களில், புதிதாக

ஆரம்பப் பள்ளிகளை, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் திறக்க வேண்டுமானால், கல்வித் துறையின் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இது தவிர புதிதாகப் பள்ளிகளைத் திறத்தல் மேலும் வகுப்புகளை அதிகரித்தல், ஆசிரியர்கள், மாணவர்கள் விகிதாசாரப்படி, மேலும் ஆசிரியர்களை நியமித்தல் போன்ற விஷயங்களைத் தீர்மானிக்க, செகண்டரி கல்வி நெறியாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. ஆகவே, இவை பற்றி செகண்டரி கல்வி நெறியாளர் முடிவு செய்த பின், அந்த முடிவுகளை, மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துவார். அவர் புதிய பள்ளிக் கூடங்கள் அல்லது கூடுதலான வகுப்புகளைத் திறக்க அனுமதி தந்து, சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு ஆசிரியர்களை ஒதுக்குவார்.

மேற்கண்டவாறு அதிகாரங்கள் எல்லாம் கல்வித் துறையினரிடமே குவிந்து இருப்பதாகவும் தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் (65)0) பிரிவின் கீழ் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு இது விஷயத்தில் அளிக்கப்பட்ட அதிகாரங்கள் எடுபட்டு விட்டன என்றும் அரசாங்கத்திற்கு முறையீடுகள் வந்துள்ளன.

ஆகவே, இனி பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், கல்வித் துறையின் முன் அனுமதியின்றியே, புதிதாக ஆரம்பப் பள்ளிக் கூடங்களைத் திறக்கலாம் என்று பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு, அரசாங்கம் அதிகாரம் அளிக்கிறது. ஆனால் பள்ளிக் கூடங்களைத் துவக்க இருக்கும் இடங்களில், மக்கள் தொகை 300-க்குக் குறைவில்லாமலும், அங்கு ஒரு மைல் சுற்றளவுக்கு பள்ளிக்கூடங்கள் இல்லாமலும் இருக்க வேண்டும். இதற்குட்பட்டு, மூன்று மாதத்திற்குள் கல்வித் துறையின் அனுமதியை பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் பெற்றுவிட வேண்டும். இது தவிர, மற்ற எல்லா விஷயங்களிலும், புதிதாகப்பள்ளிக்கூடங்களைத் திறக்க, பஞ்சாயத்து யூனியன் மன்றம், செகண்டரி கல்வி நெறியாளரைக் கலந்தாலோசித்துக்கொள்ள வேண்டும்.

---

எதனையும் பரபரப்புடன் இயற்றுதல் தகாது. தூய்மை, பொறுமை, விடாமுயற்சி—இம்மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை; அனைத்துக்கும் மேலாக, அன்பும், காலமும் உன்னதே; அழகற்ற பரபரப்பு வேண்டா.

—விவேகாநந்தர்

# நீவிர் அறிவீரா?

## செயற்கை இருதயம்

வ்ஸ்டன், ஏப்.22—இங்குள்ள ஒரு ஆஸ்பத்திரியில் ஒரு அதிசய ரண சிகிச்சை நடைபெற்றது.

65 வயதுள்ள ஒருவரின் மார்புக்குள் ஒரு பிளாஸ்டிக் இருதயத்தை சர்ஜன்கள் செலுத்தினர். இந்தச் செயற்கை இருதயம் ஒரு ஆரஞ்சுப் பழத்தின் அளவுதான் இருக்கும்.

ரண சிகிச்சை வெற்றிகரமாக நடைபெறுகிறது.

செயற்கை இருதயம் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருப்பதாகவும், பிணியாளரின் ரத்த அழுத்தமும் மற்ற உள்ளுறுப்புகளின் பணிகளும் நல்ல முறையில் நடைபெறுவதாகவும் டாக்டர்கள் கூறினர்.

செயற்கை இருதயம் இப்போதுதான் முதல் தடவையாக மனித உடலில் புகுத்தப்பட்டிருப்தாக ஆஸ்பத்திரி அதிகாரிகள் கூறுகின்றனர்.

---

## பழைய சுவர்க் காகித விலை ரூ. 40 ஆயிரம்

லண்டன், ஏப். 10—பிரிட்டனில் 1712ல் அச்சிடப்பட்ட சுவர்க் காகிதம் இப்போது ரூ. 40 ஆயிரத்துக்கு ஏலம் விடப்பட்டுள்ளது. அதாவது அதை விலை அடி ஒன்றுக்கு ரூ. 133 ஆகிறது.

320 சதுர அடி கொண்ட இச் சுவர்க் காகிதம் நெதர்லாந்தில் தயாரிக்கப்பட்டதாகும். பிறகு அது இங்கிலாந்துக்கு கொண்டு வரப்பட்டு அங்கு கைமூலம் டிசைன்கள் அச்சடிக்கப்பட்டன. பிறகு அது போலந்தில் லான்கட் என்னுமிடத்திலுள்ள போடோக்கி என்பவருடைய கோட்டைக்கு அனுப்பப் பட்டது.

இக்காகிதம் இரு நூற்றாண்டுகளுக்கும்மேலாக அக்கோட்டைச் சுவர்களை அலங்கரித்தது. 1944ல் போலந்தில் ரஷியப் படை முன்னேறியபோது ஆல்பி பெட்போடோக்கி பிரபு இங்கிலாந்துக்கு வந்த சமயத்தில் அக் காகிதத்தையும் எடுத்து வந்தார்.

## மருத்துவ உலகச் சாதனை

ஆக்ஸ்போர்டு (இங்கிலாந்து) ஏப். 23—இருதய நோய் காரணமாக ஒருவர் துடிதுடித்துக் கொண்டிருந்தார்.

ஒவ்வொரு நிமிடமும் அவர் காலனுடன் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தார்.

56 வயதுள்ள அந்த பிரிட்டிஷ்காரருக்கு ஆஸ்பத்திரியில் ரணசிகிச்சை நடைபெற்றது.

சிகிச்சை முழு வெற்றியளித்தது. அவர் இப்போது வீட்டிற்குத் திரும்பி விட்டார்.

அவரைக் கண்டு காலன் அஞ்சுகிறான்.

பெரும் பளுவாக இருந்த வாழ்க்கை அவருக்குப் பூம் பொழிலாகி விட்டது.

அவருடைய இருதயக் குழாயில் பெரும் கோளாறு ஏற்பட்டிருந்தது.

அந்தக் குழாயை அகற்றி விட்டு டாக்டர்கள் ஒரு பன்றியின் இருதயக் குழாயை அவருக்குச் செலுத்தினர்.

பன்றியின் இருதயக் குழாய் தற்போது அவருடைய இருதயத்தில் ரத்தத்தை இறைத்துக்கொண்டும் செலுத்திக் கொண்டும் இருக்கிறது.

அவருக்கு ரணச் சிகிச்சை நடைபெற்ற சமயத்தில் அவருக்குச் செலுத்துவதற்கு மனித இருதயக் குழாய் கிடைக்க வில்லை.

ஆகவே பன்றியின் இருதயக் குழாய் உபயோகிக்கப்பட்டது.

---

## கழித்துத் தள்ளப்பட்ட பொருட்களுக்குக் கிராக்கி அதிகரிப்பு

லண்டன். ஏப். 10—உலகில் மூலப் பொருட்களுக்கு கிராக்கி அதிகரித்து வருவதால், கழித்து கட்டப்பட்ட ஓட்டை உடைசல் பொருட்களுக்கும்; கழிவுப் பொருள்களுக்கும் சீராக மதிப்பு உயர்ந்து வருகிறது. சொல்லப் போனால் சில ஆண்டுகளுக்கு முன்னர் உதவாப் பொருட்கள் என்று கருதப்பட்டவைக்கான மார்க்கெட் தீவிரமாகி, மறு உற்பத்திக்காக அவற்றைச் சேகரிப்பது ஓரளவுக்குப் பெரிய தொழிலாகி விட்டது.

எல்லா வகையான உதவாப் பொருட்களையும் மீட்டு மறுபடி பயன் படுத்துவதற்கான யந்திர சாதனங்களைக் கண்டு பிடிக்கவும் சாதனங்களில் தகுந்தமாறுதலைச் செய்யவும். உற்பத்தியாளருக்கும் கண்டுபிடிப்பாளருக்கும் சவால் கிளம்பியுள்ளது.

அடுத்த வருடம் ஜூலையில் லண்டனில் நடைபெறவிருக்கும் ஓட்டை உடைசல் கழிவுப் பொருள் கண்காட்சியில் கழித்துத் தள்ளப்பட்ட பொருட்களை மீண்டும் உபயோகமானபொருட்களாக மாற்றுவதற்கான நவீன முறைகள் இடம் பெறும்.

1964 பிரிட்டனில் மறுபடி பயன் படுத்துவதற்காக மீட்கப்பட்ட உதவாப் பொருட்களின் மதிப்பு ரூ. 2200 கோடியாகும். என்பதுடன் அவை ரூ. 120 கோடிக்கு ஏற்றுமதி வருமானத்தை அளித்தன என்பதிலிருந்து இப்பொருட்களுக்குள்ள பெரும் பயன் வாய்ப்பை அறியலாம்.

---

## சர்க்கார் ஊழியர்கள் “பூட்பாலிஷ்” போடுகின்றனர்
### ஆட்சேபணையைத் தெரிவிக்கப் புதுமையான முறை

**பம்பாய்**, ஏப். 5—மகாராஷ்டிர சர்க்கார் ஊழியர்கள் தமக்கு சர்க்கார் ‘ஜீவனக்கூலி’ கொடுக்க மறுப்பதை ஒரு புதுமையான முறையில் ஆட்சேபித்து வருகின்றனர். அவர்கள் வீதிகளின் மூலைகளில் உட்கார்ந்து கொண்டு பொது மக்களின் பாதரக்ஷைகளுக்குப் பாலிஷ் போடுகின்றனர். பிரஷ்கள், பாலிஷ்டின்கள் முதலியவற்றுடன் சர்க்கார் ஊழியர்கள் நடைபாதைகளில் ‘கடை’ போட்டிருக்கின்றனர். அவர்கள் வழியில் செல்லும் வியாபாரிகளையும் மக்களையும் தம்மிடம் பாலீஷ் போட்டுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

“சர்க்கார் ஊழியர்கள் இந்த வேலையைச் செய்கிறார்களே” என்று ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் மக்களை நோக்கி, ‘எங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு நாங்கள் வேறு என்ன செய்ய இயலும்’’ என்று அவர்கள் கூறுகின்றனர்.

மகாராஷ்டிர ராஜ்ய சர்க்கார் ஊழியர்கள் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டு உள்ளது. சர்க்கார் எங்களுக்கு ஜீவனக்கூலி தர மறுக்கின்றனர். அவர்களுடைய போக்கைப் பாலிஷ் போடுவது போல மிருதுவாகத் தானே ஆட்சேபிக்க முடியும்?

**“ ஆரம்பக் கல்வி ”**
**ஆபீஸ்.**
**94–95, புதுத்தெரு,**
**மண்ணடி, சென்னை-1.**

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

**முக்கிய அறிவிப்பு**

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# முற்காலத் தமிழகத்தில் தேர்தல்

— வெ. சாமிநாத சர்மா —

உலகத்திலேயே மாபெரும் தேர்தல் ஒன்று, அமைதியாக, உலகமே கண்டு வியக்கத்தக்க முறையில், ஜனநாயக அடிப்படையில், கடந்த மாதம் பாரத நாட்டில் நடைபெற்றது. பழம் பெரும் பண்பாட்டின் உறைவிடமாகத் திகழும் இந்தப் புண்ணிய பூமியில், பண்டைக்காலத்தில் கிராமப் புறங்களில் தேர்தல் எவ்வாறு நடைபெற்றது என்பதை இக் கட்டுரை அழகாக விளக்குகிறது.

—ஆசிரியர்.

முற்காலத்தமிழகத்தில், பிரதியொரு கிராமத்திலும், அந்தக் கிராமத்தில் வசிக்கும் இளைஞர் முதியோர் உள்பட ஆண் மக்கள் அனைவரையும் கொண்ட ஒரு சபை இருந்தது. அதாவது, கிராமத்திலுள்ள பெண் மக்களை தவிர்த்து, ஆண் மக்கள் அனைவரும் இந்தச் சபையின் அங்கத்தினர்கள் என்றால், பிறருடைய தயவு தாட்சண்யத்திற்காகவோ, நிர்ப்பந்தத்திற்காகவோ சேர்ந்த அங்கத்தினர்களென்றோ, அல்லது ஏதோ ஒரு தொகையைக் கட்டணமாகச் செலுத்திச் சேர்ந்து கொண்ட அங்கத்தினர்களென்றோ கருதிவிடக் கூடாது. கிராமத்தில் நிலைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு தகுதியே, கிராம சபையில் அங்கத்தினராயிருப்பதற்குப் போதுமானதாயிருந்தது. இங்ஙனம் கிராம மக்கள் அனைவரையும் கொண்ட சபை, மகாஜன சபையென்று பொதுவாக அழைக்கப்பட்டது.

## மகாஜன சபையின் பொறுப்புகள்

இந்த மகாஜன சபையின் மேற்பார்வையிலேயே, இந்த சபையினால்பொதுவாக விதிக்கப் பட்ட கட்டளைகளின் படியே கிராம நிருவாகம் நடைபெற்று வந்தது. நிருவாகம் எப்படி நடைபெற வேண்டும் என்பதைப் பற்றித் தீர்மானிக்க இந்த மகாஜன சபைக்குப் பூரண உரிமை இருந்தது. மத்திய அரசாங்கம் இதில் தலையிடவில்லை.

ஆனால் இந்த மகாஜன சபை, நேரடியாக நிருவாகத்தைநடத்தவில்லை. கிராம மக்கள் அனைவரும் அடிக்கடி ஒன்று கூடுவதோ, காரியங்களைச் சேர்ந்து நடத்துவதோ சாத்தியமில்லை

யல்லவா? இதற்காக, நிருவாகத்தை நடத்தவும், கிராம காரியங்கள் அனைத்தையும் கவனிக்கவும் பல் வேறு சிறு சபைகளை ஏற்படுத்தியது. இந்தச் சிறிய சபைகளை, உட்சபைகள் என்றோ குழுக்கள் என்றோ, தற்கால பாஷையில் கமிட்டிகள் என்றோ, எப்படி வேண்டுமானாலும் நாம் அழைத்துக் கொள்ளலாம். கிராம நடைமுறைகளைப்பற்றி விவரிக்கும் கல்வெட்டுகள், இந்தக் குழுக்களை **வாரியம்** என்ற பெயராலும், இக்குழுக்களின் அங்கத்தினர்களை **வாரியர்** என்றும் வாரியப் பெருமக்கள் என்றும் ஒவ்வொருவிதமாக அழைக்கின்றன.

## கிராம சபையே நிருவாக சபை

இந்தப் பல்வேறு குழுக்களையும் சேர்த்து, பிற்காலத்தில் **கிராம சபை** என்று பொதுவாக அழைப்பதுஒருமரபாகிவிட்டது. இதை இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், கிராமத்து ஆண் மக்கள் அனைவரையும் கொண்டது மகாஜன சபை. இதன் கண்காணிப்பில் நிருவாகத்தை நடத்திவந்த பல்வேறு குழுக்களடங்கியது கிராம சபை. இந்த கிராம சபையே நிருவாகத்தை நேரடியாக நடத்தி வந்ததனால், இதன் பெயரே பிரபலமடைந்து நிலைத்து விட்டது. இதனைக் கிராமப் பொதுச் சபையென்றும், கிராம நிருவாக சபையென்றும் சொல்வதுண்டு.

## குழுக்கள் மூலம் ஆட்சி

ஒருகிராமத்தின் விஸ்தீரணம், ஜனத்தொகை, ஒழுங்கான நிருவாகம் நடைபெற வேண்டியதன் அவசியம், இப்படிப்பலவற்றையும் அனுசரித்து எத்தனை குழுக்கள் தேவையோ அத்தனை குழுக்கள் இருந்தன. ஒவ்வொரு குழுவிலும் எத்தனை அங்கத்தினர்கள் இருக்க வேண்டுமோ அத்தனை அங்கத்தினர்கள் இருந்தார்கள். குழுக்களின் எண்ணிக்கைக்கும், அங்கத்தினர்களின் எண்ணிக்கைக்கும் வரம்பு ஏற்படுத்தப்படவில்லை. ஏற்படுத்தவும் முடியாதுதானே?

ஆனால் ஒரு கிராமம், விஸ்தீரணம், ஜனத்தொகை முதலியவற்றில் சிறிதாயிருந்தால், அந்தக் கிராமத்து ஜனங்கள், ஒரே ஒரு குழுவைமட்டும் நியமித்து அதன் மூலம் கிராம நிருவாகம் நடைபெறும்படி பார்த்துக் கொண்டார்கள். இந்த ஒரு குழுவில், குறைந்த பட்சம் ஐந்து அங்கத்தினர்கள் இருக்கவேண்டுமென்ற ஒரு பொது நியதி இருந்து வந்தது. இதற்குக் குறைவாக இருக்கக் கூடாதென்ற கண்டிப்பும் இருந்தது. இந்த ஐவரும் பஞ்சவர் என்று அழைக்கப்பட்டனர். பஞ்சவர் என்ற இந்தச் சொல்லை அடிப்படையாகக் கொண்டே பஞ்சாயத்து என்ற சொல் வழக்கு பிற்காலத்தில் ஏற்பட்டது போலும். பிறகு ஐவருக்கு மேற்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட குழுக்களும் பஞ்சாயத்து என்ற பெயராலேயே அழைக்கப்படுவது ஒரு மரபாகிவிட்டது. அது மட்டுமன்று;

அங்கத்தினர் ஐவருக்கு மேற்பட்டவராயிருந்தாலும் அவர்கள் பஞ்சவர் என்றே அழைக்கப்பட்டனர். அதாவது வழங்கும் சொல் ஒன்றாயிருந்த போதிலும் அது குறிக்கும் பொருள் காலக்கிரமத்தில் விரிவடைந்தது. இந்த முறையை யொட்டியே இப்பொழுது கிராம சபைகள் பஞ்சாயத்துக்கள் என்று அழைக்கப்படுகின்றன.

## கிராம சபை—தேர்தல்

பல் வேறு குழுக்களடங்கிய கிராம சபைக்கு—கிராம நிருவாக சபைக்கு—பஞ்சாயத்து—அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்க ஒழுங்கான தேர்தல் நடைபெற்றது. கிராமத்தில் வசிக்கும் சிறியவர் பெரியவர் அனைவரும் இந்தத் தேர்தலில் உற்சாகத்துடன் பங்கு கொண்டார்கள். இந்தக் குழுக்கள், சரியான பிரதிநிதிகளைக் கொண்டவையாயிருக்க வேண்டுமென்பதிலும், திறம்படச் செயலாற்றிவர வேண்டுமென்பதிலும் எல்லோருக்கும் அக்கறையிருந்தது. எந்தக் குழுவில் யார் அங்கத்தினராக இருந்தாலென்ன இரா விட்டால் என்ன என்று எவரும் அலட்சியமாயிருக்கவில்லை. அப்படியிருந்தால், தங்களுடைய அன்றாட வாழ்க்கை சீராக நடைபெறுதென்பதை அனைவரும் உணர்ந்திருந்தனர்.

இந்தக் குழுக்களுக்கு இன்னின்ன தகுதிகள் படைத்தவர்களையே அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுக்க வேண்டுமென்றும் அதே பிரகாரம் இன்னின்னாரைத் தெரிந்தெடுக்கக் கூடாதென்றும் சில விதி முறைகள் ஏற்படுத்தப்பெற்றிருந்தன. தவிர தற்காலத்து முறையில், அபேட்சா பத்திரம் தாக்கல் செய்தல், தேர்தல் பிரசாரம், கட்சி பிரதி கட்சிகள் முதலியன இல்லாமலேயே தேர்தல் நடைபெற்றது.

## உறுப்பினரின் தகுதிகள்

அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்கு இருக்க வேண்டிய தகுதிகளில் முக்கியமானவை வருமாறு:—

1. முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் எழுபத்தைந்து வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

சில கிராமங்களில் முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் அறுபது வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டுமென்ற விதி இருந்தது.

2. ஒழுங்காகத் தீர்வை செலுத்தப்பட்டு வருகிற கால் வேலி நிலத்திற்குச் சொந்தக்காரர்களாயிருக்க வேண்டும். (ஒரு வேலி என்பது 61 ஏகர்).

3. சொந்த மனையில், சொந்த வீடு கட்டிக் கொண்டு அதில் வாசம் செய்கிறவர்களாயிருக்க வேண்டும்.

4. கால் வேலிக்குக் குறைவான நிலம் படைத்தவர்களாயிருக்கும் பட்சத்தில் ஓரளவு கல்விப்பயிற்சி உடையவர்களாயிருக்க வேண்டும்.

5. நிலம் புலம் எதுவுமே இல்லாதவர்களாயிருக்கும் பட்சத்தில், சிறந்த முறையில் கல்வி பயின்றவர்களாகவும், அதே சமயத்தில் பயின்ற கல்வியைப் பிறர்க்குக் கற்பிக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

6. விவகாரம் தெரிந்தவர்களாகவும் இருக்க வேண்டும்.

7. நியாயமான முறையில் பணம் சம்பாதித்தவர்களாயிருக்க வேண்டும்.

8. தூய மனம் படைத்தவர்களாயிருக்க வேண்டும்.

யார் யார் தெரிந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியற்றவர்கள்?

1. ஏற்கனவே ஏதோ ஓர் உட்குழுவில் அங்கத்தினராயிருந்து சரியாகக் கணக்கு ஒப்புவிக்காதவர்கள்.

2. மேற்படியாருடைய உறவினர்கள்.

3. பஞ்சமாபாதகங்கள் என்று சொல்லப்படுபவைகளுள் கொலை, களவு, பொய், மதுபானம் ஆகிய குற்றங்களைச் செய்தவர்கள்.

4. மேற்படியாருடைய உறவினர்கள்.

5. மேற்படியாருடன் நெருங்கிய நட்புக் கொண்டவர்கள்.

6. அக்கிரமமான காரியங்களைச் செய்தற்காக ஜாதிக்கட்டு செய்யப்பட்டவர்கள்.

தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் பதவிக் காலம் ஒரு வருஷந்தான். இந்த ஒரு வருஷ காலத்திற்குள் தவறுகள் செய்துவிட்டால் அங்கத்தினர் பதவியினின்று விலக்கப்படுவர். விலக்கும் அதிகாரம் கிராம மகாஜன சபைக்கு இருந்தது. பதவி வகிப்பதற்காக ஊதியம் ஏதும் பெறுதல் கூடாது.

## தேர்தல் நடைபெற்ற முறை

இனி, தேர்தல் எப்படி நடைபெற்றதென்பதைப் பார்ப்போம். இது பற்றிய செய்திகளை, பற்பல இடங்களிலுள்ள கல்வெட்டுக்கள் லேசாகத் தெரிவிக்கின்றனவென்றாலும், செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த உத்திரமல்லூர் (உத்திரமேரூர்) கிராமத்திலுள்ள வைகுண்டப்பெருமாள் கோயிலில் காணக்கிடக்கும் கல்வெட்டுக்கள் விவரமாகத் தெரிவிக்கின்றன.

இந்த உத்திரமல்லூர் கல்வெட்டுக்கள் கி. பி. பத்தாவது நூற்றாண்டைச் சேர்ந்தவை, அதாவது ஆயிரம் வருஷங்களுக்கு முந்தியவை.

இந்தக் கல்வெட்டிக்களில், உத்திரமல்லூர் என்பது உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டிருக்கிறது. இதில் எல்லா வளங்களும் எல்லா வசதிகளும் நிரம்பியிருந்தன. இது முப்பது தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு தொகுதியிலுமுள்ளவர்கள், தேர்தல் நடைபெறுவதற்காகக் குறிப்பிடப் பெற்ற ஒரு நாளில் அந்தத் தொகுதியின் மையமான ஒரு பொது இடத்தில் கூடுவர். அந்த இடத்தில் வாய்ப்பக்கம் குறுகிய

துவார முடைய ஒரு பட்குடம் வைக்கப்பட்டிருக்கும். கூடியிருக்கிற ஒவ்வொருவருக்கும் ஒரு பனை ஓலைத் துண்டு (நறுக்கு) வழங்கப்படும். இதற்குக் குடவோலை என்று பெயர். தற்காலப் பாஷையில் ஓட்டுச் சீட்டு என்று சொல்லலாம். அதில் அவரவரும் அங்கத்தினராயிருப்பதற்குத் தகுதி படைத்தவர் என்று தங்கள் மனத்திற்குத் தோன்றுகிற ஒருவரின் பெயரை எழுதி மேற்படி குடத்திலிடுவர். இதற்குக் குடவோலையிடுதல் என்று பெயர். இப்படி எல்லோரும் வாக்குப்பதிவு செய்து குடத்திலிட்டபின்பு, அந்தக் குடம் நன்றாக மூடப்படும். அகன்றோடு தேர்தல் தொகுதியின் பெயர், வாக்குப் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை முதலிய விவரங்கள்டங்கிய ஒரு நறுக்கு இணைக்கப்படும்.

ஒவ்வொரு தொகுதியிலும் இந்த வாக்குப் பதிவை நடத்தி வைத்தது யார் என்பது தெரியவில்லை. அந்தந்தத் தொகுதியிலுள்ள ஒரு முக்கியஸ்தர் கையில் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதென்று நாம் கருதலாம்.

முப்பது தேர்தல் தொகுதிகளிலும் ஒரே நாளில் வாக்குப் பதிவு நடைபெற்று முடியும். பிறகு அன்றைய தினமோ மறுநாளோ, கிராம மகா ஜனங்கள் அனைவரும் வயதில் சிறியவர் பெரியவர் அனைவரும் ஓரிடத்தில் கூடுவர். இந்த இடம் பெரும்பாலும் கோயில் மண்டபமாக இருக்கும். அல்லது எல்லோருக்கும் பொதுவான ஓர் இடமாக இருக்கும். இந்தக் கூட்டத்திற்கு, கிராமத்துக் கோயில்களில் பூசைசெய்வோரில் (நம்பி மார்களில் யாரார் அன்றைய தினம் கிராமத்தில் இருக்கிறார்களோ) அவர்கள் அனைவரும் ஆஜராயிருப்பர். ஆஜராயிருக்க வேண்டியது கட்டாயம். இவர்கள் கூட்டத்தின் மத்தியில் அமர்ந்திருக்கும்படி செய்யப்படுவர்.

கூட்டத்திற்கு எல்லோரும் வந்துவிட்டார்களென்று தெரிந்ததும், முப்பது தேர்தல்தொகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட ஓலைகள் (ஓட்டுச் சீட்டுகள்) அடங்கிய முப்பது குடங்களும் கூட்டத்தின் மத்தியில் வைக்கப்படும். பிறகு ஆஜராயிருக்கும் நம்பிமாரில் மூத்தவரான ஒருவர் எழுந்து நின்று, ஒவ்வொரு குடமாக எடுத்து அனைவருக்கும் தெரியும் வண்ணம் உயரத் தூக்கிக்காட்டி விட்டுக் கீழே வைப்பார். இந்தக் குடங்களுக்குப் பக்கத்தில் மற்றொரு மட்குடம் காலியாக வாய் திறந்தபடி வைக்கப்பட்டிருக்கும். இது காலியாயுள்ளது. இதில் ஒன்றுமில்லையென்பதைக் கூட்டத்திலுள்ளவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக மேற்படி மூத்த நம்பியாரோ, வேறொரு நம்பியாரோ இதனை உயரத் தூக்கி தலைகீழாகக் கவிழ்த்துக் காட்டி விட்டுக் கீழே வைப்பார்.

அப்புறம் கூட்டத்தில் பிரசன்னமாயிருக்கும் விவரம்தெரியாத ஒரு சிறு பையனைக் கூப்பிட்டு, முப்பது குடங்களில் ஒன்றை வாய் திறக்கச்செய்து அதிலுள்ள நறுக்குகளை, காலியாக வைக்கப் பட்டிருக்கும் குடத்திலிடச் செய்வார். செய்ததும், குடத்தை நன்றாகக் குலுக்குவார். மேற்படி சிறு பையனைக் கொண்டு அதிலிருந்து ஓர் ஓலை நறுக்கை எடுக்கச் செய்வார். அவன் அப்படியே எடுத்து மத்தியஸ்தன் கையில் கொடுப்பான். மத்தியஸ்தன் என்பவன், கிராம உத்தியோகஸ்தர்களில் முக்கியமான ஒருவன்.

இந்த மத்தியஸ்தன் மேற்படி நறுக்கை (ஓட்டுச்சீட்டை) ஐந்து விரல்களையும் அகல வைத்து உள்ளங்கையிலே வாங்கிக் கொள்வான். வாங்கி நறுக்கிலுள்ள பெயரை உரக்கப்படிப்பான். பிறகு அதை, கூடியுள்ள நம்பிமார் ஒவ்வொருவரும் வாங்கிப் படிப்பார். இதற்குப்பிறகே நறுக்கில் பொறிக்கப் பட்டிருக்கும் பெயருள்ள நபர் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டு விட்டதாக எல்லோராலும் அங்கீகரிக்கப்படுவார். இதே முறையில், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வோர் அங்கத்தினர் வீதம் முப்பது தொகுதிகளுக்கும் முப்பது அங்கத்தினர் தெரிந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் மூன்று குழுவினராகப் பிரிந்து பணியாற்றினர். இந்த மூன்று குழுக்களைத் தவிர வேறு சில குழுக்களும் அவ்வப்பொழுது நியமிக்கப்பட்டனவென்றும், அவைகளும் மேற்சொன்ன விதமாகத் தேர்தல் நடைபெற்று அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்களென்றும் தெரிகின்றன.

இந்தத் தேர்தல் முறையே ஏறக்குறைய எல்லாப் பெரிய கிராமங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டது. தெரிந்தெடுக்கப் பெற்ற அங்கத்தினர்கள் பல்வேறு குழுவினராகப் பிரிந்து கிராம நிருவாகத்தை நடத்தி வந்தனர்.

—"கிராம நலம்"

---

பொறுமையையும் அகந்தையையும் விட்டுவிடுக. பிறர்க்காகக் கூடி உழைக்கக் கற்றுக்கொள். நமது நாட்டிற்குப் பெரிதும் அவசியமானது இதுவே.

'என்னைத் தொடாதே' என்பது உனது கொள்கையாகவும், பொங்கற்பானை உனது தெய்வமாகவும் இருக்கும்வரை ஞான முன்னேற்றம் உனக்குக் கைகூடாது.

—சுவாமி விவேகானந்தர்

# பண்டைத் தமிழரின் பயிற்று முறை

டி. வி. சிவசண்முகம், பி. ஏ., பி. டி,

பண்டைய நாளில் தமிழகம் பாருக்குள்ளே சிறந்து விளங்கக் காரணம் தமிழ் மக்கள் பெற்ற உயர் கல்வியே யாகும். "கல்வி சிறந்த தமிழ் நாடு" எனப்போற்றிப் புகழ்ந்த பாரதியார். கல்வி சிறக்கக் காரணம் அது பயிற்றப் பட்ட சிறந்த முறையே யாகும். இன்று தமிழகத்தின் கல்வி முறை பிற நாட்டு நல்லறிஞரும் போற்றும் வகையில் சிறப்புற அமைந்துள்ளது. துவக்கக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்வி ஈறாகத் தமிழகத்தில் அளிக்கப்படும் கல்விக்கு ஈடான கல்வி அளிக்கும் மாநிலங்கள் உலகத்திலேயே ஓரிரண்டுதான் எனத் துணிந்து கூறலாம். இந்த வளர்ச்சி இன்று நேற்று ஏற்பட்டதல்ல, பண்டைத் தமிழகத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட கால முதலே, பயிற்சிமுறை உயர்ந் தோங்கியிருந்தது.

## கட்டாயக் கல்வி

கல்வி அனைவருக்கும் உரியது. இன்று கட்டாயக் கல்வி திட்டம் தீட்டி கல்வியைப் பரப்புகின்றது. அரசு, கல்வி கற்காதவனுக்குத் தண்டனையும் வழங்கச் சட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

பண்டையநாளில் தமிழகத்தில் கட்டாயக் கல்வி முறை அமுலிலிருந்தது. பள்ளிக்குச் செல்லாதவருக்கும் இன்று அபராதம் விதிக்கப்படுவது போல பண்டும் தண்டனை வழங்கப்பட்டது. ஆயின் அவர்களின் தண்டனை வேறு விதமானது. அறிவுறுத்தியே மக்களின் மனதைத் திருத்திக் கட்டாயக் கல்வி அளித்தனர். "எண்ணும் எழுத்தும் வாழும் உயிர்க்குக் கண்கள்: ஆகவே கல்விகற்க; கல்லாதோன் முகத்திருவிப்பவைஇருபுண்களே யாகும்" எனக் கூறினார். கல்லான் நெஞ்சில் நில்லான் ஈசன்; ஆகவே "அவனருள் வேண்ட கல்வியைக் கற்க" என்றனர். ஒருமைக்கண் தான் கற்ற கல்வி எழுபிறப்புக்கும் ஏமாப்புடைத்து ஆகவே எழுபிறவியினும் உய்ய இன்றே கற்க; கல்விக்குரிய பருவம் இளமையே. ஆதலின் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளுவான்போல இளமைப்பருவத்தே "நூல் பல கல்" எனக் கூறி கட்டாயக் கல்வி முறையினை இன்சொலாலேயே அமுலாக்கிய பான்மை வியத்தற்குரியதன்றோ!

## இலவசக் கல்வி முறை

கட்டாயக் கல்வி அளித்தால் மட்டும் போதாது; அது ஏழை எளியவருக்குப் பயன்படவேண்டி இன்று இலவசக் கல்வி அளிக்கப் பெறுகின்றது. பண்டைய நாளி

லேயே தமிழர்தம் கல்விக் கூடங்களிலெல்லாம் இலவசக் கல்வியே அளிக்கப்பட்டது. கல்விக்கு விலை கொடுத்தல் பாதகம் எனக் கருதப்பட்டது. வயிற்றுக்கு உண்ண உணவின்றி ஈயென இரந்துண்ணும் பிச்சைக்காரனுக்கும்.

"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும்
கற்கை நன்றே" என அறிவுறுத்தி அழைத்து அவனுக்கும் இலவசக் கல்வி அளித்தனர்.

## கற்றோர் சிறப்பு

கல்வி கற்றோர் எழு பிறப்பிலும் உயர்வு பெறுவர். அவர்களுக்கு யாதும் நாடாம்; ஊராம். பாராளும் மன்னனைவிட கல்வி கற்றவனுக்கே சென்ற விடமெங்கும் சிறப்பு. ஈன்ற தாயும் கல்வி கற்றவனிடம் அதிக அன்பு செலுத்தினள். கல்வி கற்றவருக்கு இன்றும் அன்றும் அரசியலில் தனி பங்கு உண்டு. பட்டதாரிகளுக்கு (Consrihievey Graduahes) மேல் சட்டசபையில் (Legislatuve Council) தனித்தொகுதி ஒதுக்கப்பட்டது. பண்டைய போழ்தும் இதே போன்று கற்றறிந்தோருக்கு அரசியலில் தனிச்சிறபபு அளிக்கப் பட்டது. கற்றறிந்தாராலேயே உலகம் நடைபெற்றது. வயதில் மூத்தோனை வருக என்னாது அவருள் கல்விகற்ற அறிவுடையவனையே அரசன் வரவேற்று, அவன் அறிவுரைக்கு அடிபணிந்த செய்திகளை பண்டைய தமிழ் நூல்கள் செப்புகின்றன.

## கல்வி பயிற்றுவோர்.

கல்வியைக் கசடறக் கற்பிப்போர் ஆசிரியர் ஆவர். ஆசு என்றால் இருள் என்றும் இரியர் என்றால் போக்குபவர் என்றும் பொருள். இருள் நீக்கி ஒளி விளக்கம் தருபவரே ஆசிரியர்கள். ஆசிரியர்களுக்குச் சமூகத்தில் உயர்ந்த மதிப்பும் உண்டு. பாராளும் வேந்தனையும் இடித்துக்கூறி திருத்தும் உரிமை பண்டைய நாளில் ஆசிரியர்களுக்குமட்டுமே யிருந்தது. எழுத்தறிவித்தோர் இறைவன் எனப் போற்றப்பட்டனர்.

## ஆசிரியப் பயிற்சி

யார் வேண்டுமாயினும் ஆசிரியர் பணியினை ஏற்றல் இயலாது. ஆசிரியப் பணி ஏற்க உள்ளோருக்குக் தற்காலத்தில் தனிப் பயிற்சி (Training Course) அளிக்கப்பட்டு அப்பயிற்சியினை வெற்றிகரமாக முடித்தோரே ஆசிரியப் பணிக்கு அமர்த்தப்படுகின்றனர். இதுபோன்ற பயிற்சி முறை பண்டைய தமிழரிடையே வழக்கத்திலிருந்தது.

## பொதுக் கல்வி

ஆசிரியப் பயிற்சி வகுப்பில் சேர்த்துக் கொள்ளு முன்பு ஓரளவு குறைந்த பட்ச பொதுக் கல்வி படிப்பினை முடித்திருக்க வேண்டுமென்ற நியதி இன்றுள்ளது. அன்று

"குலன் அருள் தெய்வங்
கொள்கை மேன்மை
கலை பயில் தெளிவு கட்டுரை
வன்மை

நிலமலை நிறை கோல் மலர்
நிகர் மாட்சியும்"
உலகியல் அறிவோடு உயர்
குண மினையவும்

அமைந்தவனையே ஆசிரியப் பயிற்சி பெறுவதற்காகத் தேர்ந்தெடுத்தனர்.

## பயிற்சித் தேர்வில் தோல்வி

ஆசிரியப் பயிற்சி அளித்த பின்பு நடத்தப்பெறும் தேர்வினில் இன்னின்னார் ஆசிரியராகும் ஆற்றல் பெற்றிலரென தேர்வினில் கழிவு செய்யப்படுதல் (Failure in the examination) இன்றைய வழக்கம். இதே போன்று பண்டைய நாளிலும்

"மொழி குணமின்மையும்
இழிகுண வியல்பும்
அழுக்காறு அவா வஞ்சம்
அச்ச மாடலும்
கழற்குட மடற்பனை பருத்திக்
குண்டிகை
முடத் தெங்கொப்பன முரண்
கொள் சிந்தையும்
உடையோ ரிலராசிரியராகு
தலே" எனஒதுக்கப்பட்டனர்.

## பாட திட்டம்

தகுதியுடையொருவன் பொதுக்கல்வி கற்று, ஆசிரியப் பயிற்சி பெற்று முடித்த போதிலும் தன் விருப்பம் போல் பயிற்றுவிக்கும் உரிமை இன்றும் கிடையாது. கற்போர் தகுதியைக் கணித்துப் பாட திட்டம் வகுக்கப்பட்டு அத்திட்டத்தின் படியே பயிற்றல் நடைபெறுகின்றது. பண்டைய நாளிலும் இது போன்ற பாட திட்டம் வகுக்கப்பட்டு 'கொள்வோன் கொள்வகை அறிந்து' கற்பிக்கப்பட்டது.

## பயிற்றும் முறை

அளிக்கப்பட்ட பாட திட்டத்தினையும் பயிற்றும் முறையறிந்து பயிற்றுவித்தல்வேண்டும். இதற்கான பல்வேறு பயிற்றுமுறைகள் (Methods of teaching) இன்று வகுக்கப்பெற்றுள்ளது போன்று அன்றும்பயிற்றும் வகையறிந்து பயிற்றுவித்தனர்.

## உளநூல்

கல்வி கற்பிக்கும் ஆசிரியர் பயிலுவோரிடம் இனிது பழகி முகம்மலர்ந்துகல்விகற்பிக்கஅவர்களுக்குப் பயிற்சிக்காலத்தில் உளநூல் (Psychology) கல்வி அளிக்கப்படுகிறது. பண்டைய போழ்தும் "விழையான் வெகுளான் விரும்பி முகம் மலர்ந்து" கற்பித்தனர்.

## பாடக் குறிப்பு

பாட திட்டத்தின்படி பயிற்றுதல் நடத்து முன்பு ஆசிரியர்கள் பாடக் குறிப்பு (Teaching-notes) எழுத வேண்டுமென இன்று வற்புறுத்தப் படுகின்றது போல பண்டைய நாளிலும் முன் ஆயத்த நிலை இருந்தது.வகுப்பில் "உரைக்கப்படும் பொருள் உள்ளத் தமைத்து" ஆயத்தமாயினர்.

## காலப் பகுப்பு

நாள்தோறும் பள்ளியில் நடைபெறும் பயிற்றலுக்குக் 'காலப்

பகுப்பு' கொண்டு இறை வணக்கத்துடன் வகுப்புகள் தாவங்குவதும் இன்று நடைபெறும் வழக்கம் போன்று அந்நாளில் "காலமும் இடமும் வாலிதின் நோக்கி தன் தெய்வம் வாழ்த்தி" பயிற்றுவித்தனர்.

இவற்றை நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர்

"ஈதல் இயல்பேஇடம்புங்காலை
காலமும் இடமும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி யிருந்துதன்
தெய்வம் வாழ்த்தி
உரைக்கப்படும் பொருள்
உள்ளத்தமைத்து
விரையான் வெகுளான்
விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை
அறிந்து அவன் உளங்கொளக்
கோட்டமில் மனதில் நூல்
கொடுத்தலென்ப"

எனக் குறிப்பிடுகின்றார்.

**உயர் கல்வி**

பயிற்றுவிக்கும் முறை சிறந்திருந்ததாலும், பயிற்றுவோர் நிலை உயர்ந்திருந்தாலும் தமிழகத்தில் பண்டைய காலமுதலே கல்வி பெரிதும் வளர்ச்சியடைந்திருந்தது. கல்வி கற்றோர் பெரியர் ஆயினர்; கல்வி பயிற்றுவோர் இறைவன் ஆயினர். "பயிற்றுந் தொழிலைவிட புண்ணியத் தொழில் இப்பூமியில் இல்லை" எழுத்தறிவிக்கும்தொழிலின் சிறப்பினை எடுத்தியம்பும் பாரதியார் "கனிச் சோலைகள், தண்சுனைகள் ஆகியவை இயற்றலும், ஆயிரம் அன்ன சத்திரமும், பதினாயிரம் ஆலயங்களும், பின்னருள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கி ஒளிர நிறுத்துதல் அனைத்தையும் விட கோடிபங்கு புண்ணியங்களை ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தலில் பெறலாம்" எனக் குறிப்பிடுகின்றார். இந்த உயரிய புண்ணியத் தொழில் புரியும் ஆசிரியப் பெருமக்களைப் போற்றுவது அனைவரின் கடனன்றோ!

---

இரகசியமாகப் பிறரைக் குறைகூறுதல் பாவம் என்றறிக. நீ அதை முழுதும் நீக்கவேண்டாம். மனதில் பல நினைவுகள் எழலாம். ஆனால் அவற்றை வெளியிட முயல்வாயாயின், அது மெல்ல மெல்லக் காணியைக் கோடியாக்கும். மன்னித்து மறப்பாயாயின், எல்லாம் முடிந்துவிடும்.

—சுவாமி விவேகானந்தர்

# சென்னை பொதுக் கட்டிட (லைசென்சு) சட்டம் அமல்

## விதிகள் மீறப்பட்டால் லைசென்சு ரத்து செய்யப்படும்

1964ஆம் ஆண்டில் மதுரை சரஸ்வதி ஆரம்பப் பள்ளிக் கட்டிடம் திடீர்ச் சேதத்திற்குள்ளான தால் பல மாணவர்கள் உயிரிழக்கவும், காயமடையவும் நேரிட்டது. இதைத் தொடர்ந்து எல்லாப் பொதுக்கட்டிடங்களிலும் கட்டிட அமைப்புப் பலத்தை உறுதிப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் 1964-ம் ஆண்டு சென்னை பொதுக் கட்டிட (லைசென்சு) மசோதா 1964 அக்டோபர் 19ம் தேதி யன்று சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது. 1965-ம் ஆண்டு சென்னை பொதுக்கட்டிட (லைசென்சிங்) சட்டம் 1966 ஏப்ரல் 1-ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

மேற்படிச் சட்டத்தின் கீழ் விதிகள் வகுக்கப்பட்டு 1966 பிப்ரவரி 16ம் தேதி செயின்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட்டில் வெளியிடப்பட்டுள்ளன. டியூடோரியல் பள்ளி உட்பட பள்ளிகள், டியூடோரியல் கல்லூரி உட்பட கல்லூரிகள் பல்கலைக் கழகம், இதர கல்வி நிலையங்கள் ஆகியவற்றுக்கான கட்டிடங்கள், விடுதிக் கட்டிடங்கள், நூலகக் கட்டிடங்கள் மருத்துவ மனை, நர்சிங் ஹோம், மருந்தகம், கிளினிக், மருத்துவ நிலையம் ஆகியவற்றுக் கானகட்டிடங்கள் சாதாரணமாக பொதுக்கூட்டம், திருமண வைபவங்கள், விருந்துகள் நடைபெறும் கட்டிடங்கள் கிளப் அல்லது சங்கத்தின் கட்டிடங்கள், தங்கும் விடுதி, உணவுவிடுதி, சிற்றுண்டிச் சாலை ஆகியவை உள்ள கட்டிடங்கள், மதச் சார்புள்ள கட்டிடங்கள் ஆகியவை உள்ளிட்ட எல்லாப் பொதுக் கட்டிடங்களின் அமைப்பு பலத்தை உறுதி செய்வதும் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள அதிகாரிகள் கட்டிடங்களைப் பார்வையிட்ட பிறகு லைசென்சுகள் வழங்க ஏற்பாடு செய்வதும் இந்தச்சட்டத்தின் நோக்கங்களாகும்.

சட்டத்தின் அமுல் தேதியான 1966 ஏப்ரல் 1ம் தேதி அல்லது அதற்குப் பிறகு புதிதாக எந்தக் கட்டிடத்தையும் பொதுக்கட்டிடமாக லைசென்ஸ் இல்லாமல் உபயோகிக்கக் கூடாது. ஏற்கனவே இருந்த எந்தப் பொதுக் கட்டிடத்தையும் 1966 ஏப்ரல் 1ம் தேதி அல்லது அதற்குப் பிறகு லைசென்ஸ் இல்லாமல் பொதுக் கட்டிடமாக உபயோகிக்கக் கூடாது. கட்டிடச் சொந்தக் காரர் அல்லது கட்டிடத்தில் இருப்பவர் அல்லது குத்தகைக் காரர் ஒரு கட்டிடத்தை

பொதுக் கட்டிடமாக உபயோகிக்க விரும்பினுல் நிர்ணயிக்கப் பட்ட பாரத்தை உரியகட்டணம் செலுத்திப் பெற வேண்டும். அந்தப் பாரத்தைப் பூர்த்தி செய்து விதிகளில் குறிப்பிட்டுள்ள தகுதிகளை உடைய அதிகாரப்பூர்வமான என்ஜினியரிடமிருந்து பெற்றகட்டிட அமைப்பு உறுதிக்கான சான்றிதழையும் சேர்த்து உரிய அதிகாரியிடம் லைசென்சுக்காக அனுப்ப வேண்டும். ஏற்கனவே உள்ள பொதுக் கட்டிடத்தைப் பொதுக் கட்டிடமாக உபயோகிக்க விரும்பும் கட்டிடச் சொந்தக்காரர் சட்ட அமுல் தேதியிலிருந்து ஆறுமாத காலம் முடிவதற்குள்—அதாவது 1966 அக்டோபர் 1 ம் தேதிக்கு முன்பு-உரிய அதிகாரியிடம் அதே மாதிரி விண்ணப்பிக்க வேண்டும். லைசென்சு வழங்குவதற்கான அதிகாரி கட்டிடத்தைப் பார்வையிட்டுக் கட்டிடஅமைப்பு உறுதி பற்றித் திருப்தியடைந்த பிறகு லைசென்சு வழங்குவார்.

சென்னை நகரில் செயின்ட் ஜார்ஜ் கோட்டை உள்பட உள்ள எல்லாக்கட்டிடங்களுக்கும் சென்னைக் கலெக்டரின் அந்தரங்க உதவியாளர் இந்தச் சட்டம் சம்பந்தமான அதிகாரிஆவார். ரெவின்யூ டிவிஷனல் கன்டோன்மென்ட் அல்லது டவுன்ஷிப் கமிட்டி அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அல்லது மத்திய அரசாங்கம் அல்லது மாநில அரசாங்கத்தின் எல்லாக் கட்டிடங்களுக்கும் அந்தந்தப் பகுதி ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியும் தாலுகாவில் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியின் அதிகார வரம்புக்குட்பட்டவை தவிர மற்ற எல்லாக் கட்டிடங்களுக்கும் அந்தந்தப் பகுதி தாசில்தார்களும் உரிய அதிகாரிகள் ஆவர்.

## விண்ணப்ப கட்டணம்

கட்டிட அமைப்பு உறுதிச் சான்றிதழுடன் வரும் விண்ணப்பமானுல் ரூ. 50,000க்கு மேற்படாத மதிப்புள்ள கட்டிடங்கள் விஷயத்தில் விண்ணப்பக் கட்டணம் ரூ. 10 ஆகும். ரூ. 50,000க்கு மேற்பட்டும். ரூ. 2 லட்சத்திற்கு மேற்படாததுமான மதிப்புள்ள கட்டிடங்கள் விஷயத்தில் விண்ணப்பக்கட்டணம் ரூ. 25 ஆகும். ரூ. 2 லட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புள்ள கட்டிடங்கள் விஷயத்தில் விண்ணப்பக் கட்டணம் ரூ. 50 ஆகும். கட்டிட அமைப்பு உறுதிச் சான்றிதழ் இல்லாமல் வரும் விண்ணப்பமானுல் ரூ. 50,000க்கு மேற்படாத மதிப்புள்ள கட்டிடங்கள் விஷயத்தில் விண்ணப்பக் கட்டணம் ரூ. 20 ஆகும் ரூ. 50,000க்கு மேற்பட்டும் 2லட்சத்திற்கு மேற்படாததுமான மதிப்புள்ள கட்டிடங்கள் விஷயத்தில் விண்ணப்பக் கட்டணம் ரூ. 50 ஆகும். ரூ. 2 லட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புள்ள கட்டிடங்கள் விஷயத்தில் விண்ணப்பக்கட்டணம் ரூ. 100 ஆகும். முறையீடுகளானுல் ரூ. 50,000க்கு மேற்படாத மதிப்புடைய கட்டிடங்கள் விஷயத்தில் கட்டணம் ரூ. 10 ஆகும் ரூ. 50,000 மேற்பட்டும் ரூ. 2 லட்

சத்திற்கு மேற்படாததுமான மதிப்புள்ள கட்டிடங்கள் விஷயத்தில் கட்டணம் ரூ 25 ஆகும். ரூ. 2 லட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புடைய கட்டிடங்கள் விஷயத்தில் கட்டணம் ரூ. 50 ஆகும்.

ரூ. 50,000-க்கு மேற்படாத மதிப்புள்ள கட்டிடங்கள் விஷயத்தில் எஞ்சினியரிங் பட்டம் அல்லது டிப்ளமா பெற்ற எஞ்சினியர் ரூ. 50,000-க்கு மேற்பட்டும் ரூ. 2 லட்சத்திற்கு மேற்படாததுமான மதிப்புள்ள கட்டிடங்கள் விஷயத்தில் இந்தியப் பல்கலைக் கழகம் அல்லது வெளிநாட்டு பல்கலைக் கழகத்தில் சிவில் எஞ்சினியர் பட்டம் பெற்றவர். லண்டன் ஸ்ட்ரக்சுரல் என்ஜினீயர் நிலையம் லண்டன் சிவில் என்ஜினீயர்கள் நிலையம், அமெரிக்க சிவில் என்ஜினீயர்கள் சொசைட்டி போன்ற வெளிநாட்டு என்ஜினீயரிங் தொழில் சங்க உறுப்பினர், மற்றும் அப்போதைக்கப்போது தமிழக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் ஐந்தாண்டுகளுக்குக் குறைவில்லாத தொழில் அனுபவம் பெற்றிருந்தால் கட்டிட அமைப்பு உறுதிச் சான்றிதழ் வழங்கலாம். ரூ. 2 லட்சத்துக்கு மேற்பட்ட மதிப்புள்ள கட்டிடங்கள் விஷயத்தில் இந்தியப் பல்கலைக்கழகம் அல்லது வெளிநாட்டுப் பல்கலைக் கழகத்தில் சிவில் என்ஜினீயர் பட்டம் பெற்ற என்ஜினீயர் அல்லது இந்திய என்ஜினீயர்கள் நிலைய கார்ப்பொரேட் உறுப்பினர். அல்லது வெளிநாட்டு என்ஜினீயர்கள் நிலைய கார்ப்பொரேட் உறுப்பினர், பத்தாண்டுகளுக்குக் குறைவில்லாத தொழில் அனுபவம், அல்லது உயர் பட்டப்படிப்பும், ஐந்தாண்டுகள் தொழில் அனுபவம் உள்ள என்ஜினீயர் கட்டிட அமைப்பு உறுதிச் சான்றிதழ் வழங்கலாம்.

## லைசென்ஸ் செல்லும் காலம்

லைசென்சு மூன்று ஆண்டுகளுக்கு அல்லது லைசென்சு அதிகாரி லைசென்சில் குறிப்பிடும் குறுகிய காலத்திற்குச் செல்லுபடியாகும். ஏற்கெனவே உள்ள பொதுக் கட்டிடம் அல்லது மற்ற கட்டிடங்களுக்கான லைசென்சு விஷயத்தில் லைசென்சு உத்தரவுத் தேதியிலிருந்து லைசென்சுக் காலம் ஆரம்பமாகும். ஏற்கெனவே உள்ள கட்டிடங்களுக்காக உள்ள லைசென்சு விஷயத்தில் 1967 ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து லைசென்சு காலம் ஆரம்பமாகும். லைசென்சு அப்போதைக்கப் போது புதுப்பிக்க வேண்டும். லைசென்சுக் காலம் முடிவடைந்து மூன்று மாதத்திற்குள் மறு லைசென்சுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

## லைசென்ஸை ரத்து செய்ய அதிகாரம்

சட்டம் அல்லது விதிகள் புறக்கணிக்கப் பட்டிருந்தால், லைசென்சு அதிகாரி லைசென்சை ரத்து செய்யவும், நிறுத்தி வைக்கவும் அதிகாரம் பெற்றிருக்கிறார், திருத்தி அமைக்கப்பட்டவை, புதிதாகச் சேர்த்துக் கட்டப்பட்டவை விஷயத்தில் புதிதாக

லைசென்சுகள் பெறவேண்டும். முறையீடுகள் மறு பரிசீலனைகள் இருந்தால் சட்டவிதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் கால வரம்புக்குள் செய்ய வேண்டும். சென்னை நகரில் செயிண்ட் ஜார்ஜ் கோட்டை உட்பட எல்லா கட்டிடங்களுக்கும் சென்னை கலெக்டரும், ரெவின்யூமாவட்டங்களில் சம்பந்தப்பட்ட கலெக்டர்களும் அப்பெல்லேட் அதிகாரிகளாக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர். ரெவின்யூ போர்டு (நிலவருவாய்) மறு பரிசீலனை அதிகாரமுள்ளது. கிராம அபிவிருத்தி நல நிர்வாகத் துறை காரியதரிசி இந்த சட்டத்தை மீறுவோர்மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்றவர்.

## விலக்கு

கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள்முதலிய மதச்சார்புள்ள இடங்களிலுள்ள மூலஸ்தானங்களுக்குள் பார்வையிடும் அதிகாரிகள் செல்ல முடியாது. முதல் கட்டமாக மூன்றாண்டு காலத்திற்குக்கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள், குருத்துவார்கள் ஆகியவற்றுக்கும், 250 கன அடிக்குக் குறைவாக நிலப்பரப்புள்ள சங்கங்கள், கிளப்புகள் உபயோகப்படுத்தும் எல்லாக் கட்டிடங்களுக்கும் சொந்த வீடுகளில் டாக்டர்கள், நடத்தும் கிளினிக்குகளுக்கும் சட்ட விதிகளில் விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவை தவிர, எந்தக்கட்டிடத்திற்கும் விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. மாநில அரசாங்க, மத்திய அரசாங்கக் கட்டிடங்களுக்குக்கூட விதிவிலக்கு அளிக்கப்படவில்லை.

—“தினமணி”

நீ யார் என்பதை முதலில் அறிந்து கொள்; அப்போது நீ இறைவனை அறிந்தவன் ஆவாய். ‘நான்’ என்பவன் யார்? அச்சொல்லால் குறிக்கப்படுவது என் கையா, என் காலா, என் மாமிசமா, இரத்தமா, அல்லது என் உடலின் வேறு அங்கமா? நன்ருக எண்ணிப் பார். ‘நான்’ என்று கூறக்கூடிய ஒரு பொருள் இல்லை என்பதை நீ அறிவாய். வெண்காயத்தின் தோலை உரிக்க உரிக்க, தோலே தோன்றிக்கொண்டு இருக்கிறது; அதன் உள்ளே வேறு ஒன்றையும் பார்ப்பதில்லை. அப்படியே ‘நான்’ என்பதை விசாரிக்கத் தொடங்கினுல், முடிவில் அது ஒன்றுமற்ற நிலையில் நின்று மறையும். பின்னுல் முடிவில் எஞ்சி நிற்பது சின்னமாகிய சுத்த ஆத்மா ஆகும். ‘நான்’ என்பது அழிந்தால் பிரம்மம் தோன்றும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# தேன் துளிகள்

[மயிலன்]

சந்தோஷத்தை மின்னலாக்கி அனுபவிக்கவே பலர் பிரயத்தனப்படுகிறார்கள். அதை மூச்சுக் காற்றாக்கி, வளமாக வாழ விரும்புவோர் வெகு சிலரே.

இந்தக் கர்ம பூமியிலும் அன்பு ஒன்றினால் உந்தப்பட்டுச் செய்யப்படும் காரியங்களே பூரண மதிப்புடையவை. மற்றவற்றுக்கு அரையும் குறையுமான மதிப்புத்தான்.

மகிழ்ச்சியைக் கண்டு ரசித்து மகிழும் மகிழ்ச்சி, தெள்ளி வடித்த மகிழ்ச்சி, அதில் கள்ளமோ, கறையோ கிடையாது.

இரைச்சலான இந்த உலகத்தில் எத்தனையோ கலைகளோடு மௌனக் கலையையும் கற்றுக் கொள்வது நலம். வாழ்வின் பிற்பகுதியில் இந்தக் கலை உதவுவது போல் மற்றக் கலைகள் உதவமாட்டா.

மற்றச் சுமைகளை யெல்லாம் உதறிவிட்டு விடுதலை பெற்றுவிடலாம். நினைவுச் சுமையை நெஞ்சை விட்டு எவ்வாறு இறக்குவது?

அன்பைக் குறையிரந்து பெறுவதில் பெருமையும் இல்லை, அமைதியும் இல்லை.

விதையிலிருந்து செடி முளைப்பது போல, மனிதன் உள்ளேயிருந்து வளர வேண்டும். வெளி வளர்ச்சி அரைக் காசு பெறாது.

தெய்வ சிந்தனை யற்ற மானிட அறிவு கொலைக்கென்றே வடிக்கப் பெற்ற ஆயுதம் போன்றது.

அழகு கொழிக்கும் காட்சிகளைக் கண்டு ரசித்துச் சிரிப்பதற்கும் கோமாளித்தனத்தைக் கண்டு பொங்கிச் சிரிப்பதற்கும் எத்தனை வித்தியாசம்!

அதிகமான பண ஆசை பல "வித்தை"களைக் கற்றுக் கொடுத்துவிடும். ஆனால் இந்த வித்தைகளில் ஒன்று கூட நல்ல வாழ்க்கைக்கு உதவாது.

தான் மதிக்காத உபதேசத்தை ஊருக்கு வாரி வழங்குவது, நொண்டி தன் நொண்டல் நடையை நடனம் என்று கூறுவதை யொக்கும்.

பண நெருக்கடி என்றால், இருக்கிற பணத்தின் நெருக்கடியல்ல; இல்லாதபணத்தின் நெருக்கடி!

அன்பைச் செலுத்திவிட்டு, அதற்குக் கூலி எங்கே என்று கேட்பதைவிட நெஞ்சக் கொடுமை வேறொன்று கிடையாது.

"நல்வழி"

# அமெரிக்காவில் புத்தக வெளியீடு

**வி. பலராமன்**

(ஹிக்கின்பாதம்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டின் பொது நிர்வாகியான திரு. வி. பலராமன் அவர்கள் அமெரிக்காவில் நான்கு மாதங்கள் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு 1965-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இந்தியா திரும்பினர்.)

அமெரிக்காவில் புத்தக வெளியீடு சம்பந்தமாக நான் கண்ட அனுபவங்களை விளக்குமாறு வேண்டப்படுகிறது. நான் அங்குத் தங்கியிருந்தது நான்கு மாதங்கள்தான். இந்தக் குறுகிய கால அனுபவத்தில், அங்கு புத்தக வெளியீடு சம்பந்தமாக விரிவான விபரங்களைக் கொடுப்பது என்பது சாத்தியமல்ல.

புத்தக வெளியீட்டாளர்கள்கழகத்திற்கும், புத்தக விற்பனையாளர் சங்கத்திற்கும் இந்தியாவில் தலைவனாக இருப்பவன் என்ற முறையில், சென்ற ஆண்டு மே திங்கள்29ஆம்நாள் முதல் ஜூன் திங்கள் 6ஆம் நாள்வரை வாஷிங்டன் நகரில் நடைபெற்ற சர்வதேச புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் 17ஆவது பேரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டேன். இது மிகப் பெரும் புத்தக வெளியீட்டாளர்களைச் சந்திப்பதற்கும், அவர்களது பிரசுராலயங்களுக்கு விஜயம் செய்வதற்கும் எனக்குச் சிறந்த வாய்ப்பொன்றை வழங்கியது. உண்மையிலேயே அது மிகச் சிறந்ததொரு அனுபவம் ஆகும்.

தானாக இயங்கும் சகாப்தம் அச்சு வாகனத் தொழிலில் ஒரு பெரும் முத்திரையைப் பதித்திருக்கிறது. மின்விசை இயக்க முறைகளும் நவீன சாதன அமைப்பு முறைகளும் புத்தக உற்பத்தி வேகத்தை நாளுக்கு நாள் துரிதப்படுத்திக் கொண்டிருக்கின்றன. அச்சுக் கோப்பதிலிருந்து 'பாரம்'சேர்க்குவது வரை, அச்சிடுவதிலிருந்து, புத்தகமாக உருவாக்குவதுவரை அமெரிக்கப்புத்தக வெளியீட்டாளர்கள் மிகப் பெரிய சாதனைகள் புரிந்திருக்கின்றனர்.

புகைப்பட முறையில் அச்சுக் கோப்பது பயன்படுத்தப்பட்டு வருகிறது. கணக்கிடும் சாதனங்களும் கட்டுப்படுத்தும் கருவிகளும் அதில் நுணுக்கமாகப் பொருத்தப் பட்டிருக்கின்றன. பதிவு செய்யப்பட்ட நாடாவிலிருந்து பதிவான விஷயங்களை எழுத்தாக்கும் இயந்திரங்களுக்கு மாற்றும் சாதனங்களும், எழுத்தடுக்கும் இயந்திரங்களைக் கட்டுப்படுத்தி இயங்க வைப்பதற்காக காந்தப் பதிவு நாடாக்களும் பெரும் அளவில் அங்குப் பயன்படுத்தப் படுகின்றன. 'கத்தோடு' கிரணக் குழாய்வழியாகப்பதிவான தகவல்களை எழுத்தடுக்கும் இயந்திரங்

களுக்கு மாற்றும் முறையில் "டெலிவிஷன்" தத்துவத்தைப் பயன்படுத்துவதும் விரைவி லேயே அங்கு கையாளப்படலாம் என்று தோன்றுகிறது.

புத்தக உற்பத்தித் துறையில் பிரம்மாண்டமான ஒரு புரட்சி யிலே அங்கு உருவாகி வருகிறது.

மக்களும் கருவிகளும் ஒழுங் கான வகையில் முறையாக இயங் கும் போக்கு இன்று எங்கு பார்த் தாலும் பிரமாண்டமாக வளர்ந்து வருகிறது. முறைகள், வழிவகை கள், இயந்திரங்கள், சாதனங்கள், உற்பத்திப் பொருள்கள், குறிக் கோள்கள், அமைப்புகள் ஆகிய வற்றில், சுருக்கமாகச் சொல்லப் போனால், பிரசுரத்துறை முழு மையிலுமே சுருக்க முறைகள் அறிமுகப்படுத்தப் படுகின்றன. பல்வேறு வகைகளில் விபரமாக விளக்கவேண்டிய ஒரு விசேஷ மான தொழில் இது. ஆதலால் இந்த மலரில் ஒரு கட்டுரையின் மூலம் அதைப்பற்றி விளக்குவது என்பது முடியாத காரியம்.

சிக்கனமாக உற்பத்தியைப் பெருக்க வகை செய்யும் நுட்பங் கள் துரிதமாக முன்னேறி வரு கின்றன. பிரசுரத் தொழிலின் எல்லா மட்டங்களிலும் வேக மான மாற்றங்கள் மற்ற எல்லா வற்றிற்கும் சவால் விடுமளவுக்கு உருவாகிக் கொண்டிருக்கின் றன. இந்தப் புரட்சிகரமான மாறுதல் உணர்ச்சி, இந்திய பிர சுரத் தொழிலுக்கும் ஏற்பட வேண்டும் என நான் ஆசைப் படாமலிருக்க முடியுமா?

இயந்திர உதவியால் பைண் டிங் செய்யும் சாதனமும் புத்த கத் தொழிலுக்கு கிட்டியிருக் கிறது. கட்டுக்கோப்பான பைண் டிங் புத்தகங்களை இது உருவாக் குவதால், புத்தக விற்பனையிலும் ஒரு கவர்ச்சியை இது உண்டாக்கி யிருக்கிறது. புத்தகப் பிரசுரம், புத்தக விற்பனை சம்பந்தப்பட்ட நெடுந்தூரத் திட்டத்தை உற்று நோக்கும்போது, அது மிகவும் சிக்கலானதாக எனக்குத் தோன்றுகிறது. பல பெரிய நிபு ணர்களையும் அதிகாரிகளையும் சந் தித்தேன். சுவாரஸ்யமான விஷ யங்களைப் பற்றியும் நவீன அபி விருத்திகளைப் பற்றியும் அவர் களுடன் சம்பாஷித்தேன். உண் மையில் இந்த அபிவிருத்தி களெல்லாம் திட்டமிட்டுச் செய் யப்படுகிற அபிவிருத்திகளாத லால், அவை வெற்றியைக் கொண்டுவருகின்றன.

ஏராளமான பெரிய பிரச்சினை களைத் தீர்க்காமலே, வேலையைத் தொடங்குவது வெற்றியைத் தராது என்று நான் இங்கு வலி யுறுத்தத் தேவை இல்லை. முதலா ளியும், அதிகாரிகளும் ஊழியர் களும் தங்களுடைய பணித் துறைகளில் ஆழ்ந்து சிந்திக்கிறார் கள். அது உண்மையில் வேலையை முறையாக இயங்க வைக்கிறது. நான் கேட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும் பொழுது "ஒரு புத்தகத்தின் அமைப்பு எந்த அளவில் இருக்கவேண்டுமென் பதை மிகப் பெரிய நிபுணர் தான் தீர்மானிக்கிறார்! அவருடைய

தீர்மானம் எப்பொழுதுமே சரியாகத் தான் இருக்கும்'' என்று என் நண்பர் கூறினர். அடிக்கடி அதிகமான தவறுகளை இழைத்து விடுபவர், விரைவிலேயே தொழிலுக்கு அருகதை யற்றவராகி விடுவார். பிரசுரத்திலும் புத்தக விஷயங்களிலும் செல்லரித்த புத்தகங்களையும், விற்பனை செய்ய முடியாத புத்தகங்களையும் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அறிய விரும்பினேன். குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை, எல்லாக் கடைகளிலும் விற்க முடியாமல் தேங்கிக் கிடக்கும் புத்தகங்களையும், செல்லரித்த புத்தகங்களையும், ஒன்று சேர்த்து, 'கழிவு விலைக்குப் புத்தகங்களை விற்கும் வாரம்'' என்று அனுஷ்டிக்கப் படுகிற அந்த வாரத்தில் 50 சதவிகிதம் முதல் 95 சதவிகிதம் வரை விலையைக் குறைத்துப் புத்தகங்கள் விற்கப் படுகின்றன. அந்த வார இறுதியில், சனிக்கிழமையன்று மாலை விற்பனையாகாமல் மிஞ்சியிருக்கும் புத்தகங்களை யெல்லாம் மீண்டும் "காகிதக் கூழா"க்குவதற்கு அனுப்பி விடுகிறார்கள். இதை ஒரு பெரிய புத்தக விற்பனையாளரிடமிருந்து அறிந்தேன்.

சில நாளிதழ் காரியாலயங்களுக்கு நான் விஜயம் செய்தேன். தம்மால் பத்திரிகை விற்பனையை எப்படிப் பெருக்க முடிகிறது என்பதைப் பற்றி "மியாமி நியூஸ்" பத்திரிகை ஆசிரியர் திரு. பாக்ஸ் எனக்கு மிகவும் தெளிவாக விளக்கினார். ஒருவர் தமது பத்திரிகை சந்தாதாரராக ஆகிவிட்டால், என்றென்றும் அவர் தமது பத்திரிகையின் சந்தாதாரராகவே இருந்துவரச் செய்வதற்கு மிகவும் அக்கறை எடுக்கப்படுகிறது. மழைக் காலத்தில், பத்திரிகைகள் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக, ஒவ்வொரு பத்திரிகையும் நீர் ஊறாத உறைகளில் போடப்பட்டு சந்தாதாரர்களுக்கு வினியோகிக்கப் படுகின்றன. தங்களுடைய கணவன்மார்களை ஊக்குவித்து, பத்திரிகை விற்பனையைப் பெருகச் செய்வதற்காக, பத்திரிகை விற்பனையாளர்களின் மனைவிகளுக்கு கவர்ச்சிகரமான போனஸ்கள் வழங்கப்படுகின்றன. அங்கு பத்திரிகை விற்பனையாளர்களுக்கு இரண்டு அதிகாரிகள் இருப்பதை நீங்கள் காணலாம். ஒருவர் பத்திரிகை காரியாலயத்தில் இருக்கும். முதலாளி மற்றவர் தன் வீட்டில் இருக்கும் மனைவி. இந்த முறை பின்பற்றப் படுவதன் காரணமாக, தங்கள் கணவன்மார்கள் வேலையில் இருக்கும் பொழுது, அவர்களுக்கு தொல்லை கொடுக்காமல் மனைவிகள் ஒதுங்கி விடுகிறார்கள். இதனால் தாம் விரும்பும் பலன் கிடைத்து விடுகிறது என்று திரு பாக்ஸ் என்னிடம் கூறினர்.

## தொலைக் காட்சியும் கணித யந்திரமும்

ஆடியோ விசுவல் நிலையம், வின்ட்ஸே ஹோப்கின்ஸ் நிலையம் ஆகியவற்றிற்கு நான் சென்றேன். அங்கே, அப்பகுதியி

ளுள்ள பள்ளிக்கூடங்களில் கல்வி கற்றுக்கொடுக்க டெலிவிஷன் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. செயிண்ட் லூயிங் வட்டாரத்திலும் அதபோன்ற ஒரு நிலையம் இருக்கிறது. அங்கும் நான் சென்றேன். வெடியோ சாதனங்களை பாடசாலைகளுக்கு அனுப்பி அவற்றைத் திரும்பக் கொண்டுவந்து சேர்க்கும் தொல்லையில்லாமல், ஆயிரக் கணக்கான ஆசிரியர்களின் வேண்டுகோளை நிவர்த்தி செய்யும் வண்ணம் நூற்றுக்கணக்கான வெடியோ சாதனங்களின் சுற்றுச் சுழற்சியில் 'டெலிகாஸ்டிங்' செய்து அனுப்பும் நுட்பத்தை திரு. பால் ஆண்டர்க் கண்டு பிடித்திருக்கிறார். வருங்காலத்தில் கணக்கிடும் இயந்திரங்கள் தான் பிரதான அங்கம் வகிக்கும் என்று அவர் எண்ணுகிறார். வர்த்தகத் துறையில் இந்தக்கணக்கிடும் இயந்திரங்கள் பெருமளவு பயன்படுத்தப்படுகின்றன. முதன் முறையாக இந்த இயந்திரம் செயிண்ட் லூயிஸ் வட்டாரத்தைச் சேர்ந்த பாப்புலுஸ் கவுண்டியிலிருக்கும் விசாரணை நீதி மன்றத்தில் பயன்படுத்தப்பட்டது. கோர்ட் நடவடிக்கைகள் மற்ற சட்டம் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜிகள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு துவாரமிடப்பட்ட கார்டு முறையை டீன் ஆர் ஹெக்ஸ்லி என்னும் ஜட்ஜ் கண்டுபிடித்திருக்கிறார். இந்த துவாரமிடப்பட்ட கார்டு முறையில் விஷயங்கள் கார்டின் உள்ளே பதிவு செய்யப்படுகின்றன. அவற்றை படிப்பதும்கூட சுலபம்தான். கிடைக்கக்கூடிய புள்ளி விபரங்களும் வரையறையற்றவை யாகும். உதாரணமாக, கோர்ட் அமைப்பு முறையை அடியோடு மாற்ற வகை செய்யும் சட்டம் கொண்டு வருவது சம்பந்தமாக விரிவான பரிசீலனை செய்வதற்கு அனுமதி கிடைத்திருக்கிறது. இப்படி பரிசீலனை செய்ய அனுமதிப்பது இதற்கு முன்னர் இயலாத காரியமாக இருந்து வந்தது.

மற்ற விஜயங்களைத்தும், ஒவ்வொன்றும் விரிவாக விளக்க வேண்டியவைகளாதலால், அவற்றை இங்கே சுருக்கி எழுதுவது என்றால் இயலாத காரியம். இருந்தாலும் 'பெர்ரிமாஷன்' என்னும் மர்ம நாவல் புத்தகங்களின் ஆசிரியரான எர்லி ஸ்டான்லி கார்டனரின் இல்லத்திற்கு விஜயம் செய்தபோது எனக்கு ஏற்பட்ட உணர்ச்சியை வெளியிட்டு, இதை முடிக்க விரும்புகிறேன். லாஸ் ஏஞ்சல் நகரிலிருந்து 120 மைல் தொலைவில் உள்ள டேம் குலா எனுமிடத்தில் அவர் வசிக்கிறார். நான் அவரது வீட்டு வாசலில் இறங்கியதும் அவருடைய செயலாளர் ஜான் பெத்தல் என்னை வரவேற்று அழைத்துச் சென்று திரு. எர்லி ஸ்டான்லி கார்டனரையும் அவரது இரு சகோதரிகளையும் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். சற்றுநேரம் உரையாடிய பின் பகல் உணவு உண்டோம். உண்டு முடிந்ததும் திரு ஸ்டான்லி கார்டனர் தமது தொழிற்சாலை முழுவதையும்

எனக்குச் சுற்றிக் காண்பித்தார். வைத்தியம், சட்டம் மற்றும் பிற பொருள்கள் சம்பந்தப்பட்ட ஏராளமான புத்தகங்களைக் கொண்ட நூலகம் ஒன்று அவர் வைத்திருக்கிறார். நவீன சாதனங்கள் அனைத்தும் கொண்ட புகைப்படமெடுக்கும் ஸ்டூடியோ ஒன்றும் வைத்திருக்கிறார். தற்சமயம் அவர் தமது கதைகளை ஹாலிவுட்டில் திரைப்படம் எடுப்பதற்கும் டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் காட்டுவதற்கும் அதிகமான நேரத்தைச் செலவிட்டு வருகிறார். அவர் தமது கதைகளை முதலில் டேப் ரிக்கார்டரில் பதிவு செய்துகொள்கிறாரா என்று கேட்டபோது சில சமயங்களில் தாம்அப்படிச்செய்வதாகவும், ஆனால் பெரும்பாலும் கதையை எழுதி முடித்த பின்னரும், தமக்குத் திருப்தி ஏற்படாவிட்டால் அவற்றை மாற்றியும் திருத்தியும் எழுதுவதாகவும் அவர் கூறினார். இதைச் சொல்லும்பொழுது ஒரு ஆசிரியர் என்ற முறையில் தமக்கும் பிரசுரகர்த்தாக்களுக்குமிடையே ஏற்படும் சில சிக்கல்களையும் அவர் குறிப்பிட்டார். "வார்த்தை மூழ்கடித்த வழக்கு" என்னும் கதையை நான் முடித்தபோது தலைச் சலவைப் பொருளின் உபயோகத்தைப் பற்றியோ, அதன் தன்மையைப் பற்றியோ தமக்கு எதுவும் தெரியாததால் அந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருப்பதையொட்டி, கதையை பிரசுரிக்க பிரசுரகர்த்தா மறுத்துவிட்டார். அந்தத் "தலைச் சலவைப் பொருள்" அப்பொழுதுதான் பழக்கத்திற்கு வந்திருந்தது. ஆதலால் தம்முடைய ரசாயன தொழிற்சாலைக்கு அவர் பிரசுரகர்த்தாவை அழைத்துச் சென்று தாம் கூறியிருப்பதை நிரூபித்துக் காட்டவேண்டியிருந்தது.

அவர், பிறகு என்னை ஆயுதசாலைக்கு அழைத்துச் சென்றார். அவர் வேட்டைக்காரர் அல்ல என்பது எனக்குத் தெரியும். ஆனால் அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஏராளமான துப்பாக்கிகளைக் கண்டு நான் அதிர்ந்துவிட்டேன். அதைப்பற்றி அவரிடம் கேட்டபோது, தாம் ஒரு துப்பாக்கியை தம்முடைய கதையில் அறிமுகப்படுத்தும்பொழுது கடைக்குச் சென்று ஒரு துப்பாக்கியை விலைக்கு வாங்கி வந்து, அந்தத் துப்பாக்கி எப்படிச் செய்யப்பட்டது என்ன நம்பர் உள்ளது என்பதையெல்லாம் தம்முடைய கதையில் விபரமாகக் குறிப்பிடுவதாகவும், ஒரு கதையில் குறிப்பிடப்பட்ட துப்பாக்கி மறு கதையில் வருவதைத் தாம் விரும்புவதில்லை என்றும் கூறினார். அத்துடன் தாம் குறிப்பிட்ட அதே துப்பாக்கி ஏதேனும் ஒரு உண்மையான குற்றச் செயலில் ஈடுபடுத்தப்பட்டு அது தம்மையும் அந்தக் குற்றத்தில் சம்பந்தப்படுத்திவிடக் கூடாது என்பதற்காக, வாங்கி வரும் துப்பாக்கிகளையெல்லாம் வீட்டிலேயே வைத்துக்கொள்வதாகவும் கூறினார்.

—"புத்தக நண்பன்"

# திராவிட இலக்கியம்

[அ. ச. ஞானசம்பந்தன், எம். ஏ.,]

மிகப் பழைய நாளில் திராவிட இலக்கியம் என்று கூறினால் அது தமிழ் இலக்கியம் ஒன்றையே குறிக்கும். கிறிஸ்து நாதர் பிறப்பதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே தமிழில் இலக்கிய இலக்கணங்கள் நிறைந்திருந்தன. திராவிட மொழிகள் என்ற பெயருள் அடங்கும் ஏனைய கன்னடம் தெலுங்கு, மலையாளம் என்பவற்றில் இலக்கியம் மிகவும் பிற்பட்டே தோன்றியுள்ளது.

தமிழ் நீங்கலாக எஞ்சியுள்ள மூன்று மொழிகளில் கன்னட இலக்கியமே பழமையானது. இராட்டிர கூட மன்னன் நிருபதுங்கவர்மன் பெயரில் உள்ள 'கவிராஜமார்க்க' என்ற நூல்தான் இன்றுள்ள கன்னட இலக்கியத்தில் மிகப் பழமையானது. அதன் காலம் கி. பி. 814 முதல் 877-க்குள்ளாகும். இந்நூலின் முன்னரே பல நூல்கள் இருந்தன என்று இந்நூலால் அறியப்படினும் இன்று அவை கிடைக்கவில்லை.

தெலுங்கு மொழியைப்பொறுத்தமட்டில் நன்னயப்பட்டருடைய மகாபாரதம்தான் இன்று கிடைப்பவற்றுள் பழமையானது. இவருடைய காலம் கி. பி 1020.

மலையாளத்தின் பழைய இலக்கியங்களாக நாம் காண்பவை அனைத்தும் கி. பி. 14-ம் நூற்றாண்டுக்குரியவை.

## தொல்காப்பியம்

கி. மு. 4-ம் நூற்றாண்டுக்கும் முற்பட்டது என்று கருதப்படும் தொல்காப்பியம் தமிழ் மொழியில் இன்று கிடைக்கும் மிகப் பழைய நூலாகவுள்ளது. தொல்காப்பியம் போன்ற சிறந்த இலக்கணம் தோன்ற வேண்டுமாயின் அதற்குமுன்னர் பல நூற்றாண்டுகள் இலக்கியம் செறிந்திருக்கும் என்று கூறத்தேவை இல்லை. ஆனால், அவற்றில் ஒன்றேனும் இன்று நமக்குக் கிடைக்கவில்லை.

கிறிஸ்துவுக்குமுன் ஒன்றரை நூற்றாண்டு அளவில் தோன்றிய பல உதிரிப் பாடல்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுப் 'புறநானூறு' என்ற பெயரில் இன்று கிடைக்கின்றன. (இத் தொகுப்பினுள் இருக்கும் பாடல்களுள் கிறிஸ்துவுக்குப் பின் ஒரு நூற்றாண்டு வரை பாடப்பட்டனவும் அடங்கும். தமிழ்ப் பாடல்களுள் இதுவே மிகவும் பழமையானது என்று கூறலாம்.

இதனை அடுத்து அகத்திணை பற்றிய தொகுப்பு நூல்கள் பல தோன்றின. அகத்திணை என்பது காதல் பற்றியதாகும். அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பரிபாடல் என்பவை அகத்திணை நூல்களேயாம்.

இவற்றையன்றித் தனிப்பட்ட அரசர்கள்மேல் பாடப்பெற்ற நீண்டபாடல்கள் 'பத்துப்பாட்டு' என்ற தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றையே 'சங்க நூல்கள்' என்று இன்று கூறுகிறோம்.

சங்கநூல்களுள் சில தோன்றுவதற்கு முன்னர் இன்று உலகமெல்லாம் போற்றும் ஒப்பற்ற 'திருக்குறள்' தோன்றிவிட்டது. திருக்குறள் இரண்டாம் நூற்றாண்டின் முற் பகுதியாகலாம் என்றே கருதப்படுகிறது.

## காப்பியங்கள்

கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமும் அதனையடுத்து மணிமேகலையும் தோன்றின. இவற்றுள் சிலப்பதிகாரம் இன்று மலையாள் மொழி வழங்கும் சேர நாட்டில் பிறந்தது ஆதலின் அப்பொழுது அங்கும் தமிழ் மொழியே இருந்தது என்பது தெற்றென விளங்கும்.

கி. பி. மூன்றும் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரைத் தமிழ் நாட்டின் இருண்ட காலம் என்று கூறவேண்டும். இந் நான்கு நூற்றாண்டுகளிலும் 'உதயணன் கதை' என்ற ஒரு நூல் தவிர வேறு இலக்கியம் எதுவுமே தோன்றவில்லை. தமிழரல்லாத 'களப்பிரர்' என்ற கூட்டத்தார் தமிழ் நாடு முழுவதையும் கைப்பற்றி ஆட்சி செய்தனர். இவர்கள் தமிழரல்லராகலின் தமிழ் மொழியைப் போற்றவும் இல்லை. தமிழ் நாகரிகத்தைப் போற்றவுமில்லை. ஆதலால் தமிழ் நூல் எதுவும் தோன்றவுமில்லை)

## பொற்காலம்

கி. பி. ஏழாம நூற்றாண்டிலிருந்து 12ஆம் நூற்றாண்டுவரை தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் என்று கூறலாம். ஏழாம் நூற்றாண்டில்தான் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு, முதலாழ்வார் மூவர் என்பவர்கள் திகழ்ந்து சைவ, வைணவ இலக்கியங்களை இயற்றினர். எட்டாம் நூற்றாண்டில் நம்மாழ்வார், பெரியாழ்வார், கோதை முதலிய வைணவப் பெரியார்கள் தோன்றினர். இவர்களால் இலக்கியம் அடைந்த வளர்ச்சிக்கு ஓர் எல்லை இல்லை. இந்நூற்றாண்டின் இறுதியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரமும் ஒன்பதாம் நூற்றாண்டில் மேனாட்டவர்களும் கண்டு வியக்கும் திருவாசகமும் தோன்றலாயின. ஏனைய ஆழ்வார்களும் தமிழ் வளர்த்தது இக்கால எல்லையில்தான். ஏழு முதல் பத்து வரை உள்ள காலத்தைச் சமய இலக்கிய காலம் என்று கூறலாம். (உலகில் வேறு எந்த மொழியிலும் காணப்படுவதைக்காட்டிலும் "ஹீப்ரு" மொழியில்தான் பக்திப் பாடல்கள் அதிகம் என்பர். ஆனால், தமிழ் மொழியின் பாடல்களுடன் ஒப்பிடும்போது ஹீப்ரு மொழியிலும் மிகச் சிறிய அளவே பக்திப் பாடல்கள் உண்டு என்பது அறியப்படும். இவ்விடைப்பட்ட காலத்தில் தான் வளையாபதி, குண்டலகேசி, நீலகேசி முதலிய பிற சமய நூல்களும் தோன்றலாயின.

பத்தாம் நூற்றாண்டில் தான் விருத்தப்பாடலில் முதல் காப்பியம் தோன்றிற்று. அது சைன சமய காப்பியமாகிய சிந்தாமணியாகும். அதனையடுத்துப் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெரிய புராணம் என வழங்கும் திருத்தொண்டர் புராணமும் அந்நூற்றாண்டின் பிற்பகுதியில் இன்று பலராலும் அறிந்து போற்றப்படும் கம்பநாடருடைய இராமாயணமும் தோன்றலாயின. பெருங் காப்பியங்கள் என்ற இலக்கணம் அமைந்த இம்மூன்று நூல்களுடன் சிறிய நிகண்டுகளும் தோன்றின.

(இதுவரைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் சமய வேறுபாடு இன்றி இருப்பதைக் காணலாம். சைனர், பௌத்தர், சைவர், வைணவர் என்ற நான்கு சமயத்தாரும் வேறுபாடு கருதாமல் இலக்கிய வளர்ச்சியில் ஈடுபட்டனர்.) பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய கம்பநாடனுடைய பெருங் காப்பியமே தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இறுதியான கட்டம் என்று கூறி விடலாம். மேனாட்டார் கூறும் (Swan song) என்ற இறுதிப் பாடலைக் கம்பன் பாடினான் போலும்!

### சமய சாத்திரங்கள்

கம்பனின் பின்னர் 13, 14 ஆம் நூற்றாண்டுகள் சமய சாத்திரக் காலம் என்று கூறக்கூடியவை. சைவ சமய சாத்திரங்கள் 12-ம் இக்கால அளவில் தோன்றியவை. இவை நேரடியான இலக்கியம் என்ற பெயருக்கு முற்றிலும் ஏற்றவை அல்லவெனினும் அழகிய பாடல்களால் ஆனவை என்பது மறுக்க முடியாதது. (Creative literature) என்று மேனாட்டார் கூறும் படைப்பிலக்கியம் அல்ல இவை எனினும் தருக்கம், சாத்திரம், தத்துவம், இவற்றின் வளர்ச்சியை எடுத்து அறிவுறுத்துவனவாகும் இந்நூல்கள்.

இச் சாத்திர காலத்தின் பின்னர் மறுபடியும் இலக்கியம் வளர முயன்றது. எனினும் பழைய நிலையை அடையமுடியவேயில்லை. அதற்குரிய காரணங்கள் மிகப் பலவாகும். இதனை அடுத்த காலத்தைப் புராணகாலம் என்று கூறலாம். திருவிளையாடற்புராணம், கந்த புராணம், காஞ்சிப் புராணம் என்பவை இக்கால நூல்களில் முக்கியமானவை. இவற்றைஅடுத்து பிள்ளைத்தமிழ் தூது, உலா, கலம்பகம், குறவஞ்சி, நொண்டி நாடகம் என்பன பல்கின. என்றாலும் தமிழ் இலக்கிய வளர்ச்சி பழைய நிலையை அடை முடியவே இல்லை.

### உரை நடை இலக்கியம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் உரை இலக்கியம் வளரத் தொடங்கியது. பிரதாப முதலியார் சரித்திரம், வீரமாமுனிவர் எழுதிய பரமார்த்த குரு கதை என்பவை முதலாகப் பல உரை நடை நூல்களும் இரக்ஷண்ய யாத்ரீகம், தேம்பாவணி முதலிய

செய்யுள் இலக்கியமும் தோன்றின.

இருபதாம் நூற்றாண்டில் கவிதை உலகில் பாரதியார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாரதிதாசன் என்பவரின் முன்னணியில் இருப்பவர்கள். சிறுகதை மிகவும் செழித்து வருகின்ற காலம் இந்நூற்றாண்டு. சிறுகதைக்கு அடுத்தபடியில் நாவல் எனப்படும் புதினம் செழித்து வளருகின்றது. தமிழ் இலக்கிய வரலாற்றின் சுருக்கம் இதுவெனலாம்.

## கன்னடம்

அடுத்துள்ள கன்னட மொழியில் உள்ள இலக்கியங்களை நான்காகப் பிரிக்கலாம். 12-ம் நூற்றாண்டு வரை உள்ள இலக்கியங்கள் பெரும்பாலும் சைன சமயத் தொடர்புடையவை. மிகப்பழைய நூல்களும் மிகச் சிறந்த கன்னட நூல்களும் இத்தொகுப்புடன் அடங்கும். பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த மும்மணிகள் என்பவர்கள் பம்பா, பொன்னு, ரன்னு ஆகிய மூவருமாவார். பம்பாவால் இயற்றப் பெற்றவை சைன சமய முதல் தீர்த்தங்கரரைப் பற்றிய "ஆதி புராணம்" என்பதும் "பம்ப பாரதம்" என வழங்கும் "விக்ர மார்ஜுன விஜய" என்ற நூலுமாகும்.

பொன்னுவால் செய்யப்பட்டது சைன சமய நூலாகிய "சாந்தி புராணமாகும். வைசிய குலத்தவரான "ரன்னு" "ஆஜித புராணம்" 'கடயுத்த' என வழங்கப்படும் 'சாகஸ பீம விஜய' என்ற நூல்களை இயற்றினார். கி. பி. 1105 வாக்கில் 'அபிநவ பம்பா' என்பவர் 'பம்பா ராமாயணம்' என்ற நூலை எழுதினார். இவர் எழுதிய இராமாயணம் வால்மீகியின் கதையைத் தழுவியதாயினும் சைன ராமாயணம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்நூலில் சுக்ரீவன் அனுமான் என்பவர் குரங்குகள் அல்லர். மனிதர்களே. இதே போலப் பழைய பம்பா இயற்றிய பாரதமும் வியாச பாரதத்துடன் மாறுபட்டது.

துளு நாட்டினரான 'அபிநவ வாதி வித்யானந்தா சாள்வா' 'ரத்னகர வர்ணி' முதலியவர்களும் இலக்கியம் இயற்றினர்.

அடுத்துள்ளது வீர சைவ சமய இலக்கியமாகும். "கிரேயே பத்ம ராசா" பால்குரிய சோமா, முதலியவர்கள் திகழ்ந்தது இக்காலம். 12-ம் நூற்றாண்டு முதல் 16-ம் நூற்றாண்டு வரை இக்காலம். பசவபுராணம் இக்கால நூல்களிற் சிறந்தது.

16 முதல் 17 வரை வைணவ இலக்கிய காலம் எனலாம். தொரவே இராமாயணம், பாகவத புராணம் இயற்றியவர்களும் புரந்தரதாசர், கனகதாசர் என்பவர்களும் இக் கால இலக்கிய கர்த்தர்கள், 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் பட்டாகளங்க தேவாவும், ஷடாக்ஷர தேவாவும் லக்ஷ்மீசாவும் பெரிய இலக்கியம் இயற்றினர்.

19 ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் போல் கன்னட இலக்

இயம் பலமாறுதல்களை அடைந்து புதியமுறையில் வளரலாயிற்று.

## தெலுங்கு

தெலுங்கு மொழியில் அகப்படும் மிகப் பழைய இலக்கியம் நன்னய்யாவினுடைய மகா பாரதம். இதன் காலம் 11-ம் நூற்றுண்டு. நன்னய்யாவுக்குமுன்னர் தேசி என்ற பெயருடன் திராவிடத் தொடர்பை மிகுதியாக வுடைய தெலுங்கு இலக்கியம் இருந்து வந்தது. ஆனால், நன்னயப்பட்டருடன் மார்கி முறையில் வடமொழித் தொடர்பை மிகுதியாகப்பெற்று இலக்கியம் வளரலாயிற்று. நாளாவட்டத்தில் வட மொழித் தொடர்பின் செல்வாக்கில் தேசி இலக்கியமும் இப் புதிய இலக்கணத்தை மேற்கொள்ள வேண்டி நேரிட்டது. நன்னய்யாவுக்கு முற்பட்ட தேசி இலக்கியத்தில் லாலிபாடறு. மங்கள ஹாரத்தலு, ஜாவளிலு கள்ளுப்பாடறு என்பவை இருந்தன.

நன்னய்யாவுடன் 11-ம் நூற்றுண்டில் இருந்தவர் நாராயண பாட், 1220 முதல் 1300 வரை வாழ்ந்த பெருங் கவிஞர் திக்கண்ணு, இவர் நன்னய்யாவின் முற்றுப் பெறாத பாரதத்தை முடித்தார். 12ஆம் நூற்றுண்டின் "பிரதாபருத்திரனின்" "நீதி சாரமும்" 'நன்னிச்சோடு' என்ற ஆந்திர சோழனின் "குமார சம்பவமும்" தோன்றின. அதர்வண என்பவர் "த்ரிலிங்க சப்தானுசாஸன்" என்ற இலக்கண நூலை எழுதினர். 14ஆம் நூற்றுண்டில் "நச்சன சோமாவின்" உத்தரஹரி வம்ச, ஸ்ரீநாதாவின் நைஷதம் என்பவை சிறந்தவை. 15 ஆம் நூற்றுண்டில் 'போதனுவும்' அல்லசானி பெத்தண்ணுவும் சிறந்தனர். விஜயநகரத் தொடர்பால் மதுரை, தஞ்சை இவற்றிலும் பல புலவர் தெலுங்கில் சிறந்த இலக்கியம் செய்தனர். இவருள் தலைசிறந்தவர் தியாகராஜர்.

## மலையாளம்

இறுதியாக எஞ்சி நிற்பது மலையாளம். 14, 15 ஆம் நூற்றுண்டுகளில் மணிப்பிரவாள நடையில் மொழிப் பிரயோகங்களை அப்படியே பயன்படுத்திய இலக்கியத்தைக் காண்கிறோம். வடமொழிப் பாட்டிலக்கணந்தழுவி எழுந்த 'உண்ணி நீலி சந்தேசம்' 'கோக சந்தேசம்' இவையன்றி 'உண்ணிச் சிறுதேவி சரிதம்' 'உண்ணியாதி சரிதம்' 'உண்ணியச்சி சரிதம்', 'ராமாயண சம்பு' என்பவையும் வடமொழி இலக்கண முறையில் அமைந்தவையே. இதே காலத்தில் திராவிட அல்லது தமிழ் முறையை ஒட்டிப் 'பாட்டு' என்பதும் இருந்து வந்தது. 'ராம சரிதம் யுத்த காண்டம்' கண்ணசப் பணிக்கரின் ராமாயணம், பாரதம் பாகவதம் முதலியன திராவிட முறையில் அமைந்தவை.

செறுசேரி நம்பூத்ரியின் கிருஷ்ண பாட்டு என்பது சிறந்த மலையாளத்திற்கு எடுத்துக் காட்டாகும். பாட்டு என்பது எதுகை மோனைகளுடன்

# உலகின் துன்பம் போக்கும் 'கேர்' சங்கத்துக்கு வயது 20

கேர் என்பது துன்ப ஒழிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் யு. எஸ். தனியார் நிறுவனம். அதன் பணிகள் பல. அவற்றுள் ஒன்று இந்தியாவில் 12 மாநிலங்களில் 90 லட்சம் குழந்தைகளுக்கு உணவூட்ட உதவி செய்வதாகும். அதன் உலகமளாவிய பணி தொடங்கி சென்ற வாரம் 20 ஆண்டுகள் நிறைந்தன.

ஆந்திரப் பிரதேசம், குஜராத், கேரளம், மத்யப் பிரதேசம், தமிழகம், மகாராஷ்டிரம், மைசூர், ஒரிஸ்ஸா பஞ்சாப், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களிலேயுள்ள பள்ளிச் சிறார்களில் சராசரி கால்பங்குப் பேர் கேர் வழியாக மொத்தம் 11 கோடி ராத்தல் பால் தூள், 6 கோடி பத்து லட்சம் ராத்தல் புல்குர் (தயாரிக்கப்பெற்ற ஒரு கோதுமை உணவு) 5 கோடி 20 லட்சம் ராத்தல் கோதுமைஅவல், 4 கோடி 30 லட்சம் ராத்தல் சோள மாவு 2 கோடி 70 லட்சம் ராத்தல் தாவர எண்ணெய் முதலியவற்றைப் பெற்றனர்.

பள்ளி மத்திய உணவோடு கேர் கல்விக் கருவிகள் கொண்ட பைகளும் (இதுவரை 34,000) தோட்டக் கருவிகள் கொண்ட பைகளும் இந்தியப் பள்ளிக்கூடங்களுக்கு வழங்கியிருக்கிறது. பள்ளிப் பைகளில் கான்வாஸ் பை, ஒரு கரும் பலகை, பலப்பங்கள்,

---

தமிழ்ப் பாடல்போல் அமைந்தது. இப்பாடல்களில் வடமொழிச் சொற்கள் தத்பவமாகவே பயன்படும். 16-ஆம் நூற்றாண்டில் "துஞ்சத்து எழுத்தச்சன்" புதிய மலையாளத்தில் இராமாயணம், பாரதம் என்ற நூல்களை இயற்றினார். மணிப்பிரவாளமும் பாட்டு முறையும் கலந்துவடமொழியை அப்படியே தத்சமமாகப் பயன்படுத்தியதே புது மலையாளம்.

எழுத்தச்சனை அடுத்துக் கதகளி தோன்றிற்று. உண்ணாயி வாரியாரின் நள சரிதம் கதகளியின் சிறந்த இலக்கியம். நகைச்சுவையுடன் எள்ளல் சுவையுமுடைய 'துள்ளல்' என்ற இலக்கியத்தைப் படைத்த குஞ்சன் நம்பியாரும் இக்காலத்தவரேயாவர். 19 ஆம் நூற்றாண்டில் மீண்டும் அதிக வடமொழித் தொடர்புடைய நூல்களை வெண்மணி நம்பூத்ரி முதலியவர் இயற்றினர். 20 ஆம் நூற்றாண்டில் காந்திய வாசனை மிகுதியுமுடைய குமரன் ஆசான், கவிஞர் வள்ளத்தோல், உள்ளூர் பரமேஸ்வர ஐயர் முதலியவர் பெருந் தொண்டு செய்கின்றனர்.

—"தினமணி"

படம் வரையும் புத்தகம், நோட்டும் புத்தகங்கள், பென்சில் சீவும் கருவி முதலியன இருக்கின்றன.

தோட்டக் கருவிகள் பையில் பள்ளி முற்றத்தில் காய்கறித் தோட்டம போடுவதற்கு வேண்டிய பொருள்கள் இருக்கின்றன. விதை பொட்டலங்களும் இருக்கின்றன.

சென்ற 15 ஆண்டுகளாக கேர் இந்தியாவில் பணியாற்றி வருகையில், ஏழு லட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள மருந்துகளும் மருத்துவப் பொருள்கள் கருவிகளும் அன்பளிப்பாக வழங்கியிருக்கிறது. இவற்றிலே பிள்ளைப் பேறுக்கு உதவும் கருவிகள் கொண்டவைகளும், சுற்றி வரும் மோட்டார், உடல் நல யூனிட்டுகளும், எக்ஸ்ரே யூனிட்டுகளும், காசநோய் அறியும் யூனிட்டுகளும் ஊனமுற்றோருக்கு மறு வாழ்வு அளிப்பதற்கான கருவிகளும் அடங்கும்.

எல்லாவிடத்தும் துன்பம் துடைப்பதற்கான அமெரிக்கக் கூட்டுறவு நிலையம் என்பது கேர். 1945-ல் அது முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட போது போரினால் சீரழிந்த பிரதேசங்களுக்கு உணவும் துணியும் அனுப்ப உதவி செய்யும் நிறுவனமாகத்தான் இருந்தது. படிப்படியாக இது உலகம் நெடுகிலும் துன்பம் துடைக்கும் பொதுப் பணியை மேற்கொண்டது.

உலகம் நெடுகிலும் வெளி நாட்டு அரசாங்கங்கள் மிக உற்சாகத்துடன் தன்னுதவி, உணவூட்டும் திட்டங்களைக் கூட்டாகச் செய்து கொண்டன. இது ஒன்றே கேரின் மாபெரும் வெற்றிக்கு முக்கிய காரணம் என்கிறார் ஃபிராங்க் எல். கோஃபியோ, நிறுவனத்தின் நிர்வாக டைரக்டர்.

கோஃபியோ சென்ற வாரம் கேரின் ஆண்டு விழா சந்தர்ப்பத்தில் பேசும்போது சொன்னதாவது: "எங்களிடமிருக்கும் ஆயுதங்கள் எல்லாம் உணவும், உடல் நலனும் கல்வியுமாகும். பசி, அறியாமை, நோய் ஆகிய கொடுமையிலிருந்து எவ்வளவு உயிர்களைக் காப்பாற்ற முடியுமோ அவ்வளவு உயிர்களையும் காப்பாற்றுவது தான் எங்கள் இறுதி இலட்சியம் என்றார் அவர்.

வளரும் நாடுகளின் மக்களுக்கு உதவி செய்யும் வகையில் இது வரை 79 கோடி 80 லட்சம் டாலர் (ரூ 380 கோடி) மதிப்புள்ள பொருள் உதவி அளித்துள்ளது என்றார் கோஃபியோ.

வளரும் நாடுகள் தன்னிறைவு அடைகையில், தனக்கு வேலையில்லாமல் செய்துகொள்வதுதான் கேரின் நீண்ட கால லட்சியம் என்றார் கோஃபியோ.

# Association Publishing House

' ஆரம்பக் கல்வி நிலேயம் '

94/95, New Street, Mannady, Madras-1.

(For High Schools and Higher Ele. Schools)

Phone: 24544 Post Box No. 1818

## MATHEMATICS

ஆசிரியர் : பி. வீரராகவன்

**சிறுவர் கணக்கு நூல்**

| | புத்தகத்தின் விலே | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0·65 | | |
| மூன்றும் வகுப்பு | 0·87 | 37 | 18-5-'66 |

**புதுமுறை சங்கக் கணிதம்**

ஆசிரியர் : பி. வி. நாகராஜன், பி.ஏ., எல்.டி.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1·50 | 50 | 18-5-'66 |

ஆசிரியர் : A. C. பாலசுந்தரம், பி.ஏ., எல்.டி.

| | | | |
|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 1·75 | 13 | 16-5-'62 |

## SCIENCE

**இயற்கைப் பாடமும் தோட்ட வேலேயும்**

ஆசிரியர் : பி. வீரராகவன்

| | புத்தகத்தின் விலே | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0·40 | | |
| மூன்றும் வகுப்பு | 0·50 | | |

ஆசிரியர் : M. விவேகானந்தா பி.எஸ்சி., எல்.டி.,

| | | | |
|---|---|---|---|
| நான்காம் வகுப்பு | 0·75 | 6 | 18-5-'66 |

**சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்**

ஆசிரியர் : கே. லக்ஷ்மிநாராயணசாமி, பி.ஏ.. எல்.டி.

| | | | |
|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 1·25 | 9 | 18-5-66 |

**பொது விஞ்ஞானம்**

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1·25 | 25 | 18-5-'66 |

ஆசிரியர் : **பி. வி. நாகராஜன்,** பி.ஏ., எல்.டி.

| | | | |
|---|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு | 1·75 | 33 | 18-5-66 |
| பதினோராம் வகுப்பு | 2·50 | 35 | 10-5-'61 |

## HISTORY

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

**சிறுவர் வரலாறு**

| | |
|---|---|
| மூன்றும் வகுப்பு | 0·60 |

ஆசிரியர் : **த. சே. உமாபதி,** எம்.ஏ., எல்.டி.

**நான்காம் வகுப்பு**

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| சென்னை | 0·87 | 11 | 18-5-66 |
| செங்கற்பட்டு | 0·87 | 12 | 18-5-66 |
| வட ஆற்காடு | 0·87 | 12 | ,, |
| தென் ஆற்காடு | 0·87 | 12 | ,, |
| சேலம் | 0·87 | 12 | ,, |
| கோயமுத்தூர் | 0·87 | 12 | ,, |
| நீலகிரி | 0·87 | 12 | ,, |
| தஞ்சாவூர் | 0·87 | 12 | ,, |
| திருச்சி | 0·87 | 12 | ,, |
| மதுரை | 0·87 | 12 | ,, |
| இராமநாதபுரம் | 0·87 | 12 | ,, |
| திருநெல்வேலி | 0·87 | 12 | ,, |
| ஐந்தாம் வகுப்பு | 1·00 | 42 | ,, |
| ஆறும் வகுப்பு | 1·00 | 54 | ,, |

## SOCIAL STUDY

ஆசிரியர் : **த. சே. உமாபதி,** எம்.ஏ., எல்.டி.

| | | | |
|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 2·00 | 18 | 16-5-'62 |

## GEOGRAPHY

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

**மூன்றும் வகுப்பு**

**சிறுவர் பூகோளம்**

(சென்னை) 0·60

ஆசிரியர் : **த. சே. உமாபதி**, எம்.ஏ., எல்.டி.

**நான்காம் வகுப்பு**

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| சென்னை | *0·62* | *46* | *18-5-66* |
| செங்கற்பட்டு | *0·62* | *19* | ,, |
| வட ஆற்காடு | *0·62* | *18* | *18-5-66* |
| தென் ஆற்காடு | *0·62* | *18* | ,, |
| சேலம் | *0·62* | *19* | ,, |
| கோயமுத்தூர் | *0·62* | *19* | ,, |
| நீலகிரி | *0·62* | *19* | ,, |
| ஐந்தாம் வகுப்பு | *1·00* | *19* | *18-5 '66* |

## TAMIL GRAMMER

### இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர் : புலவர் **சொ. முருகேசனார்**

| | | | |
|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | *0·75* | *4* | *16-5-'62* |
| எட்டாம் வகுப்பு (III Form) | *0·75* | *4* | *10-5-'61* |

### இலக்கணம் கட்டுரை மொழிப் பயிற்சி

| | | | |
|---|---|---|---|
| புதிய பத்தாம் வகுப்பு | *1·25* | *11* | *18-5-'60* |
| புதிய பதினோராம் வகுப்பு | *1·50* | *31* | *10-5'-61* |

**ஐந்தாம் வகுப்பு**

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| நீதிக் கதைகள் | *0·50* | *17* | *18-5-60* |
| அறிவுக் கதைகள் | *0·50* | *15* | *18-5-60* |

## TAMIL NON-DETAILED

ஆறாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| அறிவுச் சுடர் | *0·62* | *22* | *18-5'-66* |

பத்தாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| நாடும் மக்களும் | *1·00* | *17* | *18-5-'60* |

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| தொண்டை நாட்டு மன்னர் | 1·00 | 19 | 18-5-'60 |
| பூம்புகார் | 0·87 | 16 | ,, |
| திரு. வி. க. | 0·87 | 32 | 13-5-'59 |

**ENGLISH NON-DETAILED**

Author : Mrs. Lucy Arul Raj

VI STANDARD

Mother India Supplementary Reader

| | | | |
|---|---|---|---|
| | 0·50 | 49 | 18-5-66 |

III Form

VIII STANDARD

Mother India Supplementary Reader

| | | | |
|---|---|---|---|
| | 0·62 | 24 | 10-5-'61 |

**கணிதம் கற்பிக்கும் முறை**

ஆசிரியர் : லீலா பார்த்தசாரதி, பி.ஏ., எல்.டி.

| | | | |
|---|---|---|---|
| | 2·00 | 2 | 5-7-'61 |

**சமூக பாடப் பயிற்சி நூல்**

ஆசிரியர் : ஆர். சேஷாத்திரி, பி.ஏ., பி.டி.

| | |
|---|---|
| எட்டாம் வகுப்பு | 1·00 |
| பத்தாம் வகுப்பு | 1·25 |
| பதினோராம் வகுப்பு | 1·50 |

**உமாபதி உரை நூல்**

| | |
|---|---|
| மூன்றும் வகுப்பு | 0·40 |
| நான்காம் வகுப்பு | 0·50 |
| ஐந்தாம் வகுப்பு | 0·60 |
| ஆறும் வகுப்பு | 1·00 |
| ஏழாம் வகுப்பு | 1·25 |

Association English Premier III Class 0·60

Association English guide IV Class 0·40 n.p.

**புது முறை சங்க வாய்பாடு**

100 பிரதிகள் 8·00

Edited Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.